HELLO MOBILE WORLD



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050



அறைவு 08 இயம் 10 October 04-10 , 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்



Kumar studio



Video & Photo
Album Making
kumarstudio@gmail.com
No.15 3rd Mile Post
Trincomalee
0779670030
0260205552


# 150 ஏக்கர் நிலம் பறிபோகுமா?



## "தென்னைமரவாடியில் உழுத நிலத்தில் பயிர் செய்யத் தடைகள்"



ஏக்கத்தில் மக்கள்

தமிழருக்கு உரித்தான சுமார் 150 ஏக்கர் காணிகளைப் பெரும்பான்மையினத்தவருக்கும் பங்கு கொடுக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

கிழக்கு மாகாணக் காணித் திணைக்கள அலுவலர்களால் இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் அவை தொடர்பான அறிவித்தலும் தென்னைமரவாடி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிகின்றது. ஐம்பது வருடங்களுக்கு மேற்பட்ட காணி அனுமதிப்பத்திரங்களைக் கொண்டுள்ள தமிழ் மக்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்திருந்த போது அவை 13



## சனாதிபதி திருகோணமலையில்?

(ஏ.எம்.கீத்) எதிர்வரும் 28ம் மற்றும் 29ம் திகதிகளில் இலங்கையின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்கள் திருகோணமலைக்கு வருகை தரவிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சனாதிபதியின் வருகையை முன்னிட்டு கிழக்கு மாகாண சபையால் முன்னெடுக்கப் பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 13

# கிழக்குப் பயணத்தில் நான் உளவு பார்க்கப்பட்டேன்

## -லோரா டேவிஸ்*-



கிழக்கில் தான் பயணித்தபோது "கண்காணிக்கப்" பட்டதாக இலங்கைக்கான பிரதி பிரிததானிய உயர்ஸ்தானிகர் தனது வலைப்பூவில் பதிவிட்டுள்ளார்.

இப்பதிவில் தான் கண்காணிக்கப்பட் முறையையும் தன்னோடு தொடர்பையும் சந்திப்பையும் ஏற்படுத்திய உள்ளூர்வாசிகள் எதிர்கொண்ட நெருக்கடிகளையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தான் சில பொது மக்களைச் சந்தித்துவிட்டுச் சென்ற பின்னர் அவர்களை வேறு சிலர் வந்து சந்தித்ததாகவும் அவர்களுக்கு தேவையற்ற தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தான் அறிந்ததாகவும் அவர் 13

# ஆர்ப்பாட்டத்தில் அரச அலுவலர்கள்

## அரச தாபனவிதிக் கோவையை மீறினார்களா?




### சர்வதேச ஊடகமொன்று கேள்வி???

திருகோணமலையில் மாவட்டச் செயலாளருக்கு எதிராக நடைபெற்ற மக்கள் ஆர்ப்பாட்டத்தை அடுத்து அவ்வார்ப்பாட்டத்திற்கு எதிராக திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலக அரச அலுவலர்கள் 13




VEAL BUSINESS COLLEGE
077 02 03 201
026 222 76 22
aat SRI LANKA



6000.00 for 6 Months



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை

malaimurasu@hotmail.com 075-4252042

## அஹிம்சை வழி தமிழரின் அறவழி

இந்தவாரம் நடைபெற்ற இரண்டு விடயங்கள் அஹிம்சை தொடர்பான முக்கிய சிந்தனைகளை எம்முள்ளே விதைத்திருக்கின்றன.

முதலாவது காந்தி ஜெயந்தி நிகழ்வுகள், இரண்டாவது அஹிம்சை வழி தொடர்பாக தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளராகத் தேர்வு பெற்றுள்ள கிழக்கு மாகாண சபையின் மட்டக்களப்பு உறுப்பினர் கி.துரைராஜசிங்கம் ஆற்றிய உரை ஆகியனவே அவை.

போரிட வேண்டிய சூழல் தமிழர்களுக்கு உள்ளதா? என்ற கேள்விக்கான பதில் என்னவோ ஆம் என்று தான் கிடைக்கின்றது. அந்த முடிவு தமிழர்கள் விரும்பியோ அல்லது விரும்பாமலோ அவர்கள் மீது திணிக்கப்பட்டே உள்ளது.

இந்த நிலையை மிகச் சரியாக முன்னாள் அரச நிர்வாக உயரதிகாரியும் சிறந்த சேவையாளருமான தேவநேசன் நேசையா அவர்கள் "புலிகள் அழிக்கப்பட்டிருக்கின்றார்களே தவிர 'போர்' இன்னும் ஓய்ந்துவிடவில்லை" எனத் தனது பத்தியொன்றில் அண்மையில் பதிவிட்டமை காட்டி நிற்கின்றது.

அதன் பாற்பட்டே தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ் மக்கள் போராட்டமொன்றில் குதிக்க வேண்டிய தேவையிருப்பதைச் சுட்டிக்காட்டித் தனது கன்னியுரையில் அதற்கான கெடுவையும் உரைத்துள்ளார்.

போரினை உரிய தரப்புடனான போர் எனவும் பின்புலச் சக்திகளுடனான போர் எனவும் வகுத்து நோக்கலாம்.

உரிய தரப்புடனான போர் ஆயுதப் போராகவும் அஹிம்சைப் போராகவும் மேலும் பிரிவுபட பின்புலச் சக்திகளுடனான போரை இராசதந்திரப் போர் எனப் பார்க்க முடியும்.

தமிழர்களின் ஆரம்பக்கட்ட அஹிம்சைப் போரின் முடிவினை தீர்மானித்துக் கொண்டவர்கள் எதிர்த்தரப்பினர் என்பதை யாரும் மறந்து விட முடியாது. அஹிம்சைப் போர் ஆரம்பிக்கப்படவுடனேயே அதனை ஆயுதப் போருக்குத் தடம் மாற்றும் முயற்சிகளில் அன்றைய எதிரணியினர் ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்டனர். ஏனெனில் அஹிம்சைப் போரைத் தொடரவிட்டால் அப்போர் தனது வெற்றியை அடைந்து விடும் என்பதை எதிர் தரப்பிற்கு வின்சன் சேர்ச்சில் என்ற இங்கிலாந்து பிரதம மந்திரியின் கூற்று தெளிவு படுத்தியிருந்தது.

சேர்ச்சில் இந்தியச் சுதந்திரத்தின் போது தெரிவித்த கருத்தானது மஹாத்மா ஆயுதப் போரைத் தொடுத்திருந்தால் நான் அதனை மிகச்சொற்ப நாட்களில் முறியடித்திருப்பேன், ஆனால் காந்தி அஹிம்சைப் போரையல்லவா தொடர்ந்து விட்டார் என்று தெரிவித்திருந்தார் என தமிழரசுக் கட்சியின் செயலாளர் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

இன்று தமிழினம் எங்கு தனது போரைத் தொடங்கியதோ அதே நிலைக்கு திரும்ப வந்துள்ளது. ஆனால் முதலில் தொடங்கிய போது ஆயுதப் போர் தொடர்பான அறிவும் அனுபவமும் போதுமானதாக இல்லை. இன்று பல்லாண்டுகாலப் போரியல் அனுபவம், பலமான இராசதந்திரப் போரியல் அனுபவம் ஆகியவற்றுடன் அஹிம்சைப் போரைத் தொடங்கும் காலம் கனிந்துள்ளது.

அஹிம்சை வழிப் போரே தமிழரின் அறவழிப் போர். ஏனெனில் பயங்கரவாதத்திற்கு எதிரான போருக்கு இந்தியாவும் கடந்தவாரம் தனது உறுதியான ஒத்துழைப்பை அமெரிக்க இஸ்ரேலியக் கூட்டுக்கு வழங்க முன்வந்து விட்டது. இனி ஆயுதப் போரென்பது எச்சந்தர்ப்பத்திலும் பயங்கரவாதப் போராகவே பார்க்கப்படும் என்பதிலும் சந்தேகமில்லை.

அறவழிப்போரின் முடிவைத் தெரிந்திருக்கும் அரசு இனியாவது சிந்திக்கத் தலைப்படுமா?

## "கங்குவேலியில் பழமையான விகாரை"

### ஆர்ப்பாட்டக்காரரின் கூற்றுக்கு மாவட்டச் செயலாளர் கடும் அதிருப்தி



திருகோணமலையில் நடைபெற்ற அரசாங்க அதிபருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் போது வரலாற்றுப் புகழ் மிக்க கங்குவேலி சிவன் ஆலயத்தில் பழைமையான விகாரையொன்று இருந்ததாகவும் அதனை அரசாங்க அதிபர் கனரக இயந்திரங்களால் இடித்தளித்தாகவும் கூறப்பட்ட சுலோகங்கள் தொடர்பாக இந்து அமைப்புக்கள் தமது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக மூதூர் இந்துக் குருமார் சங்கத்தின் தலைவர் சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் அவர்களிடம் வினவிய போது இக்கூற்று வரலாற்றுத் தகவல்களுக்கும் உண்மைக்கும் புறம்பானது எனத் தெரிவித்ததுடன் அப்படியொரு விகாரை அந்தப்பிரதேசத்திலேயே இருக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

தெஹிவத்தையிலுள்ள விகாராதிபதி கங்குவேலி சிவாலயச் சூழலில் விகாரையிருந்ததாக உண்மைக்குப் புறம்பான தகவலை அடிக்கடி வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக லக்பிம செய்தித்தாளுக்குச் செவ்வியளித்துள்ள மாவட்டச் செயலாளர் ரி.ரி.ஆர்.டி.சில்வா கங்குவேலி சிவாலயச் சூழலில் விகாரை இருந்ததாகத் தெரிவிப்பதும் அதனை டோசர் போட்டு அழித்தாக ஆர்ப்பாட்டக்காரர் தெரிவிப்பதும் பொய்யான பிரச்சாரங்களே எனத் தெரிவித்ததுடன் அவ்விடத்தில் வரலாற்றுப் புகழ்மிக்க இந்து ஆலயமொன்று இருந்ததாக படைவரைவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். அத்துடன் அந்த இடத்தைச் செப்பனிடுவதற்காக தொல்பொருட் திணைக்களத்தின் அனுமதியுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 53 கிராம சேவையாளருக்கு நிரந்தர நியமனம்

திருகோணமலை மாவட்டத்தில் 53 கிராம உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப் பட்டவர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான நிகழ்வு கடந்த 29ம் திகதி திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

அத்துடன், மேலும் 11 பேருக்கு தற்காலிக நியமனம் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

## ரஜீவ விஜேசிங்க திருகோணமலையில்

சமூக நல்லிணக்கம் தொடர்பான கூட்டமொன்றில் கலந்து கொள்ளவென சனாதிபதியின் நல்லிணக்கத்திற்கான சனாதிபதி ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க வருகை தந்திருந்தார்.

கடந்த 30ம் திகதி திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலாளர் ச.ஜலதீபன் தலைமையில் அங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் உரையாற்றியுள்ளார்.

அக்கூட்டத்தில் பிரதேசச் செயலக அலுவலர்கள், சர்வமதத்தலைவர்கள், சிறுவர் மற்றும் மகளிர் காவல்துறை அதிகாரிகள் போன்றோர் கலந்த கொண்டுள்ளனர்.

## பாலையூற்று லூர்து அன்னை திருத்தலத்தில் சிறுவர் விழா

எதிர்வரும் 5ம் திகதி பாலையூற்று லூர்து அன்னை திருத்தலத்தில சிறுவர் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடும் ஏற்பாடுகள் நடைபெறுவதாக பங்குத்தந்தை வண. மதுராங்கன் குரூஸ் அவர்கள் தெரிவித்தார்.

அன்று காலை 6.30 மணிக்கு திருப்பலி பூசையுடன் ஆரம்பமாகும் விழாவின் காலை நிகழ்வுகளாக மரதனோட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்போட்டியில் மூன்று பிரிவுகளாக ஆண் மற்றும் பெண் போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மாலையில் 3.30 மணியளவில் ஆரம்பமாகும் அடுத்தகட்ட நிகழ்வுகளில் வேடிக்கை வினோத நிகழ்வுகளும் சமயம் சாராக் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

உதவிப் பங்குத்தந்தை வண.அன்ரூஸ் ஸ்ரீபன் அவர்களும் மறைமாவட்ட ஆசிரியர்களும் பெற்றோர்களும் பங்கேற்று நடாத்தவுள்ள இந்நிகழ்வில் பங்குத்தந்தையின் அழைப்பின்பேரில் மலைமுரசின் ஆசிரியரும் மாலை நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளார்.

## 08ம் திகதி நிலவு சிவக்கும்

எதிர்வரும் 8ஆம் திகதி பௌர்ணமி தினத்தன்று பூரண சந்திரக்கிரகணம் நிலவுவதால் சிவந்த நிறத்திலான நிலவை காணக்கூடியதாக இருக்கும் என்று வானவியல் நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

இருப்பினும், இந்த சந்திர கிரகணத்தை இலங்கையில் முழுமையாக காணக் கிடைக்காது என்றும் சந்திரக் கிரகணத்தின் இறுதிக் கட்டத்தை மாத்திரம் மாலை நேரத்தில் இலங்கையில் காணலாம் என்றும் வானவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர் சந்திரக்கிரணகம் காரணமாக, பௌர்ணமி தினத்தன்று இரவு சிவந்த நிலவைக் காணலாம் என்றும் இதற்கு "ரெட் மூன்" என்று பெயரிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்

## பாரதிபுரத்தில் உலக சிறுவர் தினம் - பாரதி விதவைகள் சங்கம் கிராம அபிவிருத்திச் சங்கம் மலைமுரசு இணைந்து நடாத்தியது

நாங்கள் எல்லோரும் முத்துக்கள் தேசத்தின் சொத்துக்கள் என்ற தொனிப்பொருளுடன் பாரதிபுரம் கிராமத்தில் உலக சிறுவர் தினத்தில் சிறுவர்கள் விழா கொண்டாடப்பட்டது.

சுமார் 45 சிறுவர்கள் கலந்துகொண்ட இவ்விழாவினை பாரதி விதவைகள் சங்கத் தலைவர் அழகுதுரை சந்திரமலர் தலைமையேற்று நடாத்தினார்.

நிகழ்வின் பிரதம விருந்தினரான மூதூர் பிரதேச சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர் சிறுவர் உரிமைகள் தொடர்பாக தெளிவான விளக்கங்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் இந்துக் குருமார் சங்கத்தலைவருமான சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் தனது சிறப்புரையில் இலவசக் கல்வி என்பது எழுத்தில் தான் உள்ளதோ என எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் பாரதிபுரம் பாடசாலையில் முதலாம் ஆண்டுக்குச் சேரும் போது கதிரைமேசைக்குப் பணம் செலுத்தியே சேர வேண்டியுள்ளது. அவ்வளவு வளப்பற்றாக்குறையை அரச பாடசாலை எதிர்கொண்டுள்ளது. எமது ஆரம்ப பாடசாலையும் கடும் தடைகளை எதிர்கொண்டுள்ளது. இத்தடைகளை மீறி கல்வி கற்று பெரியவர்களாக வரவேண்டும் என மாணவர்களைப் பாராட்டினார்.

இவ்விழாவில் மலைமுரசின் நிதிப்பங்களிப்பில் வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்களும் அப்பியாசக் கொப்பிகளும் மாணவரிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதான பார்வை

## the Sunday Times

### சீனப்படகுகள் மீன்பிடி சட்டதிட்டங்களை மீறின!

### இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத் தடை :



சர்வதேசத்தால் தடை செய்யப்பட்ட சட்ட விரோத மீன்பிடி முறைகளைக் கையாளும் சீன மீன்பிடிப்படகு களால் இலங்கைக்கு ஐரோப்பிய யூனியன் மேலும் மூன்று மாத அவகாசமொன்றை வழங்கியுள்ளது.

இலங்கைக் கொடியுடன் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சீனப்படகுகள் சர்வதேச மீன்பிடி நடவடிக்கைகளை முன்னெடுப்பதாலேயே இந்நிலை தோன்றியுள்ளது. இலங்கையின் மீன்பிடித்துறைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் இச் செயற்பாட்டை அடுத்து ஐரோப்பிய ஒன்றியம் எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை மீன்பிடிச்சட்ட ஒழுங்குவிதிகளுக்குள் வருவதற்கு இலங்கைக்கு கால அவகாசத்தை வழங்கியுள்ளது.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்காத அரசாக இலங்கை இனங்காணப்பட்ட பின்னர் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையை நெருக்கமாக கண்காணித்து வருவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் கீழ் இயங்கும் கடலோடல் மட்டும் மீன்வளத்துறை ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

### 300 அலகுகளுக்குக் குறைவானவருக்கே 25% குறைப்பு

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மாதமொன்றுக்கு 300 அலகுகளுக்குக் குறைவாகப் பாவிப் பவருக்கே அரசினால் அறிவிக்கப்பட்ட 25% மின்கட்டணக் குறைப்பு வழங்கப்படும் என இலங்கை மின்சார சபை தீர்மானிதுள்ளது.

இந் நடவடிக்கையால் மின்சாரத்தை நுகரும் சராசரிப் பாவனையாளர்களே நன்மை அடையவுள்ளனர். செப்டம்பர் 16ம் திகதி முதல் 25% கழிவு வழங்கப்படவுள்ளது. இக் கழிவை மின்சாரத்தைப் பெருமளவில் நுகரும் வாடிக்கையாளருக்கு வழங்கினால் அவர்களே பெருமளவு நன்மையைப் பெற்றுக் கொள்வர் என்பதாலேயே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாம்.

### மிஹினில் வாங்கினால் ஸ்ரீலங்கனில் பறக்கலாம்.



இலங்கையின் இரண்டாவது விமான சேவையான மிஹின் லங்காவில் பயணசீட்டைப் பெற்றுக் கொண்டால் ஸ்ரீலங்கன் விமான சேவையில் பறக்கும் வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றதாம். பெரு நட்டத்தில் இயங்கும் மிஹின்லங்காவைக் காப்பாற்ற ஏற்கனவே நட்டத்தில் இயங்கும் ஸ்ரீலங்கன் விமான சேவை இவ்வாறு செய்கின்றதாம்.

### நிலம் மீள ஒப்படைக்கப்பட்டாலும் நிபந்தனைகள் பல விதிக்கப்பட்டுள்ளன.



கேப்பாபுலவு பிரதேசத்தில் 240 ஏக்கர் நிலத்தினை மீளக் கையளித்த 37 குடும்பங்களுக்கு வான்படை அதிகாரிகள் சில நிபந்தனைகளை விதித்துள்ளனர். அந் நிபந்தனைகளைக் கடிதமாக எழுதியுள்ள வான்படை அக்கடிதத்தில் ஒப்பமிட்டாலே காணிகளைத் தர முடியும் எனத் தெரிவித்துள்ளனர்.

அந் நிபந்தனைகளில் முக்கியமாக உள்நாட்டு யுத்தமொன்று ஏற்பட்டால் அக் காணிகளை தாமாகவே வான்படையிடம் தந்துவிட்டுச் செல்ல வேண்டும். நிரந்தரக் கட்டிடங்களை அமைக்கக் கூடாது, பெரிய நீண்ட கால பயன்தரும் மரங்களை நடக்கூடாது போன்றனவே இந் நிபந்தனைகளுள் முக்கியமானவை ஆகும்.

ஒப்பமிடுபவர்களுக்கு மட்டுமே நிலம் திருப்பித் தரப்படும் என்பதால் பலர் ஏற்றுக்கொண்டு ஒப்பமிட்ட போதும் வயதான பெண் ஒருவர் இவ்வாறு செய்ய மறுத்துவிட்டார்.

### இலத்திரனியல் அஞ்சலால் பதவி பறிக்கப்பட்ட உயர் அலுவலர்கள்



வெளிவிவகார விடயங்களைக் கையாளும் மேற்பார்வை அமைச்சர் சஜின் வாஸ் குணவர்த்தனவை சங்கடத்தில் ஆழ்த்தியுள்ள இலத்திரனியல் அஞ்சலால் இரண்டு உயர்நிலை அலுவலர்கள் உட்பட சிலரின் பதவி உடனடியாகப் பறிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் அலுவலக மேசை கதிரையற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சின் பொருளாதார நலன் அமைச்சின் பணிப்பாளரான அம்ஷா மற்றும் சார்க் செயலக உயரதிகாரியான பிரசன்ன கமகே ஆகியோரே அலுவலகக் கதிரையின்றி வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். காலையிலும், மாலையிலும் அலுவலகத்திற்கு வந்து கையெழுத்திட்டு விட்டுச் செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

## Ceylon Today

### மனிதரை விட ஆடு கோழிகளைப் பற்றிப் பேசும் ஆணைக்குழு

காணாமற் போனோர் தொடர்பாக ஆராயும் அரசினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு முறைப்பாடுகளைத் தெரிவிக்க வருபவரிடம் கோழி இருக்கிறதா? ஆடுகள் தரப்படுமா? எனக் கேள்வி கேட்டு ஆணைக்குழுவையே கேலிக்கு உள்ளாக்குவதாக வட மாகாண சபை உறுப்பினர் ரவிஹரன் தெரிவித்துள்ளார். முள்ளிவாய்க்காலில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் நுழைந்த ஆயிரக் கணக்கானவர்கள் இராணுவத்திடமே சரணடைந்தனர். அவர்கள் காணாமற் போயுள்ளனர் எனில் அதற்கு யார் பொறுப்பு? என ரவிஹரன் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

### இளைஞர்களுக்கு தெரியவராத உதவிகள்

தேவையற்ற கர்ப்பத்தையும் கருச்சிதைவையும் எதிர்கொள்ளும் இளைஞர் யுவதிகள் தமக்கு அருகிலேயே மருத்துவ உதவிகள் கிடைக்க இருப்பதை அறியாமலுள்ளனர் என தேசிய மனித விருத்தி அறிக்கை தெரிவித்துள்ளது. 2013ம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேசிய இளைஞர் சேவையாய்வுகளின் அடிப்படையிலேயே இத் தகவலை வெளியிட்டுள்ளது.

### தனியார் பேரூந்து முறைப்பாட்டுக்கு எஸ். எம். எஸ்

SMS

தனியார் பேரூந்துகள் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொள்ளவென குறுஞ்செய்தி முறைப்பாட்டு முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தனியார் போக்குவரத்து சேவை அமைச்சுச் செயலாளர் பத்மஸ்ரீ ஜெயமான்ன முறைப்பாடுகளுக்கான குறுஞ்செய்தியை 071 - 6550 000 என்ற எண்ணுக்கு அனுப்ப முடியும் என தெரிவித்தார்.

## the Sunday Observer

### அவுஸ்திரேலியப் பிரதமர் சனாதிபதியைப் பாராட்டு



நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை களை நிறைவேற்றும் இலங்கையின் செயற்பாட்டை அவுஸ்திரேலியப் பிரதமர் பாராட்டியுள்ளார்.

மஹிந்த ராஜபக்சவை ஜெனீவாவில் சந்தித்த டொனி பொட் இப்பாராட்டுதலை வழங்கியுள்ளார். அவுஸ்திரேலியா இலங்கையில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக உள்நாட்டில் எடுக்கப்படும் முயற்சிகளுக்குப் பெரும் உறுதுணையாக இருப்பதுடன் அமெரிக்காவினாலும் அதன் நேசசக்திகளாலும் தன்னிச்சையாக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளன.

## The Sunday Leader

### பேரூந்து கட்டணங்கள் அதிகரிக்காது – அமைச்சர் அதிகரிக்கும் – ஜெமுனு விஜேரத்ன

ශ්‍රී ලංගම
இ.போ.ச S.L.T.B

இவ்வருடத்தில் பேரூந்து கட்டணங்கள் அதிகரிக்காது என போக்குவரத்து துறை அமைச்சர் சி.வி.இரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

2015ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப் படவிருந்த பாதீட்டில் பெருமளவு நிவாரணங்கள் வழங்கப்படவுள்ளதால் இவ்வருடத்தில் பேரூந்து கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியமெதுவும் இல்லை என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை தனியார் பேரூந்து சங்க தவிசாளர் ஜெமுனு விஜேரத்ன இவ்விடயம் தொடர்பாக தெரிவிக்கும் பொழுது அரசாங்கம் தனது கோரிக்கைகளுக்கு இணங்காவிட்டால் தன்னிச்சையாக போக்குவரத்து கட்டணங்களை அதிகரிக்கவுள்ளதாக தெரிவித்தார்

### பால்மா விளம்பரங்களுக்கு தடை



ஊடகங்களுடாக பால்மாவிற்கு மேற்கொள்ளும் விளம்பரங்களை தற்காலிகமாக நிறுத்திக் கொள்ளுமாறு பால்மா உற்பத்தியாளர்களுக்கும் விநியோகத்தர்களுக்கும் சுகாதார அமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளது. சில பால்மா கம்பனிகள் விளம்பரங்கள் பார்வையாளர்களுக்கு தவறான கருத்தோட்டத்தை வழங்குவதாலேயே இத்தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

### இனப்பிரச்சினையைத் தீர்க்க அடிப்படைக் காரணியையே தீர்க்க வேண்டும் – ரஜீவ விஜேயசிங்க

இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டுமாயின் அப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணியை கண்டுகொண்டு அக்காரணிக்கு அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வைக் காண்பதனூடாகவே பிரச்சினையை முற்று முழுதாக தீர்க்க முடியுமென அரச கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

### போர் விசாரணை தொடர்கிறது

இலங்கை மீதான ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைகள் மேலும் தொடரும் என கடந்த வியாழக்கிழமை (25.09.2014) அன்று கூடிய மனித உரிமை ஆணைக்குழுவின் விவாதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை ஆணைக்குழு நேர்முகங்களை மேற்கொண்டுள்ளதுடன் அந்நேர்முக ஆவணங்களை தமிழிலும், சிங்களத்திலும் மொழி பெயர்க்கும் நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டுள்ளது.

சாட்சிகளினதும், பாதிக்கப்பட்டவர்களினதும் பாதுகாப்பு என்பது கேள்விக் குறியாகியுள்ள நிலையில் போர்க் குற்ற உள்ளக விசாரணையின் நம்பகத்தன்மை என்பதும் கேள்விக் குறியாகும் என மனித உரிமைக்கான ஐக்கிய நாடுகளின் பிரதி ஆணையாளர் தெரிவித்துள்ளார். இதன் ஓர் அங்கமாக மனித உரிமை ஆணைக்குழு இலங்கையின் பாராளுமன்றத்தில் தற்போது சமர்ப்பிக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் சட்டத் திருத்தத்தினை வாசித்துள்ளது.

இவ்வாசிப்பின் பின்னரான முதற்கட்ட ஆய்வானது அச்சட்டம் தொடர்பான பல கேள்விகளை உருவாக்கியுள்ளது என மனித உரிமை ஆணையம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சி விதித்திருக்கும் காலக்கெடு

அரசியல் ஆய்வு

நிலாந்தன் (www.tamilkingdom.org)




இவ்வாண்டு முடிவுக்குள் தனது கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் அஹிம்சை போராட்டங்களில் ஈடுபடப்போவதாக தமிழரசுக் கட்சி அறிவித்திருக்கிறது. கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் இவ்வாறான அறைகூவல்களை விடுப்பது இது தான் முதற் தடவையல்ல. காலக்கெடு விதித்து ஒரு போராட்டத்தை தொடங்கப் போவதாக அறிவித்திருப்பதும் இது தான் முதற் தடவையல்ல.

ரெலோ இயக்கத்தின் தலைவர் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சாகும் வரை உண்ணாவிரதம் ஒன்றை தொடங்க போவதாக அறிவித்திருந்ததை இங்கு நினைவுகூறலாம். எனினும் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளில் மிகப்பெரியதும் பல தசாப்த கால வரலாற்றையும் பாரம்பரியத்தையும் கொண்டிருப்பதுமாகிய தமிழரசுக் கட்சியின் தலைவர் வவுனியாவில் நடந்த அக்கட்சியின் மாநாட்டில் வைத்து இவ்விதமாக அறிவித்திருப்பதை ஒரு வெற்றுக்கோஷமாக எடுத்துக் கொள்ள முடியுமா? அல்லது, வரும் ஆண்டில் நடக்கவிருக்கும் தேர்தல்களை மனதில் வைத்து அவர் அப்படி அறிவித்திருக்கலாம் என்று எடுத்துக்கொள்ளலாமா?

மாவை சேனாதிராஜா அப்படி அறிவித்ததிற்குப் பின்னால் வேறு உள்நோக்கங்கள் இருக்கக் கூடும். ஆனால் நிச்சயமாக அரசாங்கம் அவர் முன்வைத்திருக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றப்போவதில்லை. கடந்த, சுமார் 60 ஆண்டு கால அனுபவத்தை வைத்து அதிலும் குறிப்பாக கடந்த சுமார் ஐந்தாண்டுகால அனுபவத்தை வைத்து அப்படிக் கூற முடியும்.

வெற்றி வாதத்திற்கு தலைமை தாங்கும் ஓர் அரசாங்கம் தோற்கடிக்கப்பட்ட தரப்போடு சமரசத்திற்கு வரப்போவதில்லை. குறிப்பாக வரும் ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டாக அமையலாம் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்து வரும் ஓர் பின்னணியில் இந்த அரசாங்கமானது எவ்வளவுக்கு எவ்வளவு தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கிறதோ. அவ்வளவுக்கு அவ்வளவு அது தனது வெற்றிவாய்ப்புக்களை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரது அலுவலகத்தால் நடத்தப்படும் விசாரணைகளின் முடிவுகள் அடுத்த ஆண்டில் வெளியிடப்படும். அப்பொழுது சிங்கள வெகுசனத்தின் உளவியலானது வெள்ளைக்கார நாடுகளுக்கு எதிராகவும் அந்த நாடுகளை பின்னிருந்து தூண்டுவதாக அவர்கள் குற்றம் சாட்டும் தமிழர்களுக்கு எதிராகவும் கொதிப்புற தொடங்கும்.

அப்படியொரு கொதிப்பான அரசியற் சூழலை இலக்கு வைத்தே அரசாங்கம் தேர்தல்களை திட்டமிடக் கூடும். மாவை அறிவித்திருக்கும் போராட்டமும் ஏறக்குறைய அக்காலகட்டத்திற்கு உரியதுதான். எனவே தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான உணர்வலைகள் மிக உச்சமாக காணப்படும் காலகட்டத்தில் தேர்தலை நடாத்தினால் வெற்றிக்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.

இப்படிப் பார்த்தால் தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளுக்கு செவி சாய்ப்பதை விடவும் அவற்றிற்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதே அரசாங்கத்திற்கு அதிகம் அனுகூலங்களை தரும். அதாவது தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளை அரசாங்கம் அநேகமாக நிறைவேற்றாது. அக்கோரிக்கைகள் ஐக்கிய இலங்கைக்குள் தான் ஒரு தீர்வை கேட்கின்றன. ஆனாலும் அவற்றை நிறைவேற்றுவதை விடவும் எதிர்ப்பதன் மூலம் இந்த அரசாங்கம் தேர்தல் வெற்றிகளை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

இது தவிர தமிழ் மிதவாதிகளின் செயலுக்குப் போகா வீரம் குறித்தும், சிங்கள தலைவர்களுக்கு நன்கு தெரியும். தமிழ் மிதவாதிகள் கூறிக் கொள்வது போல அஹிம்சை போராட்டத்தின் தோல்வியினால் தான் ஆயுதப் போராட்டம் தோன்றியது என்பது ஒரு மிகைப்படுத்தப்பட்ட கூற்றே. எனது கட்டுரைகளில் ஏற்னவே பல தடவை இது பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

அஹிம்சை எனப்படுவது சாகப் பயந்தவர்களின் ஆயுதம் அல்ல. அது சாகத் துணிந்தவர்களின் ஆயுதம் தான். அது ஒரு போராட்ட முறையல்ல மாறாக அது ஒரு வாழ்க்கை முறை. சிலர் இரத்தம் சிந்துவதோடு மற்றவர்கள் அதிலிருந்து பின்வாங்க முடியாது. தமது இறுதி இலக்கை அடையும் வரை உச்சமான தியாகங்களைச் செய்யத் துணிந்தவர்களே அஹிம்சைப் போராட்டத்தில் வெற்றிபெறலாம்.

ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலத்திற்கு முன்பு தமிழ் மிதவாதிகளால் முன்னெடுக்கப்பட்ட அஹிம்சை போராட்டம் மேற்சொன்ன பண்புகளை கொண்டிருந்ததா? தமிழ் மிதவாதிகளின் சத்தியாக்கிரகத்தை சிங்கள தலைவர்கள் மூர்க்கமான வன்முறை மூலம் எதிர்கொண்ட போது ஒரு கட்டத்திற்கு மேல் தமிழ் தலைவர்களால் நின்று பிடிக்க முடியவில்லை.

இந்திய அமைதி காக்கும் படையிடம் நீதி கேட்டு மாமாங்கப் பிள்ளையார் கோவிலில் உண்ணாவிரதமிருந்த அன்னை பூபதி அளவுக்கு உயிரைத் துறக்க ஒரு மிதவாத தலைவர் கூட தயாராக இருக்கவில்லை. நடுத்தர வயதைக் கடந்த ஒரு சாதாரண குடும்பத்தலைவியான அன்னை பூபதி தனது கோரிக்கைகளுக்காக சுமார் 30 நாட்களுக்கு மேல் உண்ணாதிருந்து முடிவில் தன் உயிரைத் துறந்தார்.

அப்படியொரு தியாக சிந்தை தமிழ் மிதவாத பாரம்பரியத்தில் யாரிடமாவது இருந்ததா? மாவை சேனாதிராஜாவைப் போன்ற சில மிதவாதிகள் சிறைபோயிருக்கிறார்கள் சித்திரவதைப் பட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். ஆனால் அது ஒரு வயது வரை தான். ஒரு கட்டத்திற்குப் பின் நாடு உயிரைத் தா என்று கேட்ட போது பெரும்பாலான மிதவாதிகள் அரங்கிலிருந்து மறைந்து போனார்கள்.

எனவே, அஹிம்சை போராட்டத்தின் தோல்வியிலிருந்தே ஆயுதப்போராட்டம் தோற்றம் பெற்றது என்பது முழுக்கச் சரியல்ல. மாறாக அஹிம்சை எனப்படுவது தமிழ் மிதவாதிகளால் சாகப் பயந்தவர்களின் ஆயுதமாகவே கையாளப்பட்டது. இது சிங்கள அரசியல் தலைவர்களுக்கு நன்றாக தெரியும். இந்த அனுபவத்திற்கூடாகவே அவர்கள் தமிழ் மிதவாதிகளின் அஹிம்சை போராட்டங்களை பார்ப்பார்கள்.

அதிலும் குறிப்பாக இப்போதிருக்கும் அரசாங்கமானது தமிழர்களுடைய ஆயுதப்போராட்டத்தை தோற்கடித்த ஓர் அரசாங்கம். தமிழ் மிதவாதிகளைப் போலன்றி ஆயுதமேந்திய இயக்கங்கள் தமது இலட்சியத்திற்காக ஆயிரக்கணக்கில் உயிர்களை துறந்து போராடின. அதனாலேயே அது முழு உலகத்திற்கும் முன்னெப்பொழுதும் கிடைத்திராத ஒரு புதிய அனுபவமாக மாறியது. அப்படிப்பட்ட ஆயுதப்போராட்டத் தையே தோற்கடித்த ஓர் அரசாங்கம் தமிழ் மிதவாதிகளின் அறைகூவல்களை எப்படிப் பார்க்கும்?

எனவே மேற்கண்டவை அனைத்தையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் தமிழரசுக் கட்சி அறிவித்திருக்கும் அஹிம்சைப் போராட்டம் மிக மலிவான ஒரு தேர்தல் உபாயமாக பொலிவிழந்து போகக் கூடிய நிலைமைகளே அதிகம் தென்படுகின்றன.

உண்மையில் இப்படி ஏதும் செய்வதை தவிர கூட்டமைப்புக்கு வேறு வழிகளும் இல்லைத்தான். ஏனெனில் கடந்த சில மாதங்களாக தமிழ் மக்களின் அரசியல் ஆர்வம் குறைந்து வருவதை காணமுடிகிறது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. தமிழ் அரசியல் கட்சிகளின் கடந்த ஐந்தாண்டுகால செயலின்மைகளின் மீது ஏற்பட்ட சலிப்பு ஒரு முக்கிய காரணம்.

ஈழத் தமிழர்கள் பிராந்திய மற்றும் அனைத்துலக சக்திகள் பெரும்பாலானவற்றால் கையாளப்பட்ட இப்பொழுதும் கையாளப்படுகிற ஒரு சிறிய மக்கள் கூட்டம். மிகப் பலமான படித்த நடுத்தர வர்க்கம் ஒன்றை கொண்டிருக்கும் மக்கள் கூட்டம். கடந்த சுமார் 60 ஆண்டு கால அனுபவத்தை பிழிந்தெடுத்து ஒரு தீர்மானத்திற்கு வர அவர்களால் முடியும்.

குறிப்பாக ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட்ட கடந்த ஐந்தாண்டுகால அனுபவத்தின் அடிப்படையில் அவர்களால் சிந்திக்க முடியும். கடந்த ஐந்தாண்டுகால அரசியல் எனப்படுவது பெருமளவிற்கு செயலின்றி வெளியாருக்காக காத்திருப்பதாகவே காணப்படுகிறது. மற்றவர்கள் தங்களுக்காக எதையாவது செய்யட்டும் என்று காத்திருக்கும் பொழுது ஒரு கட்டத்திற்கு மேல் சலிப்பே உண்டாகும் மாறாக மற்றவர்களை, தங்களை நோக்கி வளைக்கும் விதத்தில் எதையாவது செய்யும் போது அந்த செயலும் அந்த செயலின் விளைவுகளும் அரசியலை உயிர்த்துடிப்போடு வைத்திருக்கும். ஆனால் கடந்த ஐந்தாண்டுகளில் வெளியாருக்காக காத்திருப்பது என்பது அதன் அவலட்சணமான எல்லைகளை எட்டத்தொடங்கி விட்டது. இப்போது உருவாகிவரும் சலிப்பிற்கு இது ஒரு காரணம்.

இரண்டாவது காரணம் மாகாண சபை தேர்தலின் போது கூட்டமைப்பு உருவாக்கிய இனமான அலை. அண்மை தசாப்தங்களில் தேர்தல் அரங்கில் எழுப்பப்பட்ட மிகப்பெரிய இனமான அலை அது. அப்படியொரு இனமான அலையை தோற்றுவித்து மகத்தான மக்கள் ஆணையை பெற்ற கூட்டமைப்பானது கடந்த சுமார் பத்து மாதங்களுக்கு மேலாக எதைச் சாதித்திருக்கிறது? வட மாகாண முதலமைச்சர் அரசாங்கத்திற்கு எதிராக தெரிவித்து வரும் கருத்துக்கள் எறக்குறைய அவற்றின் கூர்மையை இழக்கத் தொடங்கி விட்டன.

கடந்த சுமார் பத்து மாதங்களுக்கு மேலாக அவை பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாக வந்ததிற்கும் அப்பால் வேறெதையும் பெரிதாக சாதிக்க முடியவில்லை. தான் முன்பு பேசியவற்றை விட இன்னும் தீவிரமாக பேசினால் தான் முதலமைச்சரின் பேச்சுக்களுக்கு ஒரு கவனிப்பு கிடைக்கும். அது கூட ஒரு கட்டம் வரையிலும் தான். ஏற்கனவே சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்பு வரதராஜ பெருமாள் அதன் உச்ச கட்டத்தை தொட்டு விட்டே நாட்டை விட்டு வெளியேறினார்.

அவர் தனி நாட்டுப் பிரகடனத்தை செய்து விட்டு இந்திய படைகளோடு சேர்ந்து நாட்டை விட்டு வெளியேறினார். விக்னேஸ்வரனால் அந்த எல்லைக்குப் போக முடியாது. ஆனால் அதற்காக திரும்ப திரும்ப செயலின்றி அரசாங்கத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டிருக்கவும் முடியாது. குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது மட்டுமே இப்போதைக்குச் செய்யக்கூடிய ஒரே பெரும் செயல் என்று அவர் கருதுகிறாரா?

ஆனால் செயலுக்குப் போகாமால் திரும்ப திரும்ப குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது என்பது தமிழ் மக்களை சலிக்கச் செய்கிறது. மாகாண சபை தேர்தலின் போது உருவாக்கப்பட்ட எதிரபார்ப்புக்கள் எத்துணை பெரியவையோ அவைபோல அந்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத போது வரும் ஏமாற்றங்களும் அத்துணை பெரியவைகளாகவே இருக்கும்.

மூன்றாவது காரணம் ஐ.நா தீர்மானங்கள் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் வேகத்தில் தீர்க்கத் தவறிவிட்டன என்பது. எல்லா வெளித்தரப்புக்களும் தங்களை கறிவேப்பிலைகளாக பயன்படுத்துகின்றன என்ற ஒரு சலிப்பு படித்த தமிழ் மத்திய தரவர்க்கத்தினர் மத்தியில் படிப்படியாக பலமடைந்து வருகிறது. இது மூன்றாவது காரணம்.

நான்காவது காரணம் இந்தியாவை நோக்கிக் காத்திருப்பதால் உடனடிக்கு பெரிய அதிசயங்களோ அற்புதங்களோ நிகழ்வதற்கில்லை என்ற ஒரு சலிப்பு படித்த தமிழ் நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் உருவாகத் தொடங்கி விட்டது.

ஐந்தாவது காரணம் கூட்டமைப்புக்கு மாற்றாக அரங்கில் பலமான கட்சி எதுவும் இல்லையென்பது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது தன்னை அப்படியொரு மாற்றீடாக கட்டியெழுப்ப தவறி விட்டது. குறியீட்டு வகைப்பட்ட சிவில் எதிர்ப்புக்களை முன்னெடுத்தமை, ஐ.நா அரங்கில் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை ஒன்று திரட்டியமை, மனித உரிமைகள் ஆணையகத்தின் விசாரணைக் குழுவிற்கு சாட்சியமளிக்க முன்வரும் மக்களை ஊக்குவித்தமை போன்ற குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சில நகர்வுகளுக்கும் அப்பால் அக்கட்சியானது கூட்டமைப்பிற்கு நிகரான ஒரு பலமான எதிர்த்தரப்பாக தன்னை கட்டியெழுப்பத் தவறி விட்டது.

குறிப்பாக அண்மை வாரங்களில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் விசாரணைக்கு சாட்சிகளை ஒழுங்குபடுத்தும் மிகத் துணிச்சலான ஒரு பணியில் அக்கட்சி ஈடுபட்டு வருகின்றது. நாட்டுக்குள் இருந்து கொண்டு அதை செய்வதால் வரக்கூடிய ஆபத்துக்களை எதிர்கொள்வதற்கு அக்கட்சி தயாராக காணப்படுகிறது.

இது போன்ற மிகத் துணிச்சலான செயல்களின் மூலம் தமிழ் வாக்காளர்களின் அபிப்பிராயங்களில் மாற்றங்களை கொண்டு வர முடியுமா? பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ஆனால் இப்போதுள்ள நிலைமைகளின் படி அக்கட்சியானது கூட்டமைப்புக்கு நிகரான ஒரு சவால் இல்லை தான். இது ஆறாவது காரணம்.

மேற்கண்ட ஆறு காரணங்களின் பின்னணியில், அதாவது படித்த தமிழ் நடுத்தர வர்க்கம் அரசியலில் சலிப்படையத் தொடங்கும் ஓர் பின்னணியில், வரும் தேர்தலில் மறுபடியும் ஓர் இனமான அலையை தோற்றுவிக்க முடியுமா? மாகாண சபை தேர்தல் நடந்து கிட்டத்தட்ட ஓராண்டு இடைவெளிக்குள் அத்தேர்தலில் உற்பத்தி செய்யப்பட்டதைப் போன்ற ஓர் இனமான அலையை மறுபடியும் தோற்றுவிப்பதென்றால் தமிழ் மக்களின் மறதியைக் கூட்ட மருந்து கொடுக்க வேண்டும்.

இவை எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்து கணக்குப் போட்டே தமிழரசுக் கட்சி மேற்படி அறைகூவலை விடுத்திருப்பதாக எடுத்துக் கொள்ளலாமா? ஆனால், வெற்றிவாதம் எனப்படும் வலுக்கோட்டையின் சுவரில் தனது தலையை மோதும் துணிச்சலும் தியாக சிந்தையும் அரங்கில் இப்போதுள்ள தமிழ்த் தலைவர்களில் யாரிடமுண்டு? அல்லது மாவை சேனாதிராஜா தனது அறைகூவலை விடுத்த அதே மாநாட்டின் தொடக்கத்தில் சம்பந்தர் உரையாற்றியது போல தமிழரசுக் கட்சியின் காலக்கெடுவும் ஒரு "கற்பனாவாதமாக, அல்லது வெற்றுக்கோஷமாக" வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட்டு விடுமா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிடைத்த வாழ்க்கையை அனுபவிக்க தெரியாதவள்!

...நாட்டு நடப்பு...

ஐக்கிய தேசியக் கட்சியின் அன்றைய ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டதே பல ஆடைத் தொழிலகங்கள். அவை ஊடாக பல கிராமப் புறங்களில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் இளம் யுவதிகளுக்கும் இளைஞர்களுக்கும் போதிய வேலைவாய்ப்பு கிடைத்தன.

பல பின்தங்கிய கிராமங்களின் இளைஞர்களும், யுவதிகளும் ஆடைத் தொழிலகங்கள் அமைந்துள்ள நகர்புறங்களுக்கு சென்று வாடகை வீடுகளிலும், பொது விடுதிகளிலும் தங்கியிருந்து கொண்டு வேலைக்குச் சென்று வந்தனர்.

அதனால் அன்று ஆடைத்தொழிலகங்களை அண்டிய பல பிரதேசங்கள் சுறுசுறுப்பாக இயங்கியது மாத்திரமல்ல அவை துரித அபிவிருத்தியும்



அடைந்தன. மேலும் அங்கு வெளியாரின் வருகையால் சனநெரிசலும், வாகனப் போக்குவரத்தும் அதிகரித்தன.

காஞ்சனாவின் சொந்த இடம் கல்கிஸ்ஸ. க.பொ.த (சாதாரணம்) வரை கல்வி பயின்றாலும் மேற்கொண்டு கற்க பொருளாதார வசதி மிகவும் தடையாக இருந்ததால் இரத்மலானை ஆடைத் தொழிற்சாலையில் வேலைக்கு சேர்ந்து கொண்டார். சிறு வயதிலே தகப்பனை இழந்த அவள் தாயின் அரவணைப்பிலே வளர்ந்தாள்.

அவளின் தாயார் கூட ஆடைத் தொழிலகத்தில் ஓய்வு பெற்ற ஊழியரென்பதால் அவளுக்கு அங்கு வேலை பெற இலகுவாக இருந்தது. தொழிலகத்திற்கு சென்று வந்தபோதே மோகனை சந்தித்தாள். அவனின் சொந்த ஊர் ஜாஎல. 1983ம் ஆண்டு வன்செயலினால் வீடு வாசலை இழந்து இந்தியாவுக்குச் சென்று அங்கு சுமார் ஐந்து வருடங்கள் அகதி வாழ்க்கை வாழ்ந்து மொரட்டுவப் பகுதியில் தற்பொழுது பெற்றோருடன் வாழ்ந்து வருகின்றான்.

ஓர் அரசியல்வாதி அவனுக்கு இரத்மலானை விமான நிலையத்தில் 'நானாவித ஊழியர்' பதவியை பெற்றுக் கொடுத்திருந்தார். அவனது குடும்பத்தில் அவன் ஒரே ஒரு பிள்ளை என்பதால் பெற்றோரை கவனிக்க வேண்டிய பாரிய பொறுப்பு அவனை சார்ந்து இருந்தது. முப்பத்தைந்து வயதாகியும் அவனுக்கென்று பிறந்தவள் அவனது கண்களுக்கு சரியாக தென்படாததால் இன்னும் அவன் திருமண மாகாதவனாக இருந்து வருகிறான்.

காஞ்சனா வேலை செய்யும் ஆடைத் தொழிலகம் இரத்மலானை விமான நிலையத்திற்கருகில் அமைந்துள்ளதால் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நிதமும் சந்தித்துக் கொள்ளும் வாய்ப்பு அதிகமாக இருந்தது. அவர்கள் இருவரும் ஆளுக்கால் தமது மனங்களில் இரகசியமாக புதைத்து வை[...] வெளிப்படுத்த தயங்கினர்.

ஓரிரு வருடங்களுக்குள் மோகன் தனது பெற்றோர்கள் இருவரையும் இழந்து தனி மரமானான். எப்படியும் அவனால் தனித்து வாழ முடியாததால் அவன் தனது விருப்பத்தை அவளிடம் தெரிவிக்கவே அவர்கள் இருவருக்கும் திருமணம் இனிது நிறைவேறியது. அவனுக்கென்றே காஞ்சனா பிறந்துள்ளாள் என்பதை அத்திருமணம் ஊர்ஜிதப்படுத்தியது.

காஞ்சனா தனது பெற்றோரை விட்டு பிரிந்து மொரட்டுவையில் தனது புதிய வாழ்க்கையை மோகனுடன் சேர்ந்து வாழ ஆரம்பித்தாள். இருவரும் அதிகாலையில் எழுந்து வேலைக்குச் சென்று மாலை வீடு வந்து சேருவார்கள். அவர்களது வாழ்க்கை மிக சிறப்பாக கழிந்து கொண்டே சென்றது.

ஒரே சூலில் காஞ்சனாவுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. வீட்டில் வேலைகள் அதிகரிக்கவே குழந்தைகளின் நலன் கருதி அவள் தனது பெற்றோரின் வீட்டுக்குச் சென்று வாழ நிர்ப்பந்திக்கப்பட்டாள். மொரட்டுவையில் அமைந்துள்ள மோகனின் வீட்டை வாடகைக்கு கொடுத்துவிட்டு காஞ்சனாவின் பெற்றோரின் வீடு அமைந்துள்ள கல்கிஸைக்கு செல்ல நேரிட்டது.

கல்கிஸ்ஸை வீட்டில் அவர்கள் மிக சந்தோசமாக வாழ்ந்ததுமல்லாமல், காஞ்சனாவின் பெற்றோர் அவளின் இரட்டைக் குழந்தைகளை மிக அன்பாகவும் பார்த்து வந்தனர். இதனால் காஞ்சனாவுக்கும் மோகனுக்கும் இருந்து வந்த வேலைப் பழு மிகவும் குறைந்தது.

இருப்பினும் வாழ்க்கை செலவு நாளுக்கு நாள் அதிகரிக்கவே அவர்கள் இருவரினதும் சம்பளம் குடும்பச் செலவுக்கு போதாமல் இருந்தது. அதனால் அவன் வெளிநாடு சென்று உழைக்க தீர்மானித்திருந்தான். காஞ்சனாவினதும் அவளது பெற்றோரினதும் முழுச் சம்மதம் கிடைக்கவே அவன் மலேசியாவுக்கு பறந்தான்.

அங்கும் அவனுக்கு விமான நிலையத்திலே சிற்றூழியராக வேலை கிடைத்தது. கணவன் வெளிநாடு சென்றாலும் காஞ்சனா தனது ஆடைத்தொழிலக வேலையை கைவிடவில்லை. அவளின் இரட்டைக் குழந்தைகளை தனது பெற்றோரிடம் பொறுப்புக் கொடுத்து விட்டு தொழிலகத்தின் அருகிலுள்ள விடுதி ஒன்றில் தங்கிக் கொண்டு வேலைக்குச் செல்வாள். அவளுக்கு நேரம் கிடைக்கும் வேளைகளில் பிள்ளைகளை பார்க்கச் செல்வாள். அவளுக்கு ஏற்பட்ட திடீர் சிக்கல் நிலையால் அடிக்கடி பிள்ளைகளை பார்க்கச் செல்ல முடியவில்லை. இருப்பினும் தொலைபேசி தொடர்பாடல் மூலம் தனது பெற்றோரினதும், பிள்ளைகளினதும் சுகத்தை அடிக்கடி விசாரிக்க அவள் தவறுவதே இல்லை.

ஓரிரு மாதத்திற்கு ஒரு தடவை வீட்டுக்கு சென்று வந்த அவளால் அடுத்துவரும் மாதங்களில் வீட்டுக்கு செல்ல முடியாத நிலை தோன்றியது. காரணம் அவள் கர்ப்பமுற்றிருந்தாள். அவள் திருமணமானவள் என்பதால் தொழிலகத்தில் எவரும் அவள் மேல் சந்தேகம் கொள்ளவில்லை. எப்படியோ அவளின் குழந்தையை இரத்மலானை அரசினர் மருத்துவமனையில் பெற்றெடுத்தாள்.

அக்குழந்தையை கவனிப்பதற்காக சம்பளம் கொடுத்து ஒரு பெண்ணையும் தனது விடுதியில் வைத்துக் கொண்டாள். அவள் அக் குழந்தையை நன்கு கவனித்து வந்தாள். ஒரு நாள் அக்குழந்தையை எடுத்துக் கொண்டு கல்கிஸையிலுள்ள தனது பெற்றோரின் வீட்டுக்கு செல்வதாக விடுதியிலும் அயலிலுள்ளவர்களிடமும் கூறிவிட்டு புறப்பட்டுச் சென்றாள்.

சுமார் ஒரு மாதம் கடந்தும் அவள் வேலைக்கு திரும்பிச் செல்லாததால் தாமாகவே அவள் வேலையை விட்டு அகன்று சென்றதாக கருதி நிர்வாகம் அவளின் கல்கிஸை வீட்டுக்கு பதிவுத் தபாலில் கடிதமொன்றை அனுப்பி வைத்தது.

பெற்றோர் அக்கடிதம் கிடைத்த அன்றே தொலைபேசி மூலம் அவளை தொடர்பு கொண்டும் பதில் கிடைக்கவில்லை. உடனடியாக நிலைமையை அவள் கணவருக்கு தெரிவிக்கப்பட்டது. அவன் உடனடியாக நாடு திரும்பியதும் இரத்மலானை காவல்துறையினர் அவனை நிலையத்திற்கு அழைத்திருந்தனர்.

காஞ்சனா அங்கு கைது செய்யப்பட்ட நிலையில் காணப்பட்டாள். அவள் செய்த குற்றம் என்ன? என்று அவளின் கணவன் காவல் துறையினரிடம் வினவிய போது 'கொலைக்குற்றம்' எனபதிலளிக்கப்பட்டது. ஒன்றுமறியா அந்த சிசுவின் கழுத்தை நெரித்து கொன்றுவிட்டு அதை காஞ்சனா கடலில் வீசி இருந்தாள். தலையில்லாத சடலமாக அது கரை ஒதுங்கிய வேளையில் பொதுமக்களின் தகவலை அடுத்து எப்படியோ காவல்துறையினர் அது அவள் பெற்றெடுத்த குழந்தை என புலனாய்வின் மூலம் கண்டு பிடித்திருந்தனர்.

ஆடைத் தொழிலகத்தில் அவளுக்கும் அங்கு கடமை புரியும் மேற்பார்வையாளருக்கும் இடையில் ஏற்பட்ட தகாத உறவே திருட்டுத்தனமாக ஒரு குழந்தையை பெற்றெடுக்க காரணமாக இருந்தது. அவளின் கணவன் சொந்த நாட்டிலிருந்தால் அந்த குழந்தைக்கு தந்தை அவனே என ஊரை நம்ப வைத்திருக்கலாம். அவன் சுமார் இரண்டு வருடங்கள் வெளிநாட்டில் இருக்கும் போது எப்படி அத்தவறை அவன் தலையில் சுமத்துவது?

தகாத உறவின் மூலம் உருவாகிய அக் கருவை அவள் ஆரம்பத்தில் கலைக்க விரும்பாதமைக்கு காரணம் கணவன் அக்கால கட்டத்தில் லீவில் வீட்டுக்கு வருவதாக இருந்தான். ஆனால் அவனுக்கு குறித்த காலத்தில் சொந்த நாட்டுக்கு வருவதற்கு லீவு கிடைக்கவில்லை. இன்று வருவான், நாளை வருவான் என அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில் அக்கரு கலைக்க முடியாத அளவுக்கு வளர்ச்சியடைந்ததாலே அச்சிக்கல் தோன்றியது.

தண்டிக்கப்பட வேண்டிய குற்றத்தை புரிந்தவர்கள் எவராக இருந்தாலும் தண்டனையில் இருந்து தப்ப முடியாது. அவளை முற்றாக கைகழுவுவதை விட வேறு மார்க்கம் அவனுக்கு தென்படாததினால் சட்டம் அவளை தண்டிக்கட்டும் எனக் கூறி காவல் நிலையத்திலிருந்து மனக் கவலையுடன் வீடு திரும்பினான் காஞ்சனாவின் சட்டபூர்வ கணவன்.



**- பாலையூற்றான் -**

## வினோதங்கள்

### மூதாட்டிக்கு நேர்ந்த நிலை



வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்த இளைஞர்களை, கூச்சல் போடாமல் இருக்கும்படி, அவ்வீட்டில் வசிக்கும் 76 வயது மதிக்கத்தக்க மூதாட்டி கண்டித்துள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த குறித்த இளைஞர்கள், மூதாட்டியை கற்பழித்ததுடன் வீட்டையும் கொள்ளையடித்து சென்றுள்ளனர். மூதாட்டியின் கணவர் வீட்டில் இல்லாத நேரத்தை, தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

### ஆண்கள் போல் பெண்கள்




ஆப்கானில் ஆண் குழந்தைகள் இல்லாத வீட்டில், சிலர் தங்கள் பெண் குழந்தைகளுக்கு சிறு வயது முதலே ஆண் குழந்தை போல உடை அணிவித்து அவர்களை மற்றவர் களுடன் பழக விடுவதுடன் பள்ளிக்கும் அவ்வாறே அனுப்புகின்றனர்.

"பச்சா போஷ்" என்றழைக்கப்படும் இந்த பெண் குழந்தைகள் ஆண்கள் போல் உடை அணிவதால் சுதந்திரமாக வெளியில் நடமாட முடிவதுடன் ஆண் குழந்தைகளுடன் சகஜமாக விளையாடி மகிழ்கின்றனர்.

### கண்ணாடிப் பாலம் - சீனா





தெற்கு சீனாவில் உள்ள Pingjiang county, in the province of Hunan என்ற பகுதியில் இரண்டு மலைகளுக்கிடையே உள்ள்ள 300 மீட்டர் நீளமுள்ள ஒரு பாலத்தை முழுக்க முழுக்க கண்ணாடியினால் ஆன நடைபாதையை கொண்டு ஒரு பாலத்தை கட்ட சீன பொறியாளர்கள் முடிவெடுத்து அதை தற்போது வெற்றிகரமாக கட்டியும் முடித்துவிட்டனர். அதுவும் தரையில் இருந்து 180 மீட்டர் உயரத்தில் இந்த பாலம் கட்டப்பட்டுள்ளது. இந்த பாலத்தை கட்டி முடிக்க சுமார் 6000 கன அடி கண்ணாடிகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

### சிகரெட் கிடைக்காது

ஆஸ்திரேலிய அரசு தங்கள் நாட்டில் படிப்படியாக பொதுமக்களிடம் உள்ள சிகரெட் பழக்கத்தை ஒழிக்க பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதன்படி கடந்த 2000ஆம் ஆண்டுக்கு பிறகு பிறந்த எவருக்கும் சிகரெட் விற்பனை செய்யக்கூடாது என்பதுதான் அந்த அதிரடி சட்டம். இந்த சட்டத்தை மீறி சிகரெட் விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சிகரெட் விற்பனையாளர்களுக்கு அரசு எச்சரித்துள்ளது.

### பெற்ற மகளையே கடத்திய தாய்



கடந்த 2002ம் ஆண்டு சப்ரினா என்ற சிறுமி, நான்கு வயதாக இருக்கும் போது அவளது தாயாரால் கடத்தப்பட்டார். இச்சிறுமியை தீவிரமாக தேடிவந்த நிலையில், மெக்சிகோவில் இருந்து 140 கி.மீ தொலைவில் உள்ள எல்டாபேடா ட்ளாக்ஸ்கலா என்ற நகரத்தின் அருகே தாயும், மகளும் இருப்பதை மீட்பு படையினர் கண்டுபிடித்தனர். க்ரெக்குக்கும், அவரது மனைவி டாரா மேரி லோரென்சுக்கும் இடையே விவாகரத்து ஏற்பட்டபோது சப்ரினா தந்தையின் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனை தொடர்ந்தே சப்ரினாவை அவளது தாய் கடத்திக் கொண்டு சென்றதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லம்மாள்

## தொடர்கதை

புதுமைப்பித்தன்

அப்பாடா! மேலெல்லாம் வலிக்குது. பிடிச்சுக்கொண்டு என் பக்கத்திலேயே இருங்க. எங்கயும் போயிராதீங்க என சிறு குழந்தை போல் பிள்ளைக்கு மிக அருகில் சென்று உறங்கினாள்.

சற்று நேரத்தின் பின் என்னங்க அம்மையப் பாக்கணும் போல இருக்கு என்றாள். நாளைக்கு உடனே வரும்படி தந்தி கொடுத்தாப் போகுது. அதுக்கென்ன என்றார் பிள்ளையும். ஊஹூம் துட்டெ வீணாக்காதீங்க. கடிதம் போடுங்க போதும் என்றவள், பசிக்குது ஏதாச்சும் சூடா குடுங்களன் என்றாள்.

உடனே பிள்ளையும் உள்ளே ஓடிச் சென்று சூடாக்கி வைத்திருந்த பாலையும், காய்ந்த பேரீச்சம்பழம் கொஞ்சமும் எடுத்து வந்து கொடுத்தார். சாப்பிட்டவள் அசதியில் மீண்டும் சுருண்டு படுத்தாள். தன் மனைவியையே ஏக்கமாய் பார்த்துக் கொண்டிருந்தார் பிள்ளை. அவளது உதடுகள் நீலம் பாரித்திருந்தது. காய்ந்த உதட்டை அடிக்கடி நாக்கால் நக்கிக் கொண்டாள். காலையிலிருந்த முகப்பொலிவு சற்று மங்கிவிட்டது.

சற்று நேரம் கழிந்தது. நெஞ்சில் என்னமோ படபடவென்று அடிக்குதுங்க. எல்லாம் தளர்ச்சியின் கோளாறு தான். பயப்படாதே என்று நெஞ்சைத் தடவிக் கொடுத்தார்.

ஒரு விநாடி கழித்து பசிக்குது: பாலைத் தாருங்க. நான் தூங்குதேன் என்றாள் செல்லம்மாள் சிணுங்கிக் கொண்டே.

இதோ எடுத்து வாரேன் என்று உள்ளே ஓடிச் சென்றவர் உள்ளே பால் திறைந்து போயிருந்ததைப் பார்த்து அதிர்ந்தார். அவருக்கு திக்கென்றது. வெந்நீரில் உலர்ந்துபோன எலுமிச்சம்பழத்தை பிழிந்து சர்க்கரையிட்டு அவளருகில் கொண்டு வந்தார்.

அவளை மெதுவாக கூப்பிட்டு, நிதானத்துக்கு கொண்டு வந்து, பால் தெரைஞ்சு போச்சு. பானகம் தாரேன் குடிச்சுப்புட்டு தூங்கு என்றார். அவளும் ஆகட்டும் என்பது



போல் தலையை அசைத்து வாயைத் திறந்தாள். இரண்டு மடக்குக் குடித்துவிட்டுத் தலையை அசைத்துவிட்டாள்.

விக்கலுடன் உடல் குலுங்கியது. நெஞ்சு விம்மி அமர்ந்தது. காலும் கையும் வெட்டி வாங்கின.

அதிர்ச்சி ஓய்ந்ததும் பிள்ளை பானகத்தைக் கொடுத்தார். அது இருபுறமும் வழிந்துவிட்டது.

பாத்திரத்தை மெதுவாக வைத்துவிட்டுத் தொட்டுப் பார்த்தார். உடல் தான் இருந்தது.

வைத்த கையை மாற்றாமல் பூதாகாரமாகச் சுவரில் விழுந்த தமது சாயைப் பார்த்தார். அதன் கைகள் செல்லம்மாள் நெஞ்சைத் தோண்டி உயிரைப் பிடுங்குவதைப் போல் இருந்தன.

சித்த வைத்தியன் கொடுத்த மருந்தில் மிஞ்சிக் கிடந்தவற்றை உடம்பில் பிரயோகித்துப் பார்த்தார்.

இனிமேல் ஆவது ஒன்றுமில்லை என்பது தெரிந்தும் தவிட்டு ஒற்றடம் கொடுத்துப் பார்த்தார்.

அவரது நெற்றியின் வியர்வை அந்த உடலின் கண் இமையில் சொட்டியது.

அரைக்கண் போட்டிருந்த கண்களை மூடினார். குரக்குவலி இழுத்த காலை நிமிர்த்திக் கிடத்தினார். கைகளை நெஞ்சில் மடித்து வைத்தார். அருகில் உட்கார்ந்திருந்தவர் பிரக்ஞையில் தளதளவென்று கொதிக்கும் வெந்நீரின் அழைப்புக் கேட்டது.

உள்ளே சென்று செல்லம்மாள் எப்போதும் குளிக்கும் பருவத்துக்குப் பக்குவப்படுத்தினார்.

உடலை எடுத்து வந்தார்.

செல்லம்மாள் இவ்வளவு கனமில்லையே. என்னமாக் கனக்கிறது! என்று எண்ணமிட்டார்.

தலை வசப்படாமல் சரிந்து சரிந்து விழுந்தது.

கீழே உட்காரவைத்து நின்று தமது முழங்காலில் சாய்த்து வைத்துத் தவலைத் தண்ணீர் முழுவதையும் விட்டுக் குளிப்பாட்டினார். மஞ்சள் இருக்குமிடம் தெரியாததினால் அதற்கு வசதி இல்லாமற் போய்விட்டது. மேல்துணியை வைத்து துவட்டினார்.

மீண்டும் கொண்டு வந்து படுக்கையில் கிடத்தினார். அவளுக்கென்று வாங்கிய பச்சை நிற புதப் புடவை அந்த உடலைச் சுற்றிக் கட்டப்பட்டது. நெற்றியில் விபூதியும் குங்குமமும் இட்டார். தலைமாட்டினருகில் குத்துவிளக்கை ஏற்றி வைத்தார். கனல் எடுத்து வந்து பொடியைத் தூவி சாம்பிராணி இட்டார்.



கூடத்தில் மூச்சுத் திணறுவது போல் இருந்தது. வெளிவாசலுக்கு வந்து தெருவில் இறங்கி நின்றார்.

ஊசிக் காற்று உடம்பை வருடியது.

அருகில் ஐயா! என்றான்.

முதலாளி குடுத்தாங்க. என்று நோட்டுக்களை நீட்டினான். அம்மாவுக்கு எப்படி இருக்கு? என்றான்.

அம்மா தவறிப் போயிட்டாங்க. நீ இந்த நோட்டை வச்சுக்க. ஒரு தந்தி எழுதித் தாரேன். அதெக் குடுத்துப்புட்டு. முதலாளி ஐயா வீட்டிலே சொல்லு. வரும் போது அம்பட்டனுக்கும் சொல்லிட்டு வா என்றார்.

நிதானமாகவே பேசினார். குரலில் உளைச்சல் தொனிக்கவில்லை.

பிரமித்துப்போன முனிசாமி தந்தி கொடுக்க ஓடினான். பிள்ளை உள்ளே திரும்பி வந்து உட்கார்ந்தார். கனலில் கொஞ்சம் சாம்பிராணியைத் தூவினார்.

முகத்தில் ஈ வந்து உட்காராமல் விசிறியால் மெதுவாக வீசிக்கொண்டே இருந்தார்.

முற்றும்.. .. ..

# ஆயத்தம்

அன்று ஞாயிற்றுக் கிழமை. விடுமுறை. காலையில் எழும்பும் போதே அந்த நினைவுதான். சொல்லப் போனால் நேற்றிரவு உறக்கம் வரும் வரை கூட அந்தச் சிந்தனையாகவே இருந்தது. எப்படி இருக்கப் போகிறதோ? என்ன ஆகுமோ? பதற்றமும் எதிர்பார்ப்பும் நேற்றை விட இன்று அதிகம் இருந்தன.

கழிவறைக்கடன்கள் முடித்துக் குளித்துத் தயாரானபோது செய்தித்தாள் வந்திருந்தது. தலைப்புச் செய்திகளைக் கூடப்



பார்க்காமல் அதைப் பற்றி என்ன செய்தி வந்திருக்கிற தென்றுதான் முதலில் பார்த்தான். நிருபருக்கும் நேற்று அவனுக்கிருந்த மனநிலைதான் இருந்திருக்கும் போல. எப்படி வேண்டுமானாலும் நடக்கும் என்பது போலத்தான் எழுதியிருந்தது.

அது மதியம் பன்னிரண்டு பத்துக்குத்தான். சுவரில் இருந்த கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஏழே முக்கால்தான் ஆகியிருந்தது. கணக்குப் போட்டு இன்னும் நான்கு மணி இருபத்தைந்து நிமிடம் இருப்பதை அறிந்து பெருமூச்சு ஒன்றை வெளிப்படுத்தினான்.

இந்த நாலுமணி இருபத்தைந்து நிமிடமும் ஒரு நொடியில் கடந்து விட்டால்... ருசித்துச் சாப்பிடாமல் அவசரம் அவசரமாகவே காலை உணவை முடித்தான். உள்ளுக்குள் பதற்றம் அதிகரித்தபடியே இருந்தது. தொலைக்காட்சி செய்தியிலும் மனம் ஒன்றவில்லை. ஒவ்வொரு முறை அதை எதிர்கொள்ளும் போதும் இப்படித்தான் ஆகிவிடுகிறது. அதை மாற்ற அவனால் முடிவதில்லை.

வாசலுக்குச் சென்று காம்பவுண்டு சுவரில் சாய்ந்தபடி தெருவை நோட்டமிட்டான். ஞாயிற்றுக்கிழமை தெரு வெறிச்சோடிக் கிடந்தது. ஒரேயொரு நாய் மட்டும் எலும்புத்துண்டு ஒன்றைக் கவ்வியபடி ஓடி வந்தது. அவனருகே வந்ததும் சற்று நேரம் பார்த்தது. அவன் அதட்டவோ, சத்தம் போடவோ முயலவில்லை. என்ன நினைத்ததோ சட்டென திரும்பி, வந்த வழியே ஓட ஆரம்பித்தது. அதற்கு மேல் அவனுக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை.

உள்ளே வந்து நாற்காலியில் அமர்ந்தவன் செய்தித்தாளை எடுத்து அன்றைய தலைப்புச் செய்தியை வாசிக்க முயன்றான். முதல் நான்கு வரிகளை வாசித்தபின் மனம் செய்தியில் பதிய மறுத்தது. கண்கள் மட்டும் அனிச்சையாக எழுத்துகள் மீது ஊர்ந்தன. "ச்சே" என்றபடி செய்தித்தாளை மறுபடி மேசை மீது எறிந்தான். நாற்காலியில் அமர்ந்தபடியே கண்களை மூடி கைகளை பின்னோக்கி நீட்டிச் சோம்பல் முறித்தான். சற்று நேரம் படுத்தால் என்ன?

மல்லாந்து கட்டிலில் படுத்துக் கண்களை மூடினான். உறக்கம் வருகிறாற்போலத் தெரியவில்லை. கண்முன் காட்சிகள் கற்பனையாக ஓடின. எல்லாம் அதைப்பற்றித்தான். சட்டென அவன் தன் வலது கையை நெஞ்சுக்கு மேல் வைத்துச் சோதித்தான். அது இயல்புக்கு அதிகமாகத் துடித்தது. சுவாசமும் அதிக வேகமாக நடப்பதாகத் தோன்றியது. அவனுக்கு தன் மீதே ஒரு வெறுப்பு உண்டாயிற்று.

"ஏன் இந்த விஷயத்துக்குப் போய் இப்படியெல்லாம் பதற்றப்பட வேண்டும்". அவன் தன் அறிவைக் கொண்டு தறிகெட்டு ஓடும் சிந்தனையைக் கட்டுப்படுத்த முயற்சி செய்தான். இதெல்லாம் ஒரு பெரிய விஷயமே இல்லை. நடப்பது எதுவானாலும் நடக்கத்தான் போகிறது. அதைப்பற்றி ஏன் இத்தனை பரபரப்புக் கொள்ள வேண்டும். இது மிகவும் முதிர்ச்சியில்லாத நடத்தை. வெட்கத்துக்குரிய விஷயம். அவன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். சற்று நேரத்தில் அவனுக்குள் மனச்சோர்வும் கழிவிரக்கமும் தோன்றின. அவன் தளர்ச்சியடைந்தான்.

சில நிமிடத்திற்கெல்லாம் மீண்டும் அவனுள் பதற்றம் ஏற்பட்டது. அதைப் பற்றிய எண்ணங்கள் மறுபடி நினைவோட்டத்துள் கலந்து ஓட ஆரம்பித்தன. வெடுக்கென அவன் கட்டிலை விட்டெழுந்து நாற்காலியைக் கொண்டுவந்து வாசலில் போட்டு அமர்ந்தான். அருகே நட்டிருந்த, அப்போதுதான் பச்சைக் குருத்துகளை வெளிவிட ஆரம்பித்திருந்த தென்னங்கன்றைப் பார்த்தான். அதிலேயே சிந்தனையைக் குவிக்க முனைந்தான். ஆனாலும் நீண்ட நேரத்துக்கு அது முடியவில்லை. தலையை வலுவாக இரண்டுமுறை உதறிக்கொண்டு மல்லாந்து பார்த்தபடி கண்களை மூடிக்கொண்டான்.

எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது? இது ஒரு வியாதியோ, மன சம்பந்தமான நோயோ? ஒருவேளை "ஆப்ஸஸிவ் கம்பல்ஸிவ் டிஸ் ஆர்டரோ?" அந்த நோய்க் குறியீடு பற்றி அவனுக்குக் கொஞ்சம் தெரிந்திருந்தது. ஆனால் "அதை" எதிர்பார்த்திருக்கும் நேரங்கள் தவிர்த்து இத்தகைய அவஸ்தை ஏற்படுவதில்லை. அதை எதிர்பார்த்துக் காத்திருக்கையில் மட்டும்தான் இப்படி ஆகிவிடுகிறது.

"அதன் மீது எனக்கு இருக்கும் அதீதப் பற்றுதல் மற்றும் என் வாழ்வில் நான் அதற்குத் தரும் முக்கியத்துவம் சார்ந்துதான் இந்தப் பதற்றம் ஏற்படுகிறதோ"?

நாற்காலியை விட்டு எழுந்து வாசலில் குறுக்கும் நெடுக்குமாக நடக்க ஆரம்பித்தான். இதை எப்படித் தவிர்ப்பது, இந்த மன இம்சை ஏற்படாமல் தடுப்பது எப்படி?

நடந்து கொண்டிருந்தவன் எதையோ நினைத்துக் கொண்டது போல நின்றான். உள்ளே போய் சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டான். செருப்பை அணிந்துகொண்டு தெருவுக்கு வந்து நடக்க ஆரம்பித்தான். முக்கிய சாலைக்கு வந்ததும் நின்றான். சாலையில் கிழக்கே போனால் நாலைந்து தெருக்கள் தாண்டியதும் ஊர் முடிந்து வயல்கள் தொடங்கும். மேற்கே நடந்தால் முதலில் பேருந்து நிலையம். அதன் பின் மார்க்கெட் எனப்படும் சிறிய கடைவீதி. அதன்பின் தெருக்கள் விரிந்து ஊர் நீளும். அவன் மேற்குத் திசையிலேயே நடக்க ஆரம்பித்தான்.

அரசுப் பேருந்து ஒன்று சொற்ப பயணிகளுடன் அவனைக் கடந்து முன் சென்றது. பேருந்து நிலையத்தில் சில பயணிகள் பேருந்துக்காகவும் சில பிச்சைக்காரர்கள் தருமவான்களுக்காகவும் காத்திருந்தனர். சுவர் விளம்பரங்களைப் பார்த்துக்கொண்டே நடந்தான். "அதை" நினைவூட்டும் விளம்பரம் ஏதேனும் கண்ணில் பட்டுவிடப்போகிறது என லேசாகக் கிலேசமுறவும் செய்தான். இப்படி யோசித்ததன் புகுத்தி விட்டமைக்காக தன்னைத்தானே கடிந்துகொண்டான். எதிரே தென்பட்ட காலி ஐஸ்க்ரீம் கப் ஒன்றைக் கோபத்துடன் எற்றினான். அது உருண்டு வழியோரம் போய் விழுந்தது.

மக்கள் நடமாட்டம் குறைந்த அல்லது நடமாட்டம் அறவே இல்லாத தெருக்கள் வழியாக நடந்துகொண்டிருந்தான். அவன் மனம் சுயகோபம், கழிவிரக்கம் இன்னும் குறைந்துவிடாத பதற்றம் - இவற்றால் நிறைந்திருந்தது. அவன் கிட்டத்தட்ட ஊரைக் கடந்து எல்லையில் இருந்த மாரியம்மன் கோயிலுக்கு வந்துவிட்டிருந்தான். கோயில் யாருமில்லாத அமைதியில் இருந்தது. சிறிய கோயில் ஒற்றை வேப்பமர நிழலில் சாந்தமாக நின்றிருந்தது. வேப்ப மரத்தடியில் சிறுபாறையொன்று கிடந்தது. அவன் பாறைமீது அமர்ந்தான்.

வேப்பமர நிழலும் பாறைக் குளிர்ச்சியும் இதமாக இருந்தன. அவன் மெதுவாக ஆசுவேசம் கொள்ள ஆரம்பித்தான். அப்படியே கைகளை தலைக்குக் கொடுத்து பாறைமீது மல்லாந்தான். பாறையின் குளிர்ச்சி ஒருவித சிலிர்ப்புடன் அவன் உடலெங்கும் பரவத் தொடங்கியது. அவன் தன்னையறியாமலேயே கண்களை மூடினான்.

எவ்வளவு நேரம் அப்படியே படுத்துக்கிடந்தான் என்பதை அவன் அறியவில்லை. எதேச்சையாக கண்களைத் திறந்து கடிகாரத்தைப் பார்த்தான். மணி பதினொன்று ஐம்பது. எழுந்து செருப்பை அணிந்துகொண்டு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான். இன்னும் இருபது நிமிடங்கள் தான் இருக்கின்றன. அதற்குள் வீடுபோய்ச் சேர்ந்துவிட வேண்டும். அவன் நடையில் வேகம் கூடியது. பழைய பதற்றமும் எதிர்பார்ப்பும் மேலிட அவன் நடையை எட்டிப் போட்டான். அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான். விறுவிறு என்ற நடைக்கு ஈடாக இதயத்துடிப்பும் சுவாசமும் அதிகரித்தன.

மார்க்கெட்டைக் கடக்கும்போது பன்னிரண்டு பத்துக்கு ஏழு நிமிடங்களே இருந்தன. நேரத்துக்குள் போய்விடமுடியும் என அவன் நம்பிக்கை கொண்டான். பேருந்து நிலையத்தில் இன்னும் கூடுதலாகப் பயணிகள் காத்திருந்தனர். பிச்சைக்காரர்கள் குறைந்திருந்தார்கள். தன் தெருவுக்குள் நுழைகையில் அவனுக்குள் பதற்றமும் வெகுவாக அதிகரித்து விட்டிருந்தது.

அவனையறியாமலேயே அவனது நடை ஓட்டமாக மாறிவிட்டிருந்தது. வீட்டுக்குள் நுழைந்தபோது மூச்சு ஏகமாக வாங்கியது. நெஞ்சு அடித்துக்கொள்வது அவனுக்கே கேட்கும் போல இருந்தது.

நன்றி - தமிழ்கூடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழர் இடர்களைந்தே வாழ நவராத்திரி நாயகியே -இன்னருளை வீசு-

எக்கால தேவியே மலையாள பகவதி தமிழர்
இடர் களைந்தே வாழ அருளொளியை வீசிவா
அக்காலம் அமைதியாயிருந்த பொற்காலம்
அனைத்துமே அகன்றின்று பேரவலமாச்சு
இக்காலம் கலிகாலம் புரியாத நோய்கள்
எங்குமே அமைதிநிலை இல்லாத கோலம்
சிக்கலுக்குள் தமிழர் சிக்கித் தவிக்கும்
சீர்கெட்ட காலம் சீர்பெற அருளுவாயே!

ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் நானுன்
இணையடியை மறவாது துசிபாடவைப்பாய்
வாழுமுறிமையும் மனித நன்னேயமும்
வரையறை வகுக்காத சுதந்திரவாழ்வையும்
ஆழுமதிகாரம் அனைத்து இன மக்களையும்
அரவணைத்தே நாட்டில் அமைதிநிலை காட்டி
வாழும் படிக்கு நல்வழி காட்டுமம்மா
வழமான சேனையூர் வாழ்முத்துமாரியே!

இக்கணம் இதுநல்ல வேளையிது அம்மா துன்ப
இருள் சூழ்ந்த மூதூர் கிழக்கெங்கும் துலங்க
சக்கரம் வாழ் சூலம் அக்கினியு மேந்தி நீ
சங்குநாதம் உடுகு பறைமேளமுமொலிக்கவா
திக்கற்று அகதியாய் நடைபெற்ற போரினால்
திசைதப்பிப் போய் நாங்கள் திரும்பி
வந்துள்ளோம்
சொற்கா புரியாக இப்பகுதி மாறவும்
சுபீட்ச மாய்வாழவும் எமக்கருளுவாயே!

– சேனையூர் அ.அச்சுதன் –

## வாழியவே!

கூழைப் பலாக்களினைக் கொத்திக்கொத்தி - நீ
கொத்தணியில் முன் நின்றாய் மரங்கொத்தியே!
வாழை மரத்தனை நீ கொத்திப் போயே - பெரும்
வருத்தமடைந்துவிட்டாய் மரங்கொத்தியே!

எங்கே பறந்துவிட்டாய் மரங்கொத்தியே - இதை
என்றென்றும் மறவாதே மரங்கொத்தியே!
இங்கே இருப்பவற்றில் பல மரங்கள் - சொண்டு
ஏறாத வாழையன்றோ மரங்கொத்தியே!

இந்தப் பக்கம் தலையைக் காட்டிவிடாதே - ஐயோ,
எல்லாமே ஊழ்வினைதான் மரங்கொத்தியே!
உந்தன் அழகை நாங்கள் மெச்சுகின்றோம் - இரை
உதவாத வாழைக்கல்லோ புரியவில்லை!

எல்லாப் பறவைகட்கும் ஒரு பாடம் - இனி
எங்கும் நடந்திடாதே இது போன்றே!
வல்லமையே, வாழையிடம் போகாமல் - நீ
வாழ்க எங்கிருந்தாலும் வாழியவே!

– கணக்காய்வாளன் –

## நன்றாம்!

ஆசு இரிந்தோரா, ஆசிரியர் எல்லோரும்?
மாசுடையோர் சிலரேனும் மண்ணதிலே கிடையாதா?

கை தொட்டுக்கால்தொட்டுக் கழுத்தைத்தொடுவோரும்
மெய்யாய்க் கிடையாதா, மேலான பள்ளிகளில்?

பள்ளி எனில் பொருளைப் படுக்கை எனக் கொண்டாரோ?
வாட்போருக் கிங்கெவரும் வாரார் எனுந்துணிவோ?

இத்தகையோர் கல்வியினை எவ்வாறு கற்பிப்பார்?
எத்தகைய வழிகாட்டல் எம்மாணவர்க் களிப்பார்?

ஆசிரிய குலத்துக்கே அவமானந்தேடுபவர்,
மாசிலா மணியாரா? மானத்தின் காவலரா?

கல்விக்கண் கொள்ளமல் காமக்கண் கொள்கின்ற
பொல்லாதாரைக்கண்டு புறமொதுக்கலே நன்றாம்!

பெண்குலமும் கராட்டிப் பெரும் பயிற்சி கொண்டாலே
தன்னைத்தான் வருநாளில் தரணியிலே காத்திடலாம்!

பாதகம் செய்பவரைக் கண்டால் -
நீ பயங் கொள்ளலாகாது பாப்பா!
மோதிமிதித்து விடுபாப்பா -
அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா
- பாரதி -



## பிரியாவிடை

– தேத்தாமரத்தான் –

வறண்டு போன உனது முத்தத்தை
சாக்குருவிகள் சத்தமிடும் கனவோடையின்
மேல் வீசி எறிகிறாய்....தெறித்து பறக்கும்
திவலைகளின் துளிகளில் உனக்கும்
எனக்குமான பிரியாவிடை
நிகழ்ந்திருந்தது....

உறைநிலை குளிரினால் நிரம்பிய
ஒரு குவளை மதுவும் தீராவேட்டை
ஒன்றில் குரல்வளை நெரிக்கப்பட்ட
வான்கோழியின் கனத்த ஊனும்
உரிமமாக்கப்பட்டிருந்தது அந்த
பிரியாவிடையில்....

கறுத்த ஆடைக்குள் ஒளிந்து
கொண்டிருந்த உன் அங்கங்களும்
ஞானப்பசியில் உழலுகின்ற உன்
நயனங்களும் நினைவு பரிசு கேட்டு
அடம் செய்கையில் நீ வழிப்பறி செய்து
கொள்கிறாய் என் நினைவு கிடங்கில்
ஊறப்போடப்பட்டிருந்த உன் கடைசி
ஈரமுத்தமொன்றை....

பாழும் மாளிகை ஒன்றின் கடைசி
அறையில் ஒளித்து கிடந்த இருட்டை
இழுத்து வந்து சாட்சியாக்குகிறாய்
இனி பார்க்கவே கூடாதென்ற சத்திய
கடதாசியின் ஒப்பமொன்றுக்காய்....

கோப்பையின் அடியில் மண்டிக்கிடந்த
மதுவின் மீந்த துளிகள் மட்டும்
சேமிக்கப்படுகின்றன உன் நினைவு
சுமந்த பாடலின் இறுவெட்டாய்....

மூழ்க தொடங்கும் மணல் திட்டொன்றின்
கடைசி துகள்களை விழுங்கிகொள்கிறது
கரை தேடிய அலைகள் ரெண்டு

# கொட்டியாபுரத்து சிங்கம்

**சம்பூர் சதீஸின்**

**கொட்டியாபுரம்**
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 - 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

கடந்த வார தொடர்ச்சி .. ..

இவ்வாறு கண்டியரசனுடனான ஒப்பந்தப்படி ஒல்லாந்தர் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற காலங்களில் இடையிடையே

..... ........... .......

இனி... ...

காலங்களில் இடையிடையே ஏற்படுகின்ற சம்பவங்களினால் இரு தரப்பினரும் போர் புரிவதும் பின் சமாதானமாகப் போவதுமாக இருந்தனர். இதனொரு அம்சமாக கண்டிரசன் பிரான்சியருக்கு கொட்டியாரத் துறையில் கோட்டை கட்ட அனுமதியளித்ததும் அதன் பின் போர் ஒன்றின் மூலம் பிரான்சியரை ஒல்லாந்தர் அங்கிருந்து வெளியேற்றியதும், ஆங்கிலேயருக்கு வியாபார அனுமதியளித்து அவர்களுடன் வர்த்தக உறவுகளை மேற்கொண்டதுமான காரணங்களால் ஒல்லாந்தர் கண்டியரசன் மேல் கோபங் கொண்டிருந்தனர். இவற்றுடன் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனி கொட்டியாரத்தின் நிலங்களைக் கைப்பற்றுவதன் மூலம் அதிக வரிகள், வருமானங்களைப் பெறலாம் என்னும் நோக்கத்திற்காக கண்டியரசின் முக்கிய ஆதிக்கப் பகுதியான கொட்டியாபுரத்தின் மீது போர் தொடுக்கத் தயாராகினர்.



இதை ஒற்றர்கள் மூலம் முன்னரே தெரிந்து கொண்ட இளஞ்சிங்க வன்னிமை தெரிந்தெடுக்கப்பட்ட சிறந்த வீரர்களைக் கொண்ட படையொன்றை தயார்படுத்தினார். தனது நண்பனும் தளபதியுமான சத்யனின் தலைமையில் வாட்படை, புரவிப்படை, துப்பாக்கிப்படை, விற்படை என்பன ஒழுங்கமைப் பட்டது.

கொட்டியாபுர கோட்டையிலிருந்து புறப்படும் படை கிழக்குப் பக்கமாகவே நகரப் போகின்றது என்பதை ஏற்கனவே ஒற்றர்கள் மூலம் அறிந்திருந்த இளஞ்சிங்கன் தனது படைகளை அங்கு நகர்த்தினான். ஒல்லாந்துப் படைகள் இடிமண் துறை ஆற்றைத் தாண்டியதும் அவர்கள் மேல் போர் தொடுப்பது என திட்டமும் தயார் செய்யப்பட்டது.

அவ்வாறே ஒல்லாந்துப் படைகள் இடிமண்துறையைத் தாண்டுவதற்காக அருகில் இருந்த மூங்கில் மரங்களைப் பயன்படுத்தி கட்டுமரங்கள் தயாரித்துக்கொண்டிருந்த போது போர் ஆரம்பமாகியது. கடும் மூர்க்கத்தனமாக இடம்பெற்ற இப்போரில் தளபதி சத்யன் தலைமையிலான படை வெற்றி பெற்றது.

எதிரிப்படைகளை குறைவாக மதிப்பிட்டதன் காரணமாக 46 பேர் கொண்ட சிறிய படையொன்றையே ஒல்லாந்தர் பயன்படுத்தினர். பெரும் போர் ஒன்றை எதிர்பார்க்காத ஒல்லாந்தர் இப்படை நடவடிக்கை மூலம் கொட்டியாபுரப்பற்று வன்னிமையை ஒப்பந்தம் மூலம் பணிய வைக்கலாம் என்றும் கண்டியரசனுடனான தொடர்பை துண்டிக்க வைக்கலாம் என்றுமே எதிர்பார்த்தனர்.

ஆனால் போர் செய்த இளஞ்சிங்கனின் படையினால் ஒல்லாந்து தரப்பில் ஒருவரை மாத்திரம் மீதம் விட்டு மற்றைய அனைவரும் உயிரிழக்க வேண்டியேற்பட்டது. அத்தோடு நில்லாது கொட்டியாரத்துறை, கொட்டியாரக் கோட்டையை நோக்கியவாறு இளஞ்சிங்கனின் படையினர் முன்னேறிப் போர் புரிந்தனர். இதனால் அங்கிருந்த ஒல்லாந்துப்படை சிறு படகுகளின் உதவியுடன் திருகோணமலைக் கோட்டைக்குப் பின் வாங்கினர். கொட்டியாரக் கோட்டை தீயிட்டுக் கொழுத்தப்பட்டது.

வெற்றிபெற்றுத் திரும்பிய படைவீரர்களை வரவேற்கும் முகமாக கொட்டியாபுர வன்னிமையின் தலைநகரான மேன்காமம் அலங்கரிக்கப்பட்டது. மக்களனைவரும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் காணப்பட்டனர். முத்தூரிலிருந்த படைகளுக்கு அங்கிருந்து நேரே மேன்காமம் திரும்புமாறு இளஞ்சிங்கன் கட்டளை இட்டிருந்தான். அதன்படி திரும்பிக் கொண்டிருந்த படை வீரர்கள் கோயில் மலையடியில் இருந்து மேளதாளங்களுடன் பெரியவெளி, முள்ளித்தீவு, பள்ளவெளி, நீலாப்பளை, கங்குவேலி முதலான கிராமங்களுக்கூடாக மேன்காமம் வரை சிறந்த வரவேற்பொன்றை வன்னிமை இளஞ்சிங்கன் கொடுத்து பெருமைப்படுத்தியிருந்தான்.

தனது நண்பன் சத்யனை ஆரத் தழுவிய இளஞ்சிங்கன் ஆனந்தக் கண்ணீர் சிந்தினான். நண்பா வரலாற்றில் எனக்கு ஓர் மகத்தான இடத்தைத் தந்து என்னை பெருமைப்படுத்தி யிருக்கின்றாய் என்று கூறினான். சத்யனும் பதிலுக்கு அரசே! இந்தப் போர் புரியும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்த பாக்கியம் நான் எனது கடமையைத் தான் செய்தேன் என்றான் பணிவாக.

நண்பனை மெச்சிய இளஞ்சிங்கன் நாளைய வரலாற்றில், அந்நிய தேசத்தவரை சிறிய தேசமான கொட்டியாபுரமும் எதிர்த்து நின்ற வீரத்தை பெருமையுடன் பறைசாற்றும் என்று புகழ்ந்துரைத்தவாறு நண்பனை அழைத்துக் கொண்டு அரண்மனைக்குள் உட்புகுந்தான். படைவீரர் அனைவருக்கும் தகுந்த பரிசில்கள் வழங்குமாறு ஆணையிட்டான் இளஞ்சிங்கன்.

### நூல் அரங்கேற்றம்

இவ்வாறு நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கும் பொழுது இளஞ்சிங்க வன்னிபத்தின் நல்லாட்சியின் காரணமாக கொட்டியாபுரப்பற்று மக்கள் சீரும் சிறப்புமாக செல்வச் செழிப்புடன் வாழ்ந்து கொண்டிருந்தனர். கோயில் திருவிழாக்களும், கலை இலக்கியங்களும் குறைவில்லாதவாறு சிறப்புடன் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பல புலவர்கள் தமது பாடல்களை இளஞ்சிங்க வன்னிமை முன் பாடி பரிசு பெற்றவண்ணமாக இருந்தனர். நாட்கள் பல கடந்தும் நரை தோன்றியும் அஞ்சா நெஞ்சன் இளஞ்சிங்கத்தின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஒரு நாள் அரசவையில் தம்பலகாமத்துப் புலவர் என்று தம்மை அறிமுகப்படுத்திய நபரொருவர் வன்னியனார் இளஞ்சிங்கன் முன் வந்து வன்னிபத்தையும், கொட்டியாபுரப்பற்றையும் புகழ்ந்து பாடி அரசரைக் கவர்ந்தார். மனமகிழ்ந்த இளஞ்சிங்கனும் புலவரை வணங்கி புலவர் பெருமானே தாங்கள் யார்? தங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று வேண்டினான்.

... பாகம் 20 தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஐ.ந வின் ஆய்வறிக்கை

ஐ.நா சபையை சேர்ந்த கலை மற்றும் கலாச்சார குழுவினர், உலகம் முழுவதும் பெண்கள் சினிமாவில் எப்படி சித்தரிக்கப்படுகிறார்கள் என்பது பற்றி 4 ஆண்டுகள் ஆய்வு செய்தார்கள். அதன் முடிவுகள் இப்போது வெளியிடப்பட்டுள்ளது. அதில் இந்திய சினிமாவில் 95 சதவிகித பெண்கள் கவர்ச்சிக்காகவே பயன்படுத்தப்படுகிறார்கள். கிளாமர் காட்டுவதற்கென்றே ஹீரோயின்களை தேர்வு செய்கிறார்கள். அவர்களுக்கு கதையில் எந்த முக்கியத்துவமும் இல்லை என அவ்வாய்வு தெரிவித்துள்ளது.

## ரஜனி மகளால் தயாரிப்பாளர் மரணம்

பெரும் எதிர்பார்ப்புடன் கடந்த சில நாட்களுக்கு முன்னர் வெளிவந்த தெலுங்கு சூப்பர்ஸ்டார் நடித்த “அகடு“ திரைப்படம் எதிர்பார்த்த வெற்றியை பெறாததால், இந்த படத்தை வாங்கி விநியோகம் செய்த ஒருவர் மனம் நொந்து தற்கொலைக்கு முயற்சி செய்ததாக திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது. மகேஷ்பாபு, தமன்னா, ஸ்ருதிஹாசன் நடிப்பில் சமீபத்தில் ரிலீஸான “அகடு“ திரைப்படத்தின் வசூல் ஊடகங்களில் வருவதுபோல உண்மையான வசூல் இல்லை என்றும், தயாரிப்பாளரால் காட்டப்பட்ட பொய்யான கணக்கு என்றும் கூறப்படுகிறது.

## காஜலின் நிர்வாண ஸ்டில்ஸ் – சர்ச்சை



பிரபல தெலுங்கு இயக்குனர் கிருஷ்ண வம்சி இயக்கிய 'கோவிந்துடு அந்தரிவாடேலே என்ற படத்தில் ராம் சரண், காஜல் அகர்வால் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்திருக்கிறார். இந்த படத்திற்கு சென்சார் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நாயகி காஜல் நடித்த நிர்வாணக்காட்சி உள்பட படுகவர்ச்சியான காட்சிகளை நீக்கினால்தான் இந்த படத்திற்கு சான்றிதழ் தரப்படும் என சென்சார் அதிகாரிகள் கண்டிப்புடன் கூறியதால் இயக்குனர் வேறு வழியின்றி காஜல் அகர்வால் நடித்த சில காட்சிகளை வெட்டுவதற்கு சம்மதம் தெரிவித்தார்.

## மோடியுடன் இவர்களும் கலந்துகொள்ள அழைப்பு



கிளீன் இந்தியா திட்டத்தில் நடிகர்கள் கமல்ஹாசன், சல்மான் கான், ப்ரியங்கா சோப்ரா உள்ளிட்டோரும் பங்கேற்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார். அமெரிக்க பயணத்தை வெற்றிகரமாக முடித்து கொண்டு இந்தியா திரும்பிய மோடி, டில்லியில் கிளீன் இந்தியா எனும், நாடு முழுவதையும் தூய்மைப்படுத்தும் திட்டத்தை துவக்கி வைத்தார். கையில் துடைப்பம் ஏந்தி அவரும் சுத்த பணியில் ஈடுபட்டார்.

## 14 வருட தவம்





இயக்குனர் மணிரத்னத்தின் ஆஸ்தான ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம். மவுனராகம், நாயகன், அக்னி நட்சத்திரம், அஞ்சலி, என இருவரும் இணைந்து பணியாற்றிய படங்கள் வெற்றி பெற்றுள்ளன. கடைசியாக அலைபாயுதே படத்தில் இணைந்து பணியாற்றினார்கள். இப்போது 14 வருடங்களுக்கு பிறகு மீண்டும் இணைகிறார்கள்.



## பால் ஜோடி சேர்ந்ததாலே கிடைத்தது பெரு வெற்றி

தனுஷ்-அமலாபால் நடிப்பில் சமீபத்தில் வெளிவந்து வெற்றியடைந்த படம் "வேலையில்லா பட்டதாரி". 75 நாட்களையும் தாண்டி ஓடிக்கொண்டிருக்கும் இப்படத்தை தற்போது இந்தியிலும் படமாக்க முடிவு செய்துள்ளனர். இந்தியில் தனுஷ் கதாபாத்திரத்தில் வேறு ஒரு நடிகரை நடிக்க வைக்கலாம் என முடிவு செய்திருந்ததில், தற்போது தனுஷையே இந்தியிலும் நடிக்கவைக்க முடிவு செய்துள்ளனர். படத்தை தமிழில் இயக்கிய வேல்ராஜே இயக்குவார் என தெரிகிறது.

## விஞ்ஞானி நடிகரானார்

1998ல் இருந்து அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தில் பணியாற்றியவர் பார்த்தி. சினிமாவில் சாதிக்க வேண்டும் என்பது அவரது சின்ன வயது கனவாம். அதனால் நாசாவில் இருந்து வந்து விட்ட அவர், விஞ்ஞானி என்ற படத்தை இயக்கி, ஹீரோவாகவும் நடித்துள்ளார். இப்படத்தில் மீராஜாஸ்மின் நாயகியாக நடிக்க, தலைவாசல் விஜய் ஒரு முக்கிய வேடத்தில் நடித்திருக்கிறாராம். மேலும், இரண்டு ஹீரோயின்களும் இருக்கிறார்களாம்.







## இரண்டாம் மனைவி

தொழில் அதிபருக்கு பிரியாமணியை கட்டி வைக்க பெற்றோர் விரும்புகின்றனர். இதற்காக கர்நாடகம், தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா ஆகிய நான்கு மாநிலங்களில் வசதியாக இருக்கும் தொழில் அதிபரை மாப்பிள்ளை பார்த்து வருகிறார்கள். ஏற்கனவே திருமணமான பிரபல தொழில் அதிபர்கள் பிரியாமணியை இரண்டாவது மனைவியாக வைத்துக் கொள்ள விரும்புவதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனை பிரியாமணி மறுத்துள்ளார். அவர் கூறும்போது, தொழில் அதிபருக்கு 2-வது மனைவியாக இருக்கமாட்டேன் என்றார்.

# சினிமுரசு

## திரை விமர்சனம்

### இயக்குனர் ரஞ்சத்தின் மெட்ராஸ்



அட்டக்கத்தி என்ற ஜாலியான காதல் கதையை படமாக்கிய இயக்குனர் ரஞ்சித் இந்த படத்தில் சீரியஸான கதையுடன் கூடிய காதலை படமாக்கியுள்ளார். கடந்த மூன்று வருடங்களாக தொடர் தோல்வியை கொடுத்து வந்த கார்த்தியை கைதூக்கி விட்ட பெருமை இயக்குனர் ரஞ்சித்தையே சேரும்.

இந்த படத்தின் ஹீரோ கண்டிப்பாக ஒரு சுவர்தான் என்றால் யாராவது நம்புவீர்களா? ஆனால் அதுதான் உண்மை. தங்கள் ஏரியாவில் உள்ள சுவரை பக்கத்து ஏரியாவில் உள்ள ஒரு அரசியல்வாதி ஆக்கிரமத்துக்கொள்வதும் அதனால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் ஆக்சன் காட்சிகள்தான் படத்தின் கதை.

கார்த்தியின் நண்பன் அரசியல் கட்சி ஒன்றில் முக்கிய புள்ளியாக இருக்கிறார். தங்கள் ஏரியாவின் சுவரில் பக்கத்து ஏரியாவில் உள்ள கண்ணன் என்பவர் ஆக்கிரமித்து போஸ்டர் ஒட்ட, அதில் ஏற்படும் பிரச்சனையால் கண்ணன் மகன் கொலை செய்யப்படுகிறான். இதற்கு பழிக்கு பழியாக கார்த்தியின் கண்முன்னே கண்ணன், கார்த்தியின் நண்பனை கொலை செய்கிறான். உயிருக்குயிரான நண்பனை கொலை செய்த கண்ணனை கார்த்தி எப்படி பழிவாங்குகிறார்? நண்பனின் ஆசைப்படி சுவரை மீட்டாரா? என்பதுதான் படத்தின் கதை.

வடசென்னை இளைஞருக்குரிய பாடி லாங்குவேஜ், மற்றும் வடசென்னை பாஷை அனைத்தும் அத்துபடியாகிறது கார்த்திக்கு. எவ்வளவு நாள் டிரைனிங் எடுத்தார் என்று தெரியவில்லை. நண்பனின் கொலையை பார்த்து ஆவேசமடைவது, வில்லனுடன் மோதுவது என கார்த்தியின் நடிப்பு அபாரம். பருத்தி வீரன், பையாவுக்கு பின்னர் கார்த்திக் ருசிக்க போகும் வெற்றிதான் இந்த மெட்ராஸ். கார்த்தியை காதலிப்பதும், பழிவாங்கும் எண்ணத்தில் இருக்கும் கார்த்தியின் மனதை மாற்ற முயற்சிப்பதும்தான் ஹீரோயின் கேதரீன் தெரசாவில் வேலை. நடிப்பதற்கு ஓரளவிற்கு வாய்ப்பு உள்ள கேரக்டர்தான். அவரும் ஏமாற்றவில்லை.

மற்றபடி படத்தில் நடித்திருக்கும் அத்தனை கேரக்டர்களையும் அளவாக நடிக்க வைத்து ஒரு இயல்பான படத்தை கொடுத்துள்ளார் ரஞ்சித். சந்தோஷ் நாராயணனின் பாடல்கள் அனைத்தும் கேட்கும்படியாக இருக்கின்றது. பின்னணி இசையை மிக அருமையாக அமைத்துள்ளார். படத்தின் விறுவிறுப்புக்கு எடிட்டிங் மிக அருமையாக உதவி செய்துள்ளது.



மொத்தத்தில் மெட்ராஸ் மெகா ஹிட் என்பதில் சந்தேகம் இல்லை. நம்பி பார்க்கலாம்.

## சினிமா குறுஞ் செய்திகள்



குழந்தைகளின் வாழ்க்கையை மையமாக வைத்து தயாராகி உள்ள படம் குற்றம் கடிதல். குழந்தைகளை குற்றவாளிகளாக அறிவித்து அவர்களின் வாழ்க்கையை நசுக்கிற கொடுமையை சொல்லும் படம். ஜி.பிரம்மா என்பவர் இயக்கி இருக்கிறார்.

"இரும்பு குதிரை" படத்திற்கு பிறகு அதர்வா "கணிதன்" என்ற படத்தில் நடித்து வருகிறார். துப்பறியும் திகில் கதையாக உருவாகும் இப்படத்தை புதுமுக இயக்குனர் சந்தோஷ் என்பவர் இயக்கி வருகிறார்.

ஐஸ்வர்யா ராய், சினிமாவுக்கு தற்காலிக முழுக்க போட்டு இருந்தார். தற்போது பல வருட இடைவெளிக்கு பிறகு மீண்டும் நடிக்க வருகிறார். சஞ்சய் குப்தா இயக்கும் இந்தி படத்துக்கு ஒப்பந்தமாகியுள்ளார்.

சிம்புவுக்கும் நயன்தாராவுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் இது நம்ம ஆளு படத்தின் வேலைகள் நிறைவு பெறாமல் தாமதமாகின்றன.

கடல் படத்திற்கு பிறகு மணிரத்னம் இயக்கும் புதிய படத்தில் முதலில் மகே'பாபு, நாகார்ஜ"னா ஆகியோர் நாயகர்களாக நடிப்பதாக இருந்தது. அதையடுத்து, இப்போது துல்கர் சல்மான் நடிப்பதாகவும் அதன் படப்பிடிப்பு அக்டோபர் 6-ந்தேதி முதல் தொடங்குவதாகவும்

லிங்குசாமி இயக்கத்தில் சூர்யா, சமந்தா நடித்த படம் அஞ்சான். லிங்குசாமியின் திருப்பதி பிரதர்ஸ் நிறுவனமும், யுடிவியும் இணைந்து தயாரித்த படம். தற்போது தமிழ் நாடு முழுவதும் 100 தியேட்டர்களுக்கு மேல் ஓடிக் கொண்டிருந்தாலும் தொடர்ச்சியாக 50 நாளை கடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

லிங்கா படத்தில் ரஜினியுடன் திரிஷா ஒரு பாடலுக்கு நடனம் ஆடப்போவதாக தகவல் வெளியாகியுள்ளது. திரிஷா ரஜினியுடன் இதுவரை நடிக்கவில்லை. திரிஷா ஒரு பாடலுக்கு குத்தாட்டம் ஆடுவதை தவிர்த்து வருகிறார். ஆனால் ரஜினி. படம் என்பதால் சம்மதிப்பார் என தெரிகிறது.

ரவிச்சந்திரன் நீண்ட இடைவெளிக்கு பிறகு இயக்கும் படம் நட்பதிகாரம் 79. ஓநாயும் ஆட்டுக்குட்டியும் படத்தில் நடித்த ராஜ் பரத், வல்லினம் படத்தில் நடித்த அம்ஜத்கான் ஆகியோர் ஹீரோக்களாக நடிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# HP புதிய வடிவில்

முன்னணி கணினி உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றான HP நிறுவனம் HP Stream எனும் புதிய லேப்டொப்பினை அறிமுகம் செய்கின்றது. இது 11.6 அங்குல திரை மற்றும் 13.3 அங்குல திரை என இரு பதிப்புக்களாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் 11.6 அங்குல திரையினைக் கொண்ட லேப்டொப்பின் விலை 199 டொலர்கள் ஆகவும், 13.3 அங்குல திரையினைக் கொண்ட லேப்டொப்பின் விலை 230 டொலர்களாகவும் காணப்படுகின்றது.

இவை இரண்டும் விண்டோஸ் 8.1 இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டதுடன் 2GB RAM, Intel HD Graphics, 32GB சேமிப்பு நினைவகம் மற்றும் 8.5 மணித்தியாலாங்கள் தொடர்ச்சியாக மின்னை வழங்கக்கூடிய மின்கலம் என்பவற்றினைக் கொண்டுள்ளன.

## Dexmo கையுறை

Dextra Robotics நிறுவனம் Dexmo எனப்படும் நவீன தொழில்நுட்பத்தினைக் கொண்ட கையுறை ஒன்றினை உருவாக்கி வருகின்றது. இது தொடர்பான தகவல்களை இந்த வாரம் அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது.



இக்கையுறையானது வழமையான கையுறைகளைப் போல் அல்லாது புற வன்கூடு போன்ற அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் ஊடாக Virtual Reality எனப்படும் சூழலில் உள்ள பொருட்களை தொட்டு அவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்த முடியும். மேலும் இச்சாதனத்தை STEM கட்டுப்பாடு எனப்படும் விசேட முறைமையுடன் இணைத்து பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஸ்மார்ட் கைபேசிகளுக்கு ஓய்வு


## Spotify

ஒன்லைனில் பல்வேறு வகையான பாடல்களை கேட்டு மகிழும் வசதியை வழங்கி வரும் Spotify ஆனது தனது சேவையை விஸ்தரிக்கும் முகமாக கனடாவில் அறிமுகம் செய்துள்ளது. தற்போது கனடா உட்பட 58 நாடுகளில் இச்வேவை வழங்கப்பட்டு வருகின்றது. பிரீமியம், மற்றும் இலவச சேவைகள் கனடாவில் கிடைக்கப்பெறுவதுடன், பிரீமியம் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு மாதாந்தம் 10 கனடியன் டொலர்கள் செலுத்த வேண்டும்.

மேலும் ஸ்மார்ட் கைப்பேசிகள், டேப்லட்கள் உட்பட ஏனைய கணனிச் சாதனங்களிலும் இச்சேவையினை பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் புதிய நடைமுறை

தற்போது 80 சதவீத மக்கள் ஸ்மார்ட் போன்களை பயன்படுத்த தொடங்கியுள்ளனர் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அவை தொலைதொடர்புக்கு மட்டுமல்லாது, பொழுது போக்குக்கும் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனால் ஆபத்துகள் அதிகம் உண்டு என்று சொன்னால் நம்ப முடிகிறதா? ஆம் கடந்த 2011ஆம் ஆண்டு மட்டும் ஸ்மார்ட் போன் உபயோகித்து 1,152 பேர் விபத்துகளில் சிக்கியுள்ளனர் என்ற அறிக்கை வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



இதற்காக சீனா ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதாவது ஸ்மார்ட் போன்களை பார்த்து கொண்டு சாலையில் செல்பவர்களுக்கு தனி சாலையும், மற்றபடி சாலை விதிகளை மதிப்பவர்களுக்கு வேறு சாலையும் வழங்கப்பட்டுள்ளது.

# விளையாட்டுப் பையன்

## போட்டோஷாப்பில் தமிழ் எழுத்து

போட்டோகிராபர்கள் மற்றும் போட்டோ கிராபிக் டிசைனர்களுக்குப் பயன்படும் ஓர் அருமையான மென்பொருள் போட்டோஷாப். போட்டோஷாப்பில் ஆங்கிலத்தில் எழுதுவதற்கு வசதி இருக்கும். ஆனால் தமிழில் எழுதுவது கடினம். தமிழ் எழுத்துருக்களை மென்பொருளை எடுத்துக்கொள்ளாது.

போட்டோஷாப்பில் பயன்படுத்த விரும்பும் தமிழ் எழுத்துருக்களை தரவிறக்கம்செய்து கொண்டு, அவற்றை கணினியில் உள்ள Fonts போல்டரில் சேர்க்க வேண்டும். பிறகு NHM Writer மென்பொருளின் துணையுடன் உங்களுக்கு வேண்டிய எழுத்துக்களை உள்ளிட்டு, அவற்றை காப்பி செய்துகொண்டுபோய் போட்டோஷாப்பில் பேஸ்ட் செய்யலாம். அல்லது e-Kalappai, Azhagi மென்பொருட்களினையும் பயன்படுத்தலாம். அழகி மென்பொருளிலேயே எழுத்துரு மாற்றிக்கொள்ளும் வசதி உண்டு. யுனிக்கோட் எழுத்துருக்களிலேயே பல வடிவ எழுத்துருக்கள் உள்ளன. அவற்றை Download செய்து பயன்படுத்தலாம். NHM Converter என்பது ஒரு எழுத்துரு மாற்றி மென்பொருளாகும். இந்த மென்பொருள் மூலம் ஒரு எழுத்துருவில் உள்ள வார்த்தைகளை மற்றொரு எழுத்துருவிற்கு மாற்றிக்கொள்ள முடியும்.

சுட்டி: Download Unicode Fonts - Download tamil True Type fonts

டவுன்லோட் செய்யப்பட்ட எழுத்துருக்களை காப்பி செய்துகொண்டு, கம்ப்யூட்டரில் Start பட்டனை அழுத்தி, Control Panel என்பதை கிளிக் செய்து,

Fonts போல்டரை திறந்து, அதில் Paste செய்துவிடலாம்.

பிறகு பாண்ட்போல்டரை மூடிவிடலாம்.

## இலகு இணைப்புகள் - ஹப்

கணனியில் இணைத்து பயன்படுத்தப்படும் அனைத்து துணைச்சாதனங்களும் இன்று USB இணைப்பினை அடிப்படையாகக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இவ்வாறான சாதனங்களை iMac சாதனங்களில் இலகுவாக இணைத்து ப்யன்படுத்துவதற்கு Huback iMac USB Hub எனும் சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது. உயர்வேகம், USB 3.0 தொழில்நுட்பத்தினைக் கொண்ட இதில் ஒரே தடைவையில் 4 சாதனங்களை பொருத்த முடிவதுடன், 2.5 அங்குல அளவுடைய வன்றட்டினையும் இணைத்து பயன்படுத்த முடியும்.



## வளைந்த மொனிட்டர்



பிரபல எலக்ட்ரானிக் நிறுவனம் எல்.ஜி. உலகில் முதல்முறையாக வளைந்த தன்மையுடைய அல்ட்ராவைட் மானிட்டர் (Curved UltraWide Monitor) ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

03.10.2014 அன்று அமெரிக்காவில் அறிமுகமான இந்த model 34UC97 மானிட்டரின் விலை $1,299 என்பது குறிப்பிடத்தக்கது. 34" அளவுள்ள இந்த மானிட்டரின் மூலம் Ultra Quad High Definition படங்களை பிரமாதமாக பார்க்கலாம்.

### அஹிம்சை வழிப்போரின் ஆரம்பமே அஹிம்சை தொடர்பான சிறந்த விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதே...

# காந்தியும் பெரியாரும்



தந்தை பெரியார் அவர்கள் ஈரோட்டில் தனிமனிதராக பொது வாழ்க்கையைத் தொடங்கியவர். ஈரோடு நகரமன்றத் தலைவராக அவர் செயலாற்றி வந்த காலத்தில் 1920இல் காந்தியாரால் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப்பட்டது.

அதில் இருந்த தீண்டாமை விலக்கு, மது விலக்கு ஆகியவை பெரியாரை மிகவும் கவர்ந்தன. முக்கியமாக தீண்டாமை விலக்கு மூலம், சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் ஜாதி வேற்றுமையை ஒழிக்க ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைப்பதாக எண்ணி காங்கிரஸில் இணைந்தார். காந்தியை முழுமையாக நம்பிய பெரியார் மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோது தனக்குச் சொந்தமான 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார்.

கோர்ட்டுகளை விலக்கும் காரியத்தில் தம் குடும்பத்திற்கு கோர்ட்டு மூலம் வரவேண்டிய 50,000 ரூபாயை அந்தக் காலத்திலேயே இழந்தார்.

1915ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் தேதி மாயவரம் (மயிலாடுதுறை) வருகை தந்த காந்தியாருக்கு விக்டோரியா நகர மண்டபத்தில் (வுழுறுமேர்யுடுடு) வரவேற்பு அளிக்கப்பட்டது. மயிலாடுதுறை நகரின் முக்கியப் பிரமுகர்கள் பலரும் இந்த வரவேற்பில் கலந்துகொண்டனர். நகரசபைத் தலைவரான நடேச அய்யர் வரவேற்புரை ஆற்றினார். ஆதிக்க ஜாதியினர் நிரம்பியிருந்த சபையில் காந்தியார் தனது பேச்சைத் தொடங்கினார். நீங்கள் வருந்தக்கூடிய சில சொற்களை நான் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது.

தீண்டத்தகாதவர்கள் என ஒரு வகுப்பார் உருவாகக் காரணமாக இருந்தவர்கள் யார்? எங்கெங்கே பிராமணர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் உயர்ந்தவர்கள் என்கிற மரியாதையை அவர்களே பெறுகிறார்கள். இந்தப் பாவம் அவர்களையே சாரும். பகவத்கீதை சொல்வதை நினைவில் கொள்ளுங்கள். பண்டிதனுக்கும், பாமரனுக்கும் எவன் வேறுபாடு பாராட்டுவதில்லையோ அவனே உண்மையான பிராமணன் என்று கீதை கூறுகிறது. மாயவரத்தில் பிராமணர்கள் பஞ்சம சகோதரர்களிடம் சமமாகப் பழகினால், மற்ற வகுப்பினர் அவர்களைப் பின்பற்றமாட்டோம் என்று சொல்லுவார்களா? தங்களது தற்கால நிலைமை பூர்வீக தவபலத்தால் கிடைத்தது என்று பிராமணர்கள் சொல்வார்களேயானால் அவர்களே தேசத்தை நாசமாக்கும் பாவிகளாவார்கள். மாயவரம் மக்களின் காலடியில் நின்று நான் கேட்கிறேன். வீடு, வாசல் இல்லாதவர்களை உணவுக்காகவும், தண்ணீருக்காகவும் கதறுபவர்களை விரட்டியடிப்பதுதானா தேசியம்? என்று பேசினார். அடுத்து 1927ஆம் ஆண்டு செப்டம்பர் 12ஆம் நாள் மயிலாடுதுறை ராஜன்

### அஹிம்சாமூர்த்தி காந்தியை சுயமரியாதை இயக்கத் தலைவர் பெரியாருடன் ஒப்பிடும் இக்கட்டுரை ஆய்வுக்கானதே!

தோட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் காந்தி தேவதாசிகள் நிலை பற்றி உரையாற்றினார். அந்தக் கூட்டம் நடைபெறுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் இசைவேளாளர்கள் வகுப்பைச் சேர்ந்தவர்கள் காந்தியைச் சந்தித்து, கோவிலுக்குத் தங்கள் வீட்டுக் கன்னிப்பெண்கள் தேவதாசிப் பட்டம் கட்டிவிடப்படுவதைவும், அவர்கள் வாழநேரும் கேவலமான வாழ்க்கையைப் பற்றியும் காந்தியிடம் கூறியிருந்தார்கள். எனவே தேவதாசிகள் பற்றி அந்தக் கூட்டத்தில் காந்தி விரிவாகவே பேசினார்.

அவர்களைத் தேவதாசிகள் என்று அழைப்பதன் மூலம் கடவுளையே நாம் அவதூறு செய்கிறோம். நமது காம இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்காக கடவுள் பெயரை இழுக்கிறோம். ஒழுக்கமில்லாத வாழ்க்கை வாழ்வதற்காக இம்முறை நீடிக்க வேண்டுமென்று சிலர் எண்ணுவதைப் பார்க்கும்போது வாழ்க்கையே கசந்துபோகிறது.

**அடுத்தவாரம் தொடரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் -21 வெளிநாடு தேவையா? மோகமா?



வி.என்.சந்திரகாந்தி

சற்று எண்ணிப்பார்த்தால் எம் நாட்டு மக்களுக்கு வெளிநாடு என்பது நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலான ஒரு தேவையாகவே ஆரம்பத்தில் இருந்தது. மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் நாட்டில் தோன்றிய அசாதாரண நிலை காரணமாக மக்கள் தமதும் பிள்ளைகளதும் பாதுகாப்பை தேடினர். இயக்கங்கள் இன விடுதலை பற்றி பேசிய அளவுக்கு தம்முள் ஒற்றுமையைப் பேணவில்லை. இளைஞர்களை கொள்கை ரீதியாக கவர்வதற்கு பதிலாக பலவந்த ஆட்சேர்ப்பில் முனைப்புக்காட்டினர். தம்மில் எவர் கை ஓங்கி இருக்கின்றதென்ற பலப்பரீட்சையில் வேறு அநாவசியமாக பல உயிர்கள் பறிக்கப்பட்டன.

இந் நிலையில்தான் அன்னையர், மதிப்பும் பெறுமதியும் மிக்க தாலிக்கொடியையும் மற்ற ஆபரணங்களையும் விற்று தங்கள் தங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பு நிமித்தம் அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பினர். வெளிநாடு சென்று கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை பிள்ளைகள் உயிராபத்து இல்லாமல் வாழ்ந்தாலே போதும் என்ற மனப்பாங்கே மேலோங்கி இருந்தது.

மற்றொரு பக்கம் இராணுவ சுற்றி வளைப்புக்கள், கைதுகள், மர்மக்கொலைகள் ஆகியவற்றுக்கு இளைஞர்கள் ஆட்படுத்தப் பட்டார்கள். கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. கல்வி கற்ற இளைஞர்களின் வாழ்வாதாரத்திற்கான தொழில் வாய்ப்புக்கள் புறக்கணிக்கப்பட்டன. குடும்ப பொருளாதாரம் அதலபாதாளத்திற்கு வீழ்ச்சியுற்றது!

குடும்ப பொறுப்பை ஏற்பது எமது இளைஞர்களின் பண்பாட்டுடன் இணைந்த விடயமாகும். எமது பெற்றோரை எப்படி பாதுகாப்போம்? எமது சகோதரிகளை எப்படி கரை சேர்ப்போம்? என்று அவர்கள் எண்ணத் தலைப்பட்டனர். தமது கல்வியை துறந்தனர், உத்தியோக மோகத்தை மறந்தனர். வெளிநாடு சென்று கூலி வேலை செய்தாலும் பரவாயில்லை எமது குடும்பங்களை வாழ வைப்போம் என உறுதி பூண்டனர்.

பெற்றோரும், வீடு வளவு, நிலம் புலம், நகை செல்வம் அனைத்தையும் பணயம் வைத்து தமது இன்னுயிர்களான பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தனர். ஏற்கனவே வெளிநாடு சென்ற பல இளைஞர்கள் தமது முயற்சியால் பல உறவுகளையும், நண்பர்களையும் வெளிநாட்டுக்கு எடுத்துள்ளனர்.

அதில் பரிதாபகரமான ஒரு விடயம் என்னவென்றால் ஆரம்பத்திலேயே வெளிநாடு சென்று தமது குடும்பத்துக்கும் சினேகர்களுக்கும் கைகொடுத்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் இன்றும் கூலி வேலை செய்தே பிழைக்கின்றனர்!

ஆனால் ஆரம்பத்திலேயே வெளிநாடு சென்றுவிட்டதனால் அவர்கள் அடைந்த இலாபம் ஒன்று இருக்கின்றது. அவர்களது பிள்ளைகள் அந்தந்த நாட்டில் உயர்கல்வியை பெற முடிந்தது. அதன் பயனாக நல்ல சம்பளத்துடன் நல்ல தொழிலில் அமர முடிந்தது. வசதியும் ஆடம்பரமும் மிக்க வீட்டை சுயமாக வாங்க முடிந்தது. தாய், தந்தை, பிள்ளைகள் அனைவருக்கும் தனித்தனியே படாடோபமான வாகனங்கள்!

பெற்றோர் பட்ட கஷ்டங்களை பிள்ளைகள் அறியமாட்டார்கள்! பல நாட்டு பிள்ளைகளுடன் கல்வி பயிலும் வாய்ப்பு அவர்களை நாகரீகத்தின் உச்சத்துக்கே கொண்டு சென்று விடுகின்றது. இனம், மதம், மொழி, தேசம் என்ற குறுகிய வரையறைகளை தாண்டி அவர்கள் வளர்கிறார்கள். சுதந்திரத்துடன் ஒருவருடன் ஒருவர் பழகுகிறார்கள். எது சரி, எது பிழை என்று தாமே சிந்திக்கிறார்கள். விரும்பிய விரும்பியபடியே வாழ்கிறார்கள். வெள்ளை நிறத்தவர்களை தங்கள் வாழ்க்கைத் துணையாக்கிக் கொள்கிறார்கள்!

தேவை எப்படி மோகத்துக்கு வழி அமைத்திருக்கிறதென்பதை சற்று யோசித்து பாருங்கள்..!

இந்த புதிய தலைமுறையினருக்கு தமது வம்சாவளியினர் இனம், மொழி, மதம் பற்றிய எந்த அக்கறையுமே கிடையாது. மாமன், மாமி, மச்சான், மச்சாள், மருமகன், மருமகள், பாட்டன், பாட்டி என்ற எந்த பாசமும் இல்லாமல் வளர்க்கப்பட்டவர்கள்தான் இவர்கள்.

என்னதான் சொன்னாலும் இவர்களது பெற்றோரும் இவர்களது நடவடிக்கைகளை கண்டு கொள்வதில்லை. அவர்களும் இப்போதெல்லாம் வெளிநாட்டு கலாசாரத்திற்கு இசைவாக்கம் பெற்று விட்டார்கள். எமது நாட்டில் இருக்கும் தம் உறவினர்கள் பற்றிய அக்கறைகளையெல்லாம் அவர்கள் மறந்து வெகுதூரம் போய் விட்டார்கள். 'எங்கடை ஆட்களுக்கு எந்த நாளும் கஷ்டம் தீரப்போவதில்லை' என்று புறு புறுக்க தொடங்கிவிட்டார்கள்.

தாம் தாம் அமைத்துக்கொண்டிருக்கும் ஆடம்பரங்களை பூர்த்தி செய்வதற்கு வருமானம் போதவில்லை என்றால் தாம் கஷ்டத்திலும் ஏழ்மையிலும் இருப்பதாக கூறுகின்றார்கள். விடுமுறைக்கு விடுமுறை மற்றொரு குடும்பத்துடன் இணைந்து பிற தேசத்துக்கு சுற்றுலா போவதை மிக மிக அவசியம் என கருதுகிறார்கள்.

தமது பிள்ளைகளின் விவாக வைபவத்திற்கு தம்மைச்சுற்றி அந் நாட்டில் இருக்கும் உறவுகளுக்கும் நண்பர்களுக்குமே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அழைப்பிதழ்களை மட்டும் தமது பெருமையை காட்டும் வகையில் அதிகூடிய செலவில் அச்சடித்து அனுப்பி விடுவார்கள். தமது உறவினர்கள் திகைப்படைய வேண்டும் என்ற நினைப்புத்தான் அது! மற்றும்படி எவர் வரவை எவர் எதிர்பார்த்தார்கள்!

எனது நண்பர் ஒருவரின் சகோதரி ஒருத்தி கனடாவில் 30வருடமாக வாழ்கிறாள். தனது மகளின் 'வரவேற்புபசாரத்திற்கு'(Reception) சகோதரனுக்கும், நெருங்கிய உறவினர் மூவருக்கும் அழைப்பிதழ் அனுப்பியிருந்தாள். கனடாவில் 300 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஒரு விருந்தினருக்கான ஹோட்டல் கட்டணம் நூறு கனடியன் டொலர். (ஏறத்தாள எமது ரூபாவில் 12,000/- ஆகும்) 300 பேருக்கான கட்டணம் 30,000/- கனடியன் டொலர். (எமது ரூபாவில் 3,600,000/-) தனது சகோதரனையோ உறவினரையோ மகிழ்விக்கு முகமாக அவள் எதுவும் செய்யவில்லை! ஆனால் 'ரிசப்சன்' முடிந்த கையுடன் மகளை தேன்னிலவு அனுப்பிவிட்டு தான் கணவனுடன் சுற்றுலா புறப்பட்டுவிட்டாள்! எப்படிப்பட்ட வெளிநாட்டு மோகத்தில் அவர்கள் மூழ்கி இருக்கிறார்கள் என்று பாருங்கள்! அன்பு குடிகொண்ட இதயத்தில் மோகமானது தோன்றுவதில்லை. அன்பு கருணையில் இருந்து பிறப்பது. மோகம் அகங்காரத்தில் இருந்து பிறப்பது. அதுவே வேறுபாடு.

# தேசிய SMS செய்திகள்

- **வெடிபொருட்களை பயன்படுத்திய மீனவர்கள் கைது**

  யாழ்ப்பாணம் - மண்டைதீவு கடலில் வெடிபொருட்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 14 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

- **பாராளுமன்றத்தேர்தல் முதலில் நடத்தப்படவேண்டும்**

  ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தல் ஒன்றை தாம் எதிர்பார்ப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

- **நாட்டில் ஆட்சிப் பாதையினை மாற்றியமைக்க வேண்டும்**

  நாட்டில் ஆட்சிப் பாதையினை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது. நாம் இனிமேலும் பொறுமை காப்பது நாட்டையே சீரழித்து விடும். அனைத்து கட்சிகளையும் ஒரே மேசைக்கு கொண்டு வர நான் தயார் என தெரிவிக்கும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் கோட்டை நாக விகாரையின் விகாராதிபதியுமான மாதுலுவாவே சோபித தேரர் இம்முறை ஜனாதிபதித் தேர்தலை தீர்மானிக்கும் சக்தியாக சிறுபான்மை வாக்குகளே அமையும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

- **கஞ்சா - பிக்கு விளக்கமறியலில்**

  கஞ்சா போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிக்கு ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

- **எரிபொருள் விலை பாரிய அளவில் குறைப்பு!**

  சவுதி அரேபியால் விற்பனை செய்யப்படும் மசகெண்ணையின் விலை குறைத்துள்ளதால் சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை என்றும் இல்லாத அளவிற்கு குறைவடைந்துள்ளது.

- **போலி நாணயத்தாள் வைத்திருந்தவர் கைது**

  மன்னார் பகுதியில் குறித்த சந்தேக நபரிடமிருந்து 5000 ரூபா போலி நாணயத்தாள் கைப்பற்றப்பட்டதால் அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

- **ஊடகவியலார் அச்சுறுத்தல்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்**

  02.10.2014 கோட்டை புகையிரத நிலையம் முன்னால் 12 மணியளவில் சிரச ஊடகவியலாளர் தாக்குதல் மற்றும் சட்டத்தரணிகள் அச்சுறுத்தல் ஆகியவற்றுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டின் கீழ் இடம்பெற்றது.

- **நீர்கொழும்பு மதுபான சாலைக்கு சீல்**

  நீர்கொழும்பு பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களுக்கு மதுபானம் விற்பனை செய்த மதுபானசாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

- **காவி உடையில் காதலி வீட்டுக்கு வந்த பிக்கு பொலிஸாரால் கைது**

  பேஸ்புக் மூலம் மேற்கொண்டு வந்த காதல் தொடர்பு காரணமாக கேகாலை பிரதேசத்திலுள்ள பிரிவெனா ஒன்றின் பிக்கு ஒருவர் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். 22 வயது பிக்கு ஒருவரே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டவராவார்.

- **ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்கு சம்பள நிலுவை வழங்க இணக்கம்**

  இலங்கை ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்கு சம்பள நிலுவை வழங்குவது தொடர்பான முறைப்பாட்டை தீர்த்து வைக்க முடியும் என சட்டமா அதிபர் 02.10.2014 மேன்முறையீட்டு நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

- **நேரடி விவாதத்திற்கு அழைப்பு**

  முஸ்லிம்களுக்கு எதிராக பொதுபலசேனா முன்னெடுத்துவரும் பொய் பிராசரங்கள் குறித்து நேரடி விவாதத்திற்கு வருமாறு அவ்வமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு மேல்மாகாண சபை உறுப்பினரும் ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளருமான முஜிபுர் ரஹ்மான் அழைப்பு விடுத்துள்ளார்.

- **ஜனாதிபதி தேர்தலுக்கு வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் தேவை**

  ஜனாதிபதி தேர்தல் நடக்குமாயின், தேர்தல் பிரச்சாரத்துக்கு 45 நாட்களுக்கு முதல் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் இலங்கைக்கு வரவேண்டும் அதற்கு அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டுமென ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவ சபையின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவத்துள்ளார்.

- **கூட்டமைப்புடன் அதிகாரத்தைக் கைப்பற்றுவது குறித்து பேசப்போவதில்லை**

  தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அதிகாரத்தைக் கைப்பற்றுவது குறித்து பேசப்போவதில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

# நிகழ்வுகள்

## "காந்தி ஜெயந்தி"



காந்தி சேவா சங்கத்தின் ஸ்தாபகராகிய நளினி காந்தன் ஐயா அவர்களின் தலைமையில் 02.10.2014 (வியாழக்கிழமை) அன்று காந்தி ஜெயந்தி கொண்டாடப்பட்டது. திருகோணமலை மாவட்ட நகரசபைத் தலைவர் அவர்கள் மகாத்மா காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்து கௌரவித்தார். அவரைத் தொடர்ந்து பலரும் அவ் விழாவில் மாலை அணிவித்தனர். அத்துடன் பல் பாடசாலைகளிலும் இருந்து மாணவர்கள் கலந்து கொண்டனர். அப் பாடசாலை மாணவர்களுக்கு எமது காந்தி ஐயா அஹிம்சை வழி என்றால் என்ன? இனி வருங் காலங்களில் நாம் அனைவரும் அஹிம்சா வழியைப் பின்பற்ற வேண்டிய தேவை என்பன குறித்தும் விளக்கம் தந்தார்.





## பிரம்மாண்ட இசை நிகழ்ச்சி

மட்டக்களப்பில் நடைபெற இருக்கும் மாபெரும் இசை நிகழ்ச்சிக்கு பாடகர் திவாகர், அழகேசன், நித்யஸ்ரீ வைஜெயந்தி, சரத் சந்தோஷ், ஆகியோரும் வருகை தரவுள்ளனர்.

முதற் தடவையாக மட்டக்களப்பில் நடைபெற இருக்கும் இவர்களின் இசை நிகழ்ச்சியை தவற விடாதீர்கள்.

## எரிகிடங்கைப் பயந்து கொள்

மட்டக்களப்பு மாநகர சபையினால் நடாத்தப்பட்ட உலக சிறுவர் தின நிகழ்வுகள் காந்தி பூங்காவில் புதன்கிழமை (01.10) நடைபெற்றது. மாநகர சபையினால் நடாத்தப்படும் பாலர் பாடசாலைகளின் மாணவர்கள் பிரதம விருந்தினர் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும். மாநகர ஆணையாளர் எம்.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 02

1. தேசப்படங்களில் பிரதான பாதையை காட்டப் பயன்படுத்தும் நியம நிறம் எது?
   1. பச்சை 2. சிவப்பு 3. செம்மஞ்சள் 4. கறுப்பு
2. எரிந்து கொண்டிருக்கும் தணல் நெருப்பில் காய்ந்த உப்புக்கட்டியை இடும்போது நடைபெறுவது?
   1. உப்பு கட்டி உருகுதல் 2. உப்புக்கட்டி எரிதல்
   3. தீ அணைந்து போதல்
   4. உப்புக்கட்டி சத்தத்துடன் வெடித்தல்
3. கையில் ஒட்டியுள்ள பலாக்காய்ப்பாலை எளிதாக அகற்ற பயன்படுத்தத்தக்கது எது?
   1. சவர்க்காரம் 2. குளிர்நீர் 3. வெந்நீர் 4. மண்ணெய்
4. 8கி.மீ நீளமான பாதையொன்றில் 250மீ இடைவெளி விட்டு மின்கம்பங்கள் நடப்பட்டன. நடப்பட்ட மின் கம்பங்கள் எத்தனை?
   1. 33 2. 34 3: 32 4. 35
5. உப்பை போட்டு வைக்க பொருத்தமான பாத்திரம் எது?
   1. அலுமினியப்பாத்திரம் 2. கண்ணாடிப் பாத்திரம்
   3. எவர்சில்வர் பாத்திரம் 4. பித்தளைப் பாத்திரம்
6. வலைப்பந்தாட்டக் குழுவிலுள்ள ஆட்டவீரர் தொகை (பதிலாட்டக்காரரைத் தவிர)
   1. 6 2. 7 3. 8 4. 9
7. உணவு நஞ்சடையும் சந்தர்ப்பம் பின்வருவனவற்றில் எது?
   1. மண்பாத்திரங்களில் உணவு சமைத்தல்
   2. பீங்கான் பாத்திரங்களில் உணவு பரிமாறுதல்
   3. அலுமினியப் பாத்திரங்களில் புளிப்பான உணவைச் சமைத்தல்
   4. சமைத்த உணவு வகைகளை நன்றாக மூடி வைத்தல்.
8. 100செ.மீ நீளமுள்ள ஓர் அளவை நாடாவின் நடுவில் 1.5செ.மீ நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இரு துண்டுகளும் 5செ.மீ வீதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன. தற்போது அளவை நாடாவின் நீளம் யாது?
9. தேசப்படங்களில் பிரதான பாதையை காட்டப் பயன்படுத்தும் நியம நிறம் எது?
   1. பச்சை 2. சிவப்பு 3. செம்மஞ்சள் 4. கறுப்பு
10. எரிந்து கொண்டிருக்கும் தணல் நெருப்பில் காய்ந்த உப்புக்கட்டியை இடும்போது நடைபெறுவது?
    1. உப்பு கட்டி உருகுதல் 2. உப்புக்கட்டி எரிதல்
    3. தீ அணைந்து போதல்
    4. உப்புக்கட்டி சத்தத்துடன் வெடித்தல்
11. கையில் ஒட்டியுள்ள பலாக்காய்ப்பாலை எளிதாக அகற்ற பயன்படுத்தத்தக்கது எது?
    1. சவர்க்காரம் 2. குளிர்நீர் 3. வெந்நீர் 4. மண்ணெய்
12. 8கி.மீ நீளமான பாதையொன்றில் 250மீ இடைவெளி விட்டு மின்கம்பங்கள் நடப்பட்டன. நடப்பட்ட மின் கம்பங்கள் எத்தனை?
    1. 33 2. 34 3. 32 4. 35
13. மகாசேனன் கட்டுவித்த குளம் யாது?
    1. திசாவாவி 2. கலாவாவி
    3. மின்னேரியாக்குளம் 4. பராக்கிரம சமுத்திரம்

**பின்வரும் கவிதையை வாசித்து விடையளிக்குக.**

செக்கச் சிவந்த செங்கதிரோனும்
கிழக்கினில் வந்துவிட்டான் - புவி
மக்கள் கண்விழித்துக் கிளம்பிட
வானில் உதித்துவிட்டான்

கொக்கரக்கோவெனக் கோழியுங் கூவுது
கொக்கோடு பற்பல புட்களும் மேவுது
சக்கரம் போலவே ஜகம் சுழன்றாடுது
தொக்கி நின்ற இருள் சொல்லாமல் ஓடுது.

14. இக்கவிதையில் வருணிக்கப்படும் காட்சி என்ன?
15. பின்வரும் ஒவ்வொன்றினதும் கருத்தை எழுதுக.
    1. செக்கச்சிவந்த 2. கண்விழித்தல்
16. இங்கு உள்ள உவமானத்தை எழுதுக.
17. இக்கவிதையில் குறிப்பிடப்படும் இரு பறவைகளின் பெயர்களை எழுதுக.
18. 'நின்ற இருள் சொல்லாமல் ஓடுது' என்பதன் மூலம் கவிஞர் வெளிப்படுத்த முயலும் கருத்து யாது?

# குறுக்கெழுத்து புதிர் 029

முடிவுத் திகதி : 09.10.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | | 15 | | ■ | 2 | ட | 16 |
| 3 | டு | | | ■ | ■ | 11 | 17 | |
| 4 | 18 | 5 | 19 | 20 | 21 | | வ | |
| ■ | | ■ | 24 | வை | | 12 | | 22 |
| 6 | லை | | | | | 7 | | |
| ■ | ■ | ■ | | | ■ | | ■ | |
| 8 | | 23 | | 13 தி | | | ■ | |
| ன் | ■ | ப் | 9 | | | க் | | ■ |
| | ■ | | ■ | 10 | | | | ■ |

## இடமிருந்து வலமாக

1. தர்மத்திற்கு எதிரானது
2. திருகோணமலையைச் சூழ உள்ளது - வலமிருந்து இடமாக
3. இதற்காகத்தான் இவ்வளவு போராட்டங்களும்
4. நட்சத்திரம்
5. இந்திய விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர்
6. சுடலைக்காப்போன்
7. சிறு பறவை - ஹெலிகொப்டரை இப்படியும் தமிழர் அழைப்பர்
8. நாட்டின் தலைவர்
9. சிவனுடன் சேர்ந்திருப்பவள்
10. இதுவும் வேதம் ஓதும்
11. இளைஞர்களுக்கு இது போட ரொம்பப் பிடிக்கும் - குழம்பியுள்ளது.
12. கமகம என்பது ஓர் இரட்டைக்............ ஆகும்.
13. சனக்கூட்டத்தை இவ்வாறும் அழைப்பர்.

## மேலிருந்து கீழாக

1. உப்பின்றி அவிப்பது
8. சளி பிடிப்பதைச் சொல்லலாம்
12. சுவைமிக்க பாணி - குழம்பியுள்ளது
14. நிறுத்துவதைச் சொல்லும் கட்டளைச் சொல்
15. முருகனுக்குப் பிடித்த இடம்
16. இதனைப் பட்டால் நிம்மதியில்லை
17. ஒரு கைபிடி குழையல் சோறு
18. வானத்தின் நிலை
19. இது இல்லாத உணவை உண்ணுவது திருப்தி தராது.
20. தமிழரசுக் கட்சித் தலைவர்
21. வானகப் பெண்கள் - குழம்பியுள்ளது
22. இந்தியாவின் 10வது பிரதமர்
23. பிரபல்யமான சுல்தான் ஒருவர்

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

***விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :***
***மலைமுரசு. இல - 159ஏ,***
***கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***

## புதிர் 028 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | ண | ப | 17 தி | ■ | 2 த | ள | ப | 18 தி |
| தி | ■ | ■ | 3 ரு | 19 வா | ண் | 20 டா | ■ | வ |
| 4 ரை | க | ற் | ட | 5 க | ணீ | ர் | 6 ம | ரு |
| 7 கு | 21 சே | ல | ன் | ரை | ர் | 8 வி | ட | லை |
| ■ | 9 வ | ட | ப | கு | 22 தி | ன் | ம் | ■ |
| 10 ப | 15 க | ல | 23 வ | ன் | 11 மி | ன் | ன | ல் |
| ட் | ன் | ■ | 12 ரு | து | 24 சு | ■ | 16 க | ■ |
| டோ | ■ | ■ | ண | ■ | 13 வ | ண் | ண | ம் |
| 14 லை | க் | கா | ன் | ■ | டு | ■ | ம் | ■ |

## பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

***திரு. மகாலிங்கம்***
***112, சென்ரல் வீதி, திருகோணமலை.***

***திருமதி. வீ. தில்லைராசா***
***20ஏ, மத்திய வீதி, திருகோணமலை.***

***செல்வி. ச. பானினி***
***இல01, மெயின் வீதி, திருகோணமலை.***

# சிறுவர் முரசு



## சிந்திக்க .. ..

**குறை இல்லாதவன் மனிதன் இல்லை: அதைக் குறைக்கத் தெரியாதவன் மனிதனே இல்லை!!!**

## யார் பெரியவர்...?? குட்டிக்கதை



ஒரு ஏழை ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தான். அவன் தன் வீட்டுத் தேவைக்காகத் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

தண்ணீர் எடுத்து வர அவன் இரண்டு பானைகளை வைத்திருந்தான். அந்தப் பானைகளை ஒரு நீளமான கழியின் இரண்டு முனைகளிலும் தொங்க விட்டு, கழியைத் தோளில் சுமந்து செல்வான்.

இரண்டு பானைகளில் ஒன்றில் சிறிய ஓட்டை இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும் பொழுது, குறையுள்ள பானையில் பாதியளவு நீரே இருக்கும்.

குறையில்லாத பானைக்குத் தன் திறன் பற்றி பெருமை. குறையுள்ள பானையைப் பார்த்து எப்பொழுதும் அதன் குறையைக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டே இருக்கும்.


இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. கேலி பொறுக்க முடியாத பானை அதன் எஜமானனைப் பார்த்துப் பின் வருமாறு கேட்டது.

"ஐயா! என் குறையை நினைத்து நான் மிகவும் கேவலமாக உணர்கிறேன். உங்களுக்கும் தினமும் என் குறையால், வரும் வழியெல்லாம் தண்ணீர் சிந்தி, உங்கள் வேலைப் பளு மிகவும் அதிகரிக்கிறது. என் குறையை நீங்கள் தயவு கூர்ந்து சரி செய்யுங்களேன்" அதன் எஜமானன் கூறினான்.

"பானையே! நீ ஒன்று கவனித்தாயா? நாம் வரும் பாதையில், உன் பக்கம் இருக்கும் அழகான பூச்செடிகள் வரிசையைக் கவனித்தாயா? உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னமே தெரியும். அதனால்தான் வழி நெடுக பூச்செடி விதைகளை விதைத்து வைத்தேன். அவை நீ தினமும் சிந்திய தண்ணீரில் இன்று பெரிதாக வளர்ந்து எனக்கு தினமும் அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்து நான் வீட்டை அலங்கரிக்கிறேன். மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன்"

இதைக் கேட்ட பானை கேவலமாக உணர்வதை நிறுத்தி விட்டது. அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப் படாமல் தன் வேலையைக் கருத்துடன் செய்யத் தொடங்கியது.

**- தமது கடமையை கண்ணென செய்தால் எதைப்பற்றியும் குழம்பத் தேவையில்லை.**



செல்வன்.நவீன் பரன்
62/13, கண்டி வீதி, திருகோணமலை

## வண்டு

வண்ண வண்ண பூக்களிலே
வண்டு வந்து மேயுது
ரீங்காரம் செய்து கொண்டு
நடனம் எல்லாம் ஆடுது

எண்ணம் போல மது உண்டு
இனிய கீதம் பாடுது
மயங்கி மயங்கி விழுந்து கொண்டு
நண்பர்களை கூப்பிடுது

ஆறு காலால் நடனமாடி
கண்களை மயக்குது
மது தந்த பூக்களுக்கு
நன்றி சொல்லி பறக்குது



**- கு.ஜகதாந்ரீ -**
**தரம்04,**
**கோபாலபுரம் அ.த.க பாடசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. முகுந்தன் தனது சம்பளத்தில் 1/3ஐ உணவிற்கும், 1/6ஐ போக்குவரத்திற்கும் செலவு செய்கிறார். மீதிப் பணத்தில் 1/5ஐ புத்தகங்கள் வாங்கச் செலவு செய்கிறார்.

அ. போக்குவரத்து, உணவு ஆகிய இரண்டிற்கும் முகுந்தன் தனது சம்பளத்தில் எவ்வளவு பங்கை செலவு செய்கிறார்?

ஆ. புத்தகங்களை வாங்குவதற்கு முகுந்தன் தனது சம்பளத்தில் எவ்வளவு பங்கை செலவு செய்திறார்?

இ. இப்போது அவர் தம்மிடம் உள்ள மீதிப் பணத்தில் 1/4 ஐ ஒரு வங்கிக் கணக்கில் வைப்புச் செய்கிறார். அவ்வாறு வைப்புச் செய்யும் பணம் ரூ3000 எனின், முகுந்தனின் சம்பளம் எவ்வளவு?

02. சாவிக் கொத்து ஒன்று பார்த்த மாத்திரத்தில் சமமாகத் தோற்றும் 5 சாவிகளைக் கொண்டுள்ளது. எனினும் ஒரு குறித்த பூட்டை அவற்றில் ஒரு சாவியினால் மாத்திரம் திறக்கலாம். மாணவன் ஒருவன் எழுமாற்றாக ஒவ்வொரு சாவியையும் பயன்படுத்தி அப்பூட்டைத் திறப்பதற்கு அதிகபட்சம் இரு தடவை முயல்வதற்குத் தீர்மானிக்கின்றான். முதல் முயற்சி தோல்வியடைந்தால் மாத்திரம் அவன் மறுபடியும் ஒரு தடவை முயலும் அதேவேளை, அதற்காக எஞ்சியிருக்கும் நான்கு சாவிகளில் ஒன்றை எழுமாற்றாகத் தெரிந்தெடுக்கின்றான்.

அ. முதல் முயற்சியிலே பூட்டு திறக்கப்படுவதற்கான நிகழ்தகவு யாது?

ஆ. ஒவ்வொரு முயற்சியிலும் பூட்டைத் திறத்தல், திறக்காமை என்னும் நிகழ்ச்சிகளையும், அந்நிகழ்ச்சிக்குரிய நிகழ்தகவுகளையும் காட்டும் ஒரு வரிப்படத்தை வரைக.

இ. இரு முயற்சிகளில் எதில் மாணவன் பூட்டைத் திறத்தல் சாத்தியமாகும்?

03. 40 கிலோமீற்றர்/ மணித்தியாலயம் என்னும் கதியில் செல்லும் பேருந்து ஒன்று 2 மணித்தியாலயத்திற்கு செல்லும் தூரத்தைக் காண்க.

04. 1.5கி.கி நிறையுள்ள ஒரு வெற்றுப் பெட்டியினுள்ளே சம நிறையுள்ள 5 புத்தகங்கள் அடுக்கப்பட்டுள்ளன. புத்தகங்கள் உள்ள பெட்டியின் மொத்த நிறை 5.25கி.கி எனின், ஒரு புத்தகத்தின் நிறையைக் காண்க.

05. சமன்பாடு $3x+y-5=0$ இனால் தரப்படும் நேர்கோட்டின் படித்திறனைக் காண்க.

06. ஒருவர் ரூபா 75000 பெறுமானம் ஒள்ள பொருள் ஒன்றை கொள்வனவு செய்யும் போது 5வீத கழிவு கொடுக்கப்படுகின்றது எனின், பொருள்களை கொள்வனவு செய்யும் விலை யாது?

07. $\log 3.754=0.5745$ எனின், $\log 0.03754$ இன் பெறுமானம் யாது?

08. பொருள் ஒன்றை விற்கும் போது அதன் குறித்த விலையில் 8வீத கழிவு கொடுக்கப்பட்டுள்ளது. அப் பொருளின் குறித்த விலை ரூபா2500 எனின், அதன் விற்பனை விலையைக் காண்க.

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
30.08.2014 முதல் பிரதி சனி தோறும் மு.ப10-12 வரை G.C.E (O/L) மாணவர்களுக்கான மாதிரி வினாப் பரீட்சை நடைபெறவுள்ளது. முன்கூட்டியே பதிவு செய்து பங்குபற்றவும்.

## பாடம் : விஞ்ஞானம்

01. கருவில் நான்கு நிறமூர்த்தங்களைக் கொண்ட கலங்கள் உள்ள ஒரு தாவரத்தைக் கருதுக.

1. அத்தகைய ஒரு தாவரத்தின் பூவில் இருக்கும் சூலகத்தினுள்ளே உள்ள சூல்வித்துகளில் அடங்கியிருக்கும் நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை யாது?

2. கருக்கட்டலின் பின்னர் அத்தகைய ஒரு தாவரத்தில் உண்டாகும் வித்துகளின் கலங்களில் அடங்கியிருக்கும் நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை யாது?

1. பித்தத்தின் ஒரு தொழிலாகக் கருத முடியாதது எது?
   1. கார ஊடகத்தை ஏற்படுத்தும் 2. உராய்வு நீக்கியாக தொழிற்படும்.
   3. விற்றமின் மு அகத்துறிஞ்சலில் உதவுதல் 4. புரதத் தொகுப்பில் உதவுதல்

2. இலங்கையில் சாரா எண்ணெயை அதிக அளவில் பிரித்தெடுப்பதற்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் யாவை?
   1. கறுவா, காவட்டம் புலி ஆகியன 2. ஏலக்காய், சாதிக்காய் ஆகியன
   3. வாசனைப்புல், பைனஸ் ஆகியன 4. கராம்பு, றோசா ஆகியன.

3. மேற்பரப்பைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்படும் நிறப்பூச்சுக்கள் பல நிறங்களைக் கொண்டு காணப்படுகின்றன. இந்நிறங்களுக்குக் காரணமான பல நிறப் பொருட்கள் காணப்படுகின்றன. மஞ்சள் நிறத்திற்குக் காரணமான நிறப் பொருள் எது?
   1. தைத்தேனியம் ஒட்சைட்டு 2. ஈயகுரோமேற்று
   3. குரொமியம் ஒட்சைட்டு 4. காபன்

4. இலத்திரன்களை அகற்றுவதன் மூலம் மாத்திரம் விழுமிய வாயு நிலையமைப்பு அடையப்படும் மூலகங்கள் இடம்பெறும் விடை யாது?
   1. H, Li, C 2. Na, K, Ca 3. H, F, Cl 4. C, O, N

5. உடனலமுள்ள வளர்ந்த ஒருவரின் குருதியில்உள்ள சிறுமணியற்ற வெண்குழிய வகை எது?
   1. இயோசீனாடி 2. மூலநாடி 3. நடுநிலைநாடி 4. மொனோசைற்று

6. யூரியா $CO(NH_2)_2$ மூலக்கூறு ஒன்றில் காபன், ஒட்சிசன், நைதரசன், ஐதரசன் அணுக்களின் எண்ணிக்கைகள் முறையே.
   1. 1, 1, 1, 2 ஆகும் 2. 2, 2, 2, 4 ஆகும்
   3. 1, 1, 2, 4 ஆகும் 4. 1, 1, 2, 2 ஆகும்

7. குழந்தைப் பருவத்தில் வயதிற்கு ஏற்ற உயரம் இல்லாத ஒரு பிள்ளைக்கு ஓமோனைத் தொடர்ச்சியாக உட்செலுத்திய போது அது சாதாரண உயரத்துடன் வளர்ந்தது. இந்த ஓமொன்
   1. புரோலக்ரின் 2. அதிரீனலின் 3. தைரொட்சின்
   4. சோமாற்றோரொபின்

8. இரசாயனத் தாக்கங்களில் தாக்க வீதத்தில் பங்களிப்புச் செய்யும் ஒரு காரணி அல்லாதது எது?
   1. தாக்கிகளின் பௌதீக நிலை 2. தாக்கிகளின் செறிவு
   3. தாக்கிகளின் வெப்பநிலை 4. தாக்கிகளின் நிறம்

9. தூண்டல் கிடைக்கப்பெறும் திசையை நோக்கி ஏதேனும் தாவரப்பகுதி வளைகின்றது எனின், அவ்வசைவு?
   1. முன்னிலை அசைவு என அழைக்கப்படும்
   2. திருப்ப அசைவு என அழைக்கப்படும்
   3. உறக்க அசைவு என அழைக்கப்படும்
   4. இரசனை அசைவு என அழைக்கப்படும்

10. 0.5 மூலத்திறனுடைய NaOH கரைசல் 500ml இல் கரைந்துள்ள NaOH இன் திணிவு என்ன?
    1. 10g 2. 20g 3. 30g 4. 40g

## பாடம் : வரலாறு

01. 1 ஆம் உலகமகாயுத்த காலத்தில் மத்திய ஐரோப்பிய நாடுகளின் நட்பு கூட்டு அணியில் இணைந்து கொண்டு பின் பிரிந்து சென்று முக்கூட்டு நட்பு அணியில் இணைந்து கொண்ட நாடு
   1. ரஷ்யா 2. ஜேர்மனி 3. ஆஸ்திரியா 4. பிரான்ஸ்

02. 1ஆம் உலகமகாயுத்த கால முடிவில் உலக சமாதானத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கத்தை தோற்றுவிக்க முன்னின்ற தலைவர்
   1. தியோடர் ரூஸ்வெல்ட் 2. பிராங்ளின் ரூஸ்வெல்ட்
   3. ஜோசப் ஸ்டாலின் 4. வூட்டோ வில்சன்

03. 2ம் உலகமகா யுத்தத்தில் "அச்சு நாடுகளின்" கூட்டணி
   1. ரஷ்யா, யப்பான், ஜேர்மனி
   2. பிரான்ஸ் யப்பான், ஜேர்மனி
   3. ரஷ்யா, இற்றாலி, ஜேர்மனி
   4. இத்தாலி, யப்பான், ஜேர்மனி

04. A லுசிட்டானியா கப்பல் தாக்கப்பட்டல்
   B வெர்செயில்ஸ் உடன்படிக்கையில் ஜேர்மனி பங்குபற்றியமை
   C பேர்ள் துறைமுகம் தாக்கப்பட்டமை
   D சர்வதேச சங்கம் தோற்றுவிக்கப்பட்டமை
   மேற்படி விடயங்களை ஒழுங்குபடுத்தினால் சரியான முறையில் அமையும் விடை
   1.ABCD 2.ADCB 3.ABDC 4.BCDA

05. இலங்கையில் அபயகிரி விகாரையில் மூன்று வருடம் கல்வி கற்றுச் சென்ற சீன யாத்திரிகர்
   1. லீசாச் 2. ஹியுங்சாங் 3. பாகியன் 4. அபூஸயித்

06. எல்லாள மன்னன் விஜிதபுர கோட்டை பாதுகாப்புக்கு வந்த படைத்தளபதி
   1. அபயன் 2. தீஸன் 3. பல்லுகன் 4. மானவர்மன்



07.
அ. படத்தில் காட்டப்பட்டிருக்கும் மன்னன் யார்?
ஆ. இவரின் வம்சம் எது?
இ. இவரால் நீக்கப்பட்ட வரிமுறை எது?
ஈ. இவர் எந்த மன்னனின் சமய முறையைப் பின்பற்றினார்?



08.
அ. இங்கு காட்டப்பட்டிருக்கும் விகாரை எது?
ஆ. இது காணப்படும் நாடு எது?
இ. இது யாரால் அமைக்கப்பட்டது?
ஈ. இது எவ்வம்ச காலத்தில் கட்டப்பட்டது?

09. இலங்கை கீழைத்தேசத்தின் தானிய களஞ்சியம் என வர்ணிக்கப்பட்ட பெருமைக்குரியது
பின்வரும் குளங்களை அமைத்த மன்னர்களை A,B,C ஒழுங்கில் தருக.
A – மகாவிலாச்சிய B – கிரிதலை C – கலாவாவி
1. பொலநறுவை இராசதானியாக தெரிவு செய்யப்படுவதில் பங்களித்த காரணிகள் இரண்டை குறிப்பிடுக.
2. பொலநறுவை காலத்தில் 1ம் பராக்கிரமபாகு மன்னன் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணத்தை இரு விடயங்கள் ஊடாக விளக்குக.
3. இலங்கை வெளிநாட்டு வர்த்தகத்தில் சிறந்து விளங்க உதவியாக அமைந்த காரணிகள் மூன்றை விளக்குக.

ஆசிரியர் அகிலன்

## Grammar

Ex 01. Are the underlined verbs right or wrong? Correct them if they are wrong.

1. Bob is a friend of mine. I know him very well.
   ……………………………………………
2. Bob is a friend of mine. I know him for a long time.
   ……………………………………………
3. Sue and Alan are married since July.
   ……………………………………………
4. The weather is awful. It's raining again.
   ……………………………………………
5. The weather is awful. It's raining all day.
   ……………………………………………
6. I like your house. How long are you living there?
   ……………………………………………
7. Graham is working in a shop for the last few months.
   ……………………………………………
8. I'm going to Paris tomorrow. I'm staying there untill next Friday.
   ……………………………………………
9. 'Do you still smoke?' 'No, I gave it up. I don't smoke for years.'
   ……………………………………………
10. That's a very old bicycle. How long do you have it?
    ……………………………………………
11. Amy is in hospital, Isn't she?. 'Yes, she has in hospital since Monday.
    ……………………………………………

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 150 ஏக்கர்.....

பெரும்பான்மையினரின் உபயோகத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது அக்காணிகளின் தமிழ் உரிமையாளர்கள் தமது காணிகளில் குடியேறவும் பயிர்ச்செய்கையில் ஈடுபடவும் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தகவல் தரத்தக்கவொருவர் தெரிவிக்கும் போது தமது காணிகளில் சுமார் 40 வீதமான காணிகளை மட்டுமே மீளத்தர காணித்திணைக்கள அதிகாரிகள் முயற்சிப்பதாகவும் எஞ்சிய 60 வீதத்தை பெரும்பான்மை மக்களிடையே பகிரப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

குறித்தவிடயத்தைத் தெரிந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சம்பந்தன் தலைமையிலான குழுவினர் கடந்த 01ம் திகதி அங்கு பயணித்திருந்தனர்.

இப்பயணத்தின் போது மக்களைச் சந்தித்து உரையாடிய சம்பந்தன் தலைமையிலான குழுவில் கிழக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் சி.தண்டாயுதபாணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான துரைராஜசிங்கம், ஜெனார்த்தனன், நடராஜா, பிரசன்னா இந்திரகுமார், கிருஸ்ணப்பிள்ளை ராஜேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாண காணி திணைக்கள அதிகாரிகள் தென்னமரவாடி தமிழ் மக்களின் சொந்த காணிகளை மீள ஒதுக்கீடு செய்து புதியவர்களுக்கு வழங்குவது ஒரு பொருத்தமற்ற செயல் எனவும் தான் காணி ஆணையாளருடன் தொடர்பு கொள்வதாகவும் இந்த காணி விவகாரத்தை கிழக்கு மாகாண சபையில் முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இரா.சம்பந்தன் மக்களிடம் கூறினார்.

## சனாதிபதி....

முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்களும் களப் பயணங்களும் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கிழக்குப் பயணத்தின்....

வரைந்துள்ளார்.

"உண்மையிலேயே நான் கண்காணிக்கப்படுவதை தவிர்க்கும் சாத்தியங்கள் படிப்படியாக இல்லாமல் போனது. மிக மோசமான விடயம் என்னவெனில் நான் சந்தித்துவிட்டுச் சென்றவர்களை மேலும் சிலர் வந்து சந்தித்ததும் அவர்களுக்குத் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டதும் தான். அவ்வாறான நேரங்களில் அவர்களிடம் கேட்கப்பட்ட விடயங்கள் என்னவெனில் நான் என்ன செய்தேன்? என்ன பேசினேன்? என்பதாகவே இருந்துள்ளது. சில நேரங்களில் இந் நடவடிக்கைகளில் சில நகைப்புக்கிடமாகவும் இருந்துள்ளன. நான் ஒருவருடன் சந்திப்பை மேற்கொண்டு முடித்தவுடனேயே அவருக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அவ்வழைப்பில் கேட்கப்பட்ட கேள்வி நகரத்திற்குள் வந்துள்ள வெளிநாட்டவர்கள் யார் என்பது தெரியுமா? என கேட்கப்பட்டுள்ளது. எனது கிழக்கு மாகாணப் பயணம் தொடர்பான தகவல்கள் எனது அலுவலகத்தால் தெளிவாக தொடர்பாடப்பட்டுள்ளதுடன் சமூகவலைத்தளங்களிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் தனிநபர்களும் அவர்களது குடும்பங்களும் அச்சமூட்டப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் பெரும்பாலான மக்கள் என்னைச் சந்திக்க விரும்பவில்லை என்பதை நான் கவலையுடன் தெரிந்துகொண்டேன் எனினும் அது எனக்கு அதிர்ச்சியாக இல்லை" என அவர் தெரிவித்துள்ளர்.

## அடிமைகளாக....

தொழில் சம்பந்தமாக நாங்கள் கிராம மட்டத்தில் வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வருகிறோம்.

வீட்டுப் பணிகளுக்கு என பெண்கள் அழைத்து செல்லப்பட்டாலும் உண்மையில் அவர்கள் அடிமை சேவைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இந்த அடிமை சேவை குறித்து நாங்கள் பலருக்கு விளக்கமளித்துள்ளோம். அது தற்போது வெற்றியளித்து வருகிறது.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்று பாதிக்கப்பட்டு வரும் பெண்களுக்கு நாங்கள் உதவிகளை செய்து வருகின்றோம்.

உதவிகளை செய்ய எங்களிடம் பணம் இல்லை. இப்படியானவர்களுக்கு உதவிகளை செய்வதற்கே வெளிவிவகார அமைச்சு இருக்கின்றது.

அமைச்சின் அதிகாரிகள் தமது மக்களுக்காக செய்ய வேண்டிய வேலைகளை செய்யாதன் காரணமாகவே சகல பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன எனவும் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மாணவனை மேசையில்..

தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் ஆசிரியர் மீதான விசாரணைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை எனத் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் உரிய முறையில் விசாரணையை மேற்கொண்டு சிறுவனுக்குத் துன்பம் விளைவித்த ஆசிரியர் மீத சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அக்கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தின் பிரதிகள் வாழைச்சேனை பிரதேச சிறுவர் நன்னடத்தை அலுவலர், கிழக்கு மாகாணப் பிரதிக் காவல் மா அதிபர், மற்றும் வாழைச்சேனை உதவில் காவல்துறை அத்தியட்சகர் ஆகியோருக்குப் பிரதி பண்ணப்பட்டுள்ளது.



## பாடசாலைக்கூரை...

அரச அதிகாரிகளின் கடமையும் சிறார்களின் உரிமையும் ஆகும் எனவும் பெற்றோர்கள் தெரிவிப்பதுடன் அக்கறையின்றி செயற்படும் கல்வி உயர் அதிகாரிகளுக்கு நாட்டின் தலைவர் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

பாடசாலையின் கூரைகள் உடைந்து காணப்படுவதை பல கல்வி அதிகாரிகளும் திருகோணமலை மாவட்ட அரசியல் வாதிகளும் பார்த்து விட்டுச் சென்றும் எதுவித நடவடிக்கையும் எடுக்க வில்லையெனவும் பெற்றோர்களும் பழைய மாணவர்களும் தெரிவிக்கின்றனர்.

சிறார்கள் கல்வியை தொடர குச்சவெளி அந்நூரியா கனிட் பாடசாலையை புனரமைத்து தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## ஆர்ப்பாட்டத்தில்...

பலர் பொதுமக்கள் சிலருடன் சேர்ந்து ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளமை தொடர்பாக அச் செய்தியூடகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்தியில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

மேலும் அச் செய்தியில் மக்களைச் சந்திக்கும் வாரத்தின் முதல் நாளான கடந்த திங்கட்கிழமை (29) பகல் 11 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட இவ் ஆர்ப்பாட்டத்தில் அரச அலுவலர்கள் கலந்துகொண்டமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அரச அலுவலர்கள் அலுவலக நேரத்தில் பொதுவீதியில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதை அரச நிர்வாக நடைமுறைகள் தடுத்திருக்கின்ற நிலையில் அரச அலுவலர்கள் அலுவலக நிலப்பரப்பையும் தாண்டி பொது வீதியில் எவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடமுடியும் என நிர்வாக அதிகாரிகள் பலர் கேள்வி எழுப்பியுள்ளனர் எனவும் அவ்வூடகம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஓய்வுபெற்ற அரச நிர்வாக அதிகாரியொருவருடன் தொடர்பு கொண்ட போது தாபன விதிக்கோவையின் அத்தியாயங்கள் 32 தொடக்கம் 35வரையான பகுதிகளில் அரச அலுவலர்களின் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது என மலைமுரசிற்குத் தனது கருத்தைத் தெரிவித்த அவர் அவ்வாறு ஆர்ப்பாட்டங்களைச் செய்ய வேண்டுமெனில் உரிய அமைச்சரின் முன் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இதே வேளை கிழக்கு மாகாண சிங்கள, தமிழ், முஸ்லிம் வாலிபர் சங்கம் என்ற அமைப்பு அனுப்பிவைத்துள்ள இலத்திரனியல் அஞ்சலில் "திருகோணமலை பிரதான பேருந்து தரிப்பிடத்துக்கு முன்னாள் தமிழ் முஸ்லிம் சிங்கள அமைப்புக்கள் இணைந்து இராணுவ அதிகாரியான மாவட்ட அரசாங்க அதிபர் டி.டி.ஆர்.டி.சில்வாவை மாற்றுமாறு கோரி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதே வேளை கடமை நேரத்தில் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மாவட்ட அரசாங்க அதிபருக்கு ஆதரவு தெரிவித்து செயலகத்துக்கு முன்னாள் பதாதைகளை ஏந்தியவாறு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்

மக்களின் பொது பிரச்சனைகளை கூறக்கூடிய உரிமைகள் பொது மக்களுக்கு காணப்படுவதால் பொது மக்கள் ஆர்பாட்டங்களை மேற்கொண்டு உரிமைகளை பெற முற்படட்னர்.ஆனாலும் அரச ஊழியர்கள் கடமை நேரத்தில் அரசினால் வெளியிடப்பட்ட விதிமுறைகளையும் -சட்டக் கோவைகளையும் மீறி பிரதேச செயலகத்துக்கு முன்னாள் ஆர்ப்பாட்டம் செய்தது பாரிய குற்றம் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படியான ஆர்பாட்டங்கள் மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கா விட்டால் அனைத்து திணைக்களங்களும் தமது உயர் அதிகாரிகளுக்கு எதிராக குற்றங்கள் சுமத்தப்படும் வேளையிலும் பொது மக்கள் குறை கூறினாலும் அவர்களுக்கு எதிராக திணைக்கள உத்தியோகத்தர்கள் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே கடமை நேரத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அவ்வமைப்புக் கோரியுள்ளது.

## வாயைப் பொத்துங்கள்..

வித்திட்டுள்ளது.

கூட்டத்தைத் தலைமைதாங்கிய பொருளாதாரப் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா நகரசபைத் தலைவரின் வார்த்தைகள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும் செயலாக உள்ளது என்பதை தெளிவுபடுத்தி அஸ்பர் அவ்வார்த்தைகளை வாபஸ்பெற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து அஸ்பர் தனது வாயைப் பொத்தும் வார்த்தைகளை வாபஸ் வாங்கிக் கொண்டார். அதனைத் தொடர்ந்தே கூட்டம் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பெருநாள் தொழுகை திடலில் செய்ய வேண்டுமா?

"அல்லாஹ்வும், அவனது தூதரும் ஒரு (மார்க்க) விடயத்தில் தீர்ப்பு சொன்னதற்கு பிறகு அதில் மாற்றம் கொள்வதற்கு மு:மினான ஆணுக்கும் அதிகாரம் கிடையாது மு:மினான பெண்ணுக்கும் அதிகாரம் கிடையாது. அவ்வாறு யார் அதற்கு மாறு செய்கிறார்களோ அவர் தெளிவான வழிகேட்டிலே உள்ளார்." (33 : 36)

நபியவர்கள் இப்படிதான் செய்ய வேண்டும் என்று வழிக் காட்டியதற்கு பிறகு அந்த விடயத்தில் யாரும் மாறு செய்ய முடியாது. அப்படி மாறு செய்தால் அவர்கள் வழிகேடர்கள் என்பதை குர்ஆன் எச்சரிக்கிறது.

அதே போல "அவர்களின் முகங்கள் நரகத்திலே புரட்டப் படும் போது நாங்கள் அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டிருக்கக் கூடாதா? அல்லாஹ்வுடைய தூதருக்கு கட்டுப் பட்டிருக்கக் கூடாதா? என்று புலம்புவார்கள். மேலும் "எங்கள் இறைவா! எங்கள் தலைவர்களுக்கும், எங்கள் பெரியார்களுக்கும், நாங்கள் கட்டுப்பட்டோம். அவர்கள் எங்களை வழிகெடுத்து விட்டனர். என்று கூறுவார்கள். (33:66, 67)

எனவே கண்ணியத்திற்குரிய உலமாக்களே! பள்ளி நிர்வாகிகளே! பொது மக்களே! பெருநாள் தொழுகை எங்கு தொழ வேண்டும் என்ற வழி முறையை தெளிவாக நமக்கு காட்டித் தந்துள்ளபோது, நாம் ஏன் அதற்கு மாறு செய்ய வேண்டும்? நபியவர்கள் பெருநாள் தொழுகையை எங்கு தொழுதார்கள் என்ற ஹதீஸ்களை கவனியுங்கள்.

உம்மு அத்திய்யா (ரலி) அவர்கள் கூறியதாவது: பெருநாளன்று (பெண்களாகிய) நாங்கள் (தொழும் திடலுக்குப்) புறப் பட்டுச் செல்ல வேண்டுமெனவும், திரைமறைவில் உள்ள பெண்களையும் கன்னிப் பெண்களையும் புறப்படச் செய்ய வேண்டுமெனவும் கட்டளையிடப்பட்டிருந்தோம். மாதவிடாய் ஏற்பட்டுள்ள பெண்கள் (தொழும் திடலுக்குச் சென்று) மக்களுக்குப் பின்னால் இருந்துகொண்டு மக்களுடன் சேர்ந்து "தக்பீர்" கூறுவார்கள் (முஸ்லிம்-1614)

தொழும் திடலுக்கு ஆண்களையும், திருமணம் முடித்த பெண்களையும், கன்னிப் பெண்களையும், மாதவிடாய்ப் பெண்களையும், செல்லும்படி ஏவியுள்ளார்கள்.

தொடரும்.. ..




## வாரமொரு ஜோக்

- அருணன் -

சனக்கூட்டத்தின் மத்தியில் நின்றுகொண்டு வித்தை காட்டிக்கொண்டிருந்த ஒருவர் கூட்டத்தை நோக்கி தன் கையில் வைத்திருந்த தேசிக்காய் ஒன்றை காட்டி இதை உங்களில் யாராவது இரு விரல்களால் பிழிந்து சாறு எடுத்து காட்டமுடியுமா என சவால் விட்டார். சவாலை ஏற்று முன்வந்த எவராலும் இரு விரல்களால் சாறை பிழிய முடியவில்லை.

இறுதியாக மெலிந்து வயதான ஒருவர் அவ்விபர் அச்சவாலை ஏற்க முன்வந்தார். கூட்டம் எள்ளி நகையாடியது. அவ்வயதானவரோ எதையும் பொருட்படுத்தாது அத் தேசிக்காயை கையிலெடுத்து மிக இலகுவாக தன் இரு விரல்களால் சாறு பிழிந்து காட்டினார். கூட்டம் ஆச்சரியத்துடன் கரகோஷம் செய்தது. அவ்வயோதிபரிடம் அங்கிருந்த ஒருவர், ஐயா! இத்தனை பலசாலிகளாலும் முடியாதவொன்றை உங்களால் எப்படி செய்ய முடிந்தது என வினவினார்.

வயதானவர் சிரித்தவாறே, தம்பி நான் நாற்பது வருடங்களாக வருமான வரித்திணைக்களத்தின் அதிகாரியாக கடமையாற்றியவன். எனது அனுபவத்தில் எத்தனை பேரை பிழிந்திருப்பேன். இந்த தேசிச்காயை பிழிவது பெரிய வேலையா என கூறி நகர்ந்தார்.

ஹா! ஹா! ஹா!



வாழைப்பழம் என்ன விலை?

ஐந்து ரூபா சார்!

மூன்று ரூபாவுக்குத் தரமாட்டிங்களா?

(நக்கலாக) "அதுக்கு வெறும் தோல் தான் கிடைக்கும்"

"அப்ப இந்தா இரண்டு ரூபா, பழத்தை கொடு! தோல நீயே வச்சுக்கோ

ஹா! ஹா! ஹா!

ஏன் தண்ணி தெளிச்சிட்டு கோலம் போடுறாங்க தெரியுமா ?

கோலத்தைப்போட்டுட்டு தண்ணி தெளிச்சா.. கோலம் அழிஞ்சிடுமே அதுதான்...!




## கரு வளையம் நீங்க ஈஸி டிப்ஸ்

சருமத்தின் எல்லா இடங்களிலும் பரவியிருக்கும் ஹைப்போ டெர்மிஸ், கண்களைச் சுற்றியுள்ள பகுதியில் மிகக் குறைவு. பரம்பரை வாகு, தூக்கமின்மை, சரிவிகித உணவு உண்ணாதது, கம்ப்யூட்டர், டி.வி. முன் அதிக நேரம் இருப்பது என கருவளையங்களுக்கான காரணங்கள் பல. இதை ஆரம்பத்திலேயே கவனித்து சிகிச்சை மேற்கொண்டால் சரியாக்கலாம்.

எட்டு மணி நேரத் தூக்கம் முதல் சிகிச்சை. பகல் நேரத்தில் உள்ளங்கைகளைக் குவித்து கண்களின் மேல் வைத்து மூடியபடி அடிக்கடி செய்யலாம். கண்களை வேகமாக மூடித் திறப்பது போலச் செய்வது, அதற்கு ஒருவித மசாஜ் மாதிரி அமையும்.

கண்களை இறுக மூடவும். பிறகு அகலமாகத் திறக்கவும். இதே போல 5 முறைகள் செய்யவும். புருவங்களைக் குறுக்காமல், கண் இமைகள் மட்டும் மூடி, மூடித் திறக்க வேண்டும். நெற்றி, முகத் தசைகள் சாதாரணமாக இருக்கட்டும். இந்தப் பயிற்சி கண்களைச் சுற்றியுள்ள தசைகளுக்கான அற்புதப் பயிற்சி. கருவளையங்களைப் போக்க இதைத் தொடர்ந்து செய்து வரலாம்.

- கருவளையம் ரொம்பவும் அதிகமிருந்தால் பியூட்டி பார்லர்களில் செய்யப்படுகிற ஐ மசாஜ் பலனளிக்கும்.
- சுத்தமான தண்ணீரால் அடிக்கடி கண்களைக் கழுவவும்.
- சாதாரண மையில் ஆரம்பித்து, ஐ லைனர், ஐ ஷேடோ, மஸ்காரா என் எல்லாமே தரமான தயாரிப்புகளாக இருக்க வேண்டியது முக்கியம்.
- கம்ப்யூட்டர் முன் நீண்ட நேரம் வேலை பார்ப்பவர்கள் அடிக்கடி கண்களை சில நொடிகளாவது மூடி ஓய்வெடுக்க வேண்டும். கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரக் கூடிய பச்சை, நீல நிறங்களை அடிக்கடி சிறிது நேரம் பார்க்கலாம்.
- கண்களைச் சுற்றி எப்போதும் மோதிர விரலால்தான். அதுவும் மிக மென்மையாக மசாஜ் செய்ய வேண்டும்.
- எட்டு மணி நேரத் தூக்கம். 10 முதல் 12 டம்ளர் தண்ணீர் குடிப்பது இந்த இரண்டும் மிக முக்கியம்.

## இறால் பிரியாணி

**தேவையான பொருட்கள்**

பச்சரிசி - அரை கிலோ, இறால் - கால் கிலோ, வெங்காயம் - கால் கிலோ, தக்காளி - மூன்று, பச்சைமிளகாய் - நான்கு, பூண்டு - பத்து பல், இஞ்சி - 2 அங்குல துண்டுகள், மிளகாய்தூள் - 3 தே.க, மஞ்சள் தூள் - 1/2 தே.க, எண்ணெய் - 1 குழி கரண்டி, நெய் - 2 மே.க, கறிவேப்பிலை - 1 கொத்து, கொத்தமல்லி - 1 பிடி, புதினா - 1 பிடி, உப்புதூள் - 2 தே.க, பட்டை - 2 துண்டுகள், பிரிஞ்சி இலை - 2 எண்ணிக்கை



**செய்முறை**

முதலில் பச்சரிசியை உதிரி உதிரியாக வடித்து கொள்ளவும். இறாலை நன்கு சுத்தம் செய்து கொள்ளவும். ஒரு அகலமான பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய்யை ஊற்றவும், காய்ந்ததும் வெங்காயம் தக்காளி, பச்சைமிளகாய், ஆகியவற்றை நீளவாக்கில் நறுக்கிப் போடவும். பிறகு பட்டை பிரிஞ்சி இலை கறிவேப்பிலை, இறாலை போட்டு நன்கு வதக்கவும். பொன் நிறமாக வதங்கியதும் தட்டி வைத்துள்ள இஞ்சி பூண்டு, மிளகாய்தூள், மஞ்சதூள், உப்புதூள் போட்டு நன்கு கிளறவும். அரை கோப்பை தண்ணீர் ஊற்றி வேகவைக்கவும். மசாலா தொக்கு போல் ஆன உடன் கொத்தமல்லி, புதினாவை போட்டு கிளறவும். பிறகு வடித்து வைத்துள்ள சோற்றை கொட்டி, நெய்யை ஊற்றி நன்றாக கிளறிவிட்டு இறக்கி வைக்கவும். சுவையான இறால் பிரியாணி தயார்.




## ஆண்மை கோளாறு போக்கும் புடோல்

எண்ணற்ற சத்துகளை கொண்டுள்ள புடலங்காய், ஆண்மை கோளாறுகளை போக்கும் தன்மை கொண்டது. புடலங்காயில் நன்கு முற்றியதை உண்பது நல்லது அல்ல. பிஞ்சு அல்லது நடுத்தர முதிர்ச்சி உள்ள காயை பயன்படுத்த வேண்டும்.



- உடல் மெலிந்து இருப்பவர்கள் அடிக்கடி புடலங்காயை உணவில் சேர்த்து சாப்பிட்டு வந்தால் பருமன் அடையும்.
- அஜீரண கோளாறுகளை நீக்கி, எளிதில் செரிமானம் அடையச் செய்கிறது.
- வயிற்றுப் புண், தொண்டை புண் உள்ளவர்கள் தொடர்ந்து சாப்பிட்டு வரும் பட்சத்தில், நோயின் பாதிப்பு பெருமளவு குறைய வாய்ப்புகள் அதிகம்.
- நரம்புகளுக்கு புத்துணர்வு அளிப்பதுடன், ஞாபக சக்தியை அதிகரிக்கிறது.
- பெண்களுக்கு உண்டாகும் வெள்ளைப்படுதலை குணப்படுத்தும், கருப்பைக் கோளாறையும் குணப்படுத்தும்.

## டுவின்ஸ் எவ்வாறு பிறக்கிறார்கள்




வழக்கமாக கர்ப்பிணிகளுக்கு நான்கைந்து மாதங்களுக்குப் பிறகு தெரிய ஆரம்பிக்கிற வயிறு, இரட்டைக் கர்ப்பம் சுமப்பவர்களுக்கு இன்னும் சீக்கிரமே தெரியும்.

அடுத்தடுத்த மாதங்களிலும் வயிற்றின் அளவு அசாதாரணமாகவே இருக்கும். உள்ளாடை அணிய முடியாத அளவுக்கு மார்பகங்கள் மிகவும் மென்மையாகும். அடிக்கடி சிறுநீர் கழிப்பதும் கர்ப்பத்தில் சகஜம்.என்ற ாலும், இரட்டைக் குழந்தைகள் இருக்கும் போது, அந்த உணர்வு இன்னும் தீவிரமாகும். அளவுக்கு மிஞ்சிய களைப்பு ஆட்கொள்ளும். ஒவ்வொரு நாளையும் கடத்துவதென்பதே போராட்டமாகத் தெரியும். பிரசவ ஹார்மோன் என்று சொல்லக்கூடிய Chorionic Gonadotropin Hormone அளவு மிக அதிகமாக இருக்கும். இது கர்ப்பத்தை உறுதிப்படுத்துகிற முதல் சிறுநீர் சோதனையிலேயே தெரியும். கர்ப்பப்பை விரிவடைவதன் விளைவாக, இரட்டைக்கரு உருவான பெண்களுக்கு கர்ப்பப்பையில் தசைப்பிடிப்பு மாதிரியான உணர்வு தென்படும்.

இதயத் துடிப்பில் வேகம் தெரியும். சாதாரண நிலையில் 70 முதல் 80 வரை இருக்கும் இதயத் துடிப்பானது, இரட்டைக் குழந்தைகளைச் சுமக்கும் பெண்களுக்கு 95 முதல் 105 வரை கூட எகிறலாம்.

முற்றும்.. ...




**மேஷம்** : உடல்நலம் ஆரோக்கியம் பலம் பெறும். தொழில் தாமத கதியில் இயங்கும்.

**ரிஷபம்** : தொழில், வியாபாரம் செழித்து, பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்** : வார்த்தையில் வசீகரம், உண்மையின் தன்மை வெளிப்படும். சமூக நிகழ்வுகளில் புதிய பாடம் கற்றுக் கொள்வீர்கள்.

**கடகம்** : எதிர்கொண்ட கஷ்டம் கொஞ்சம் கொஞ்சமாக விலகும். மனதில் புதிய நம்பிக்கை வளரும்.

**சிம்மம்** : நீண்ட தூர பயணத்தில் கூடுதல் பாதுகாப்பு அவசியம். எதிர்பார்ப்பு தாமதம் ஆவதால் மனம் வருந்துவர்.

**கன்னி** : இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசம் கொள்வார். வியாபாரத்தில் உருவாகும் குளறுபடிகளை தாமதம் இன்றி சரி செய்யவும்.

**துலாம்** : எதிரியால் வருகிற கெடுதல் முயற்சி பலமிழந்து போகும்.

**விருச்சிகம்** : உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். வியாபாரம் செழித்து பணவரவு கிடைக்கும்.

**தனுசு** : குடும்பத்தில் உருவாகும் மங்கள நிகழ்வுக்கு தாராள பணச்செலவு செய்வீர்கள்.

**மகரம்** : குடும்ப நலன் சிறக்க ஒற்றுமை மனதுடன் பணி மேற்கொள்வார்.

**கும்பம்** : எதிரியிடம் விலகுவது பணிநிறைவேற உதவும்.

**மீனம்** : நன்குபழகிய ஒருவர், நயமுடன் பேசி பணஉதவி கேட்க கிரக நிலை உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## மாபெரும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

விநாயகபுரம் மின்னொளி விளையாட்டுக் கழகத்தின் 36 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்று நடாத்தப்பட்டது. இந்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரையான 25 அணிகள் பங்கு கொண்டதுடன் இரண்டு வாரங்களாக இடம் பெற்ற இச்சுற்றுப்போட்டிக்கான இறுதி போட்டி கடந்த ஞாயிற்று கிழமை பி.ப 4.00 மணிக்கு விநாயகபுரம் மின்னொளி அணியினருக்கும் திருக்கோவில் உதயசூரியன் அணியினருக்கும் இடையில் இடம்பெற்றது

இவ் இறுதிப்போட்டியில் தலா இர்ண்டு அணிகளுமே 1-1 கோல்களை பெற்றதன் காரணமாக நேரடியாக தண்டனை உதை வழங்கப்பட்டது. இத் தண்டனை உதையில் திருக்கோவில் உதயசூரியன் அணியினர் 3-1 என்ற அடிப்படையில் வெற்றியீட்டி 2014 ஆம் ஆண்டுக்கான வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.





## பெண்களுக்கான 200மீ, 800மீ போட்டிகளுக்கு தகுதி



இன்சொனில் நடைபெற்றுவரும் ஆசியவிளையாட்டு விழாவில் பெண்களுக்கான 200 மீற்றர் இறுதி ஓட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்கு இலங்கையின் சந்த்ரிகா சுபாஷினி ரஸ்நாயக்கவும் 800 மீற்றர் இறுதிப் போட்டியில் பங்குபற்றுவதற்கு கயன்திகா அபேரத்னவும் தகுதி பெற்றுள்ளனர்.

ஆசியாட் பிரதானவிளையாட்டரங்கில் நடைபெற்ற 200 மீற்றர் இரண்டாவது தகுதிகாண் ஓட்டப் போட்டியை 23.59 செக்கன்களில் நிறைவு செய்து 3ஆம் இடத்தைப்பெற்ற சந்த்ரிகா மூன்று தகுதிகாண் போட்டிகள் முடிவில் ஒட்டுமொத்த நிலையில் ஏழாம் இடத்தைப் பெற்றதன் மூலம் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றார்.

## முழு நேர பயிற்றுவிப்பாளர்



இலங்கை அணியின் ஒரே நோக்கம் உலகக்கிண்ணப் போட்டிகளில் தான் உள்ளது என இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் மார்வன் அத்தப்பத்து தெரிவித்துள்ளார். இங்கிலாந்தை சேர்ந்த போல் பார்பிராஸ் இலங்கை அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்து வந்தார். இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதத்தில் அந்த பதவியில் இருந்து அவர் விலகினார்.

இதனையடுத்து இலங்கை அணியின் முழு நேர தலைமை பயிற்சியாளராக மார்வன் அத்தப்பத்து நியமிக்கப்பட்டார். இந்நிலையிலேயே மார்வன் அத்தப்பத்து எங்கள் வீரர்கள் மத்தியில் எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை. தற்போது எங்களின் பார்வை எல்லாம் உலகக்கிண்ணப் போட்டிகளை பற்றி தான் உள்ளது என்றார்.

## அநீதி இழைக்கப்பட்டதால் பதக்கம் வாங்க மறுப்பு



ஆசிய விளையாட்டு குத்துசண்டைப் போட்டியில் தனக்கு அநீதி இழைக்கப்பட்டதாக கிடைத்த வெண்கலப்பதக்கத்தை திருப்பிக் கொடுத்து அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார் சரிதா தேவி. நேற்று முன்தினம் நடந்த பெண்கள் குத்துச்சண்டை (60 கி.) அரையிறுதியில் இந்தியாவின் சரிதா தேவி, தென் கொரியாவின் ஜினா பார்க்க்கு எதிராக சிறப்பாக செயல்பட்டபோதும், நடுவர்களின் தவறான தீர்ப்பால் இறுதிப்போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தார்.

## ஊதிய உடலால் - அபராதம்



ஒப்பந்தத்தில் இருக்கும் வீரர்கள் உடல் தகுதி இல்லாவிட்டால் அவர்களின் சம்பளத்தில் இருந்து 25 சதவீதம் அபராதம் விதிக்கப்படும் என்று எச்சரித்து இருந்தது. அதன்படி வீரர்களின் உடல் தகுதி சோதனையை நடத்தியது. பாகிஸ்தான் டி20 அணித்தலைவர் சகீத் அப்ரிடி, உமர் அக்மல், அப்துர் ரகுமான், ராசாஹசன் ஆகிய 4 முன்னணி வீரர்கள் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமான எடையுடன் இருப்பது தெரிய வந்தது.

## வட்டு எறிதல் - தங்கம்



ஆசிய விளையாட்டு வட்டு எறிதலில் இந்தியாவின் சீமா புனியா, தங்கம் வென்று அசத்தினார். டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா, தங்கம் கைப்பற்றினார்.

தென் கொரியாவில் உள்ள இன்ச்சான் நகரில், 17வது ஆசிய விளையாட்டு நடக்கிறது. இதன் பெண்களுக்கான வட்டு எறிதலில் இந்தியா சார்பில் கிருஷ்ண பூனியா, சீமா புனியா பங்கேற்றனர். அதிகபட்சமாக 61.03 மீ, தூரம் எறிந்த இந்தியாவின் சீமா புனியா முதலிடம் பிடித்து தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார்.

## சர்வதேசச் செய்திகள்

### • தீவிரவாதி என நினைத்து சுட்டுக் கொலை

அமெரிக்காவில் ருவயா என்ற மாகாணத்தை சேர்ந்த காவல்துறை அதிகாரி ஒருவர் இரண்டு கையில்லாத ஒரு இளைஞனை தீவிரவாதி என தவறாக நினைத்து சுட்டு கொன்றுவிட்டார். இதனால் அந்த பகுதியில் பெரும் பதட்டம் நிறைந்துள்ளது.

### • வாடிகான் பாதிரியார் வீட்டில் ஆபாச படங்கள்.

வாடிகான் நாட்டில் உள்ள சர்ச் ஒன்றின் பாதிரியார் தனது கம்ப்யூட்டரில் சுமார் 100,000 ஆபாச படங்களும் வீடியோக்களும் வைத்திருந்ததாகவும், அவற்றில் பெரும்பாலானவை குழந்தைகளின் ஆபாச படங்கள் என்றும் திடுக்கிடும் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. தற்போது அந்த பாதிரியாரை போலீஸார் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

### • அமெரிக்காவை அச்சுறுத்தும் எபோலா வைரஸ்

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் எபோலா வைரஸ் தாக்கம் அமெரிக்காவையும் தாக்க தொடங்கியுள்ளது. இதன்படி எபோலா நோய்த் தொற்றுக்கு உள்ளான ஒருவர் அமெரிக்காவில் இனங்காணப்பட்டுள்ளார். மருத்துவ பரிசோதனை மூலம் எபோலா வைரஸ் தாக்கம் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்கு ஆப்பிரிக்க நாடான லைபீரியாவில் அந்த நபருக்கு எபோலா தொற்று ஏற்பட்டதாகவும், அதன் பிறகு அவர் டெக்ஸாஸிக்கு வந்ததாகவும் மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

### • அரபு நாடுகளின் தாக்குதல்களுக்கு ஈராக்கிய பிரதமர் கண்டனம்

ஈராக்கிலுள்ள "ஐ.எஸ்." போராளிகளுக்கு எதிரான வான் தாக்குதல்களில் அரபு நாடுகள் இணைந்துள்ளமைக்கு தான் முழுமையாக எதிர்ப்புத் தெரிவிப்பதாக ஈராக்கிய பிரதமர் ஹைதர் அல் –அபடி தெரிவித்தார்.

சிறந்த வான் தாக்குதல் வசதிகளிருப்பின் ஈராக்கிய இராணுவத்தினரால் "ஐ.எஸ்." போராளிகளை தோற்கடிக்க முடியும் எனத் தெரிவித்த அவர், மேற்படி தாக்குதல் நடவடிக்கைக்கு வெளிநாட்டு தரைப்படையினர் எவரும் தேவையில்லை என வலியுறுத்தினார்.

### • உலகை சுற்றி வந்த முதல் பெண் மரணம்



விமானத்தில் தனியாக பயணித்து உலகை சுற்றி வந்த முதல் பெண் விமானியான ஜெரால்டைன் ஜெர்ரி மாக் தனது 88வது வயதில் நேற்று முன்தினம் மரணமடைந்தார். ப்ளோரிடாவில் உள்ள அவரது இல்லத்தில் ஜெரால்டைன் மரணத்தை தழுவியதாக அவரது தோழியான மேரி கெல்லி கூறியுள்ளார். 1964 ஆம் ஆண்டு மார்ச் 19-ந் தேதியன்று தனது 38வது வயதில் செஸ்னா 180 என்ற சிறிய ரக விமானத்தில் 'ஸ்பிரிட் ஆப் கொலம்பஸ்' என்று பெயரிட்டு ஓஹியோவில் உள்ள கொலம்பஸ் விமான நிலையத்தில் இருந்து உலகை சுற்றி வர ஜெரால்டைன் கிளம்பினாராம்.

### • சூரிய வெடிப்பு

சூரியனில் இதுவரையிலும் இல்லாத அளவு 10,000 மடங்கு சக்தி மிகுந்த சூரிய வெடிப்பினை நாசா விஞ்ஞானிகள் படம்பிடித்துள்ளனர். இந்த சூரிய வெடிப்பு, சூரியனின் மையப்பகுதியினை காட்டிலும் 12 மடங்கு வெப்பம் நிறைந்தது, இந்த வெடிப்பு, அருகிலுள்ள நட்சத்திரத்தில் இருந்து 60 ஒளியாண்டுகள் தொலை தூரத்திலிருந்து வந்திருக்க கூடும் என்று நாசா விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இவ்வகை சூரிய வெடிப்புகள் பூமியில் மின்சாரத்தையும், தகவல் தொடர்பையும் துண்டிக்ககூடிய அபாயம் உள்ளது. கடந்த இரண்டு வாரங்களில் ஏழுமுறை இவ்வாறான சூரிய வெடிப்புகள் நிகழ்ந்துள்ளதை நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

### • சிரியாவில் 41 குழந்தைகள் உயிர்பலி

சிரியா மற்றும் ஈராக் நாடுகளில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் நிலைகளை நோக்கி அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடுகள் தொடர்ந்து தாக்குதல் நடத்திக்கொண்டு வரும் நிலையிலும், தீவிரவாதிகளின் தாக்குதல் தொடர்ந்து கொண்டே உள்ளது. 01.10 சிரியாவில் அரசுப் பள்ளி ஒன்றில் அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் வெடித்ததில் 41 குழந்தைகள் உயிரிழந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. இந்த தகவலை மனித உரிமைகள் அமைப்பும் உறுதி செய்துள்ளது.

### • பொது இடத்தில் பெண்கள் பர்தா அணியக்கூடாது!

அவுஸ்திரேலியாவில் பொது இடங்களில் பர்தா வகையிலான முகத்திரைகள் அணியக்கூடாது என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

நாடாளுமன்றக் கட்டடத்திற்கு வருகை தரும் விருந்தாளிகள் முக்காடு அணிந்து வருவதைத் தடை செய்யுமாறு விடுக்கப்படும் கோரிக்கைகளை தாம் ஆதரிக்கப் போவதாக அந்நாட்டின் பிரதமர் டோனி அபாட் தெரிவித்துள்ளார்.

### • எமது இணைந்த முயற்சிகள்



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவாலும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியாலும் இணைந்து எழுதப்பட்ட பெரும் எதிர்பார்ப்புக்குள்ளாகியிருந்த ஆசிரியர் தலையங்கம் செவ்வாய்க்கிழமை அமெரிக்க வாஙிடன் போஸ்ட் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.மேற்படி ஆசிரியர் தலையங்கமானது 21 ஆம் நூற்றாண்டிலான இந்திய – அமெரிக்க உறவுகளை மீளப் புதுப்பிப்பது தொடர்பில் விபரிக்கிறது.

### • அரசியல்வாதிகள் என்னை பழி தீர்த்து விட்டனர்

சொத்துக் குவிப்பு வழக்கீல் நீதிபதி தீர்ப்பை அறிவித்ததும் அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா பேசியதன் விவரம் தற்போது வெளியாகியுள்ளது. சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டதை அடுத்து அவர் நீதிபதியிடம் பேசியுள்ளார். அப்போது அவர் பேசுகையில், நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னரே செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்து வசதியாக இருந்தவர். அந்த காலத்திலேயே திரைப்படங்களில் நடிக்க பல கோடிகளை சம்பளமாகப் பெற்றவர். எனக்கென்று எந்த குடும்பமும் இல்லை எனவே எந்த குடும்பத்துக்கும் சொத்து சேர்க்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. எனக்குள்ள ஒரே சொத்து தமிழக மக்கள் தான், நான் உழைத்து சம்பாதித்த சொத்துக்கள் அனைத்தும் தமிழக மக்களுக்கே. மேலும், மக்கள் மன்றத்தில் என்னை சந்தித்து பகை தீர்க்க முடியாத அரசியல்வாதிகள், இந்த வழக்கின் மூலம் என்னை பழி தீர்த்துக் கொண்டிருக்கின்றனர், என்று கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### • பணிப்பெண்கள் 16 பேர் மாயம்

பாகிஸ்தானை சேர்ந்த பணிப்பெண்கள் 16 பேர் கனடாவில் மாயமாகி உள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் சர்வதேச ஏர்லைன்ஸ்(பி.ஐ.ஏ)-ல் கடந்த மாதம் வெளிநாடு சென்ற 4 பணிப்பெண்கள், தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து மாயமாகியுள்ளனர் என பிரபல தொலைக்காட்சி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

மேலும் அச்செய்தியில், கடந்த 5 மாதங்களில் 16க்கும் மேற்பட்ட கனடாவிற்கு சென்ற பணிப்பெண்கள் மற்றும் கேபின் பெண்கள் நாடு திரும்பவில்லை என பிஐஏ கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத்தில் உ. யுவைசிகா முதலிடம்



திருகோணமலை ஸ்ரீ சண்முகா மகளிர் கல்லூரியின் மாணவி உ.யுவைஷிகா புலமைப் பரிசில் பரீட்சையில் 194 புள்ளிகளைப் பெற்று கிழக்கு மாகாணத்திலும் மாவட்டத்திலும், முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

மாவட்டத்தில் இரண்டாமிடத்தை இதே கல்லூரியைச் சேர்ந்த





குணநாதன் திவாஹரி பெற்றுக்கொள்ள மாவட்டத்தின் மூன்றாம் இடத்தினை திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் மாணவன் நவஜோதி வக்ஷன் பெற்றுக் கொண்டுள்ளார்.



மாகாணத்தில் முதலிடம் பெற்ற மற்றும் மாவட்டத்தில் இரண்டாம் இடம் பெற்ற மாணவிகளோடு கல்லூரி அதிபர் திருமதி.ஜெ.சுலோசனா மற்றும் கற்பித்த ஆசிரியரான திரு.ந.மனோகரன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

ஆசிரியர் மனோகரன் மலைமுரசு பத்திரிகை, புலமைஅறிவு மற்றும் புலமைச்சுடர் பதிப்புக்களில் புலமைப் பரிசில் தொடர்பாக எழுதுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த நான்கு வருடங்களிலும் மாவட்டத்தில் முதலாம் இடத்தைத் தக்கவைத்துக்கொண்ட ஸ்ரீ சண்முகா மகளிர் கல்லூரி இவ்வருடம் மாகாணத்தில் முதலிடத்தைத. தக்கவைத்துள்ளது.

### மாணவனை மேசையில் அறைந்த ஆசிரியர்

# நியாயமான விசாரணை செய்யுங்கள் யோகேஸ் எம்.பி



நான்காம் வகுப்பு மாணவனை மேசையில் தூக்கியறைந்து ஆசிரியர் தண்டனை கொடுத்த சம்பவத்தை மூடி மறைக்கும் முயற்சிகள் நடப்பதாக சந்தேகம் வலுத்துள்ளது.

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட மயிலங்கரச்சை மலைமகள் வித்தியாலத்தில் நான்காம் வகுப்பில் கல்வி கற்கும் செல்வராசா வரதன் என்ற சிறுவன் ஜனாப். என்.எம். நசீர் என்ற ஆசிரியரின் தாக்குதலுக்கு இலக்காகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப் பட்டிருந்தான்.


ஆசிரியரால் குறித்த சிறுவன் மேசையில் தூக்கி அடிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக வாழைச்சேனை காவல்துறையினர் தெரிவித்தனர்.

தந்தையை இழந்த இந்த சிறுவனின் தாய் சவுதி அரேபியாவில் பணிப்பெண்ணாக பணியாற்றி வருவதுடன், தாம் பாதுகாவலராக இருப்பதாக அவனது பாட்டனார் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் கல்குடா வலயக் கல்வி பணிப்பாளருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக மலைமகள் வித்தியாலயத்தின் அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் 13

# பாடசாலைக்கூரை தலையில் விழும்?



(அப்துல்சலாம் யாசீம் திருகோணமலை )

திருகோணமலை வலயத்திட்குட்பட்ட குச்சவெளி அந்நூரியா கனிஸ்ட பாடசாலையின் கூரைகள் மாணவர்களின் தலைகளின் விழும் நிலையில் காணப்படுவதாக பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.


1948ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசலையில் அதிபர் உட்பட நான்கு ஆசிரியர்கள் கடமையாற்றி வருவதுடன் 152 மாணவர்கள் கல்வி கற்று வருவதாகவும் தெரியவருகின்றது.

ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி திட்டத்தில் இப் பாடசாலை கனிட்ட பாடசாலையாக மாற்றப்பட்டதுடன் சுனாமிக்கு முன்னர் அந்நூரியா முஸ்லிம் வித்தியாலயம் என்ற பெயரில் இயங்கி வந்தது.

சிறுவர்களின் கல்வி நடவடிக்கைக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பது 13

# "வாயைப் பொத்துங்கள்" வார்த்தையை வாபஸ் வாங்கிய காத்தான்குடி நகரசபைத் தலைவர் அஸ்பர்

மட்டக்களப்பு வாவியில் குப்பைகளைக் கொட்டுவதைத் தவிர்க்குமாறு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு-நாடாளுமன்ற உறுப்பினர் பொன்-செல்வராசா கேட்டுக்கொண்டதைத் தமக்கானது எனப் புரிந்து கொண்ட காத்தான்குடி நகரசபைத் தலைவர் " நீங்கள் வாயைப் பொத்திக் கொண்டிருந்தால் எல்லாம் சரியாக நடக்கும்'' எனத் தெரிவித்தது பெரும் விமர்சனத்திற்குள்ளாகிக் கூட்டம் தொடர்ந்து நடத்த முடியாத அளவிற்கு அமளிதுமளிக்கு 13




## மரண அறிவித்தல்



## நடராஜா சிங்காரவேலு


தோற்றம் 08.03.1934 மறைவு 30.09.2014

(ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி முந்நாள் உடற் கல்வி ஆசிரியரும் ஓய்வுபெற்ற விளையாட்டு உத்தியோகத்தர்)

04.10.2014 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நல்லடக்கத்திற்காக இல.12, வித்தியாலயம் ஒழுங்கை, இல்லத்திலிருந்து திருக்கோணமலை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல் குடும்பத்தினர்


# அடிமைகளாக இலங்கைப் பெண்கள் - மத்திய கிழக்கில் அவலம்



மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளுக்கு வீட்டுப் பணிகளுக்கென செல்லும் இலங்கை பெண்கள், அங்கு அடிமை சேவைகளில் ஈடுபடுத்தப்படுவதாக பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள வானொலி ஒன்றின் இணையத் தளத்திற்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனை கூறியுள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமான எமது அமைப்பின் மாநாடுகள் மற்றும் சமய போதனைகளின் போது மக்களுக்கு விளக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மத்திய கிழக்கின் அடிமை 13

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுள் ஒருவரான திரு. சசிகுமார் அவர்களின் தந்தையின் மறைவையிட்டு ஆறாத்துயருற்றிருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மலைமுரசு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது


மலைமுரசு
MALAIMURASU

மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 04.10.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது



உங்கள் கையடக்கத் தொலைபேசியை மீள் நிரப்ப வேண்டுமா? செய்திகளை எமக்குச் சொல்லுங்கள் நாங்கள் மீள் நிரப்புகின்றோம் 0777 555 738


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org